Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

34°C 27°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 175 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 6, திங்கள் 20.05.2013

**உலகம்**



பக். 06

சீனாவில் 55 பேர் சாவு
கனமழையால் பெருக்கெடுக்கும் ஆறுகள்

**இந்தியா**



பக். 07

பிரதமரை மாற்றும் எண்ணம் இல்லை
காங்கிரஸ் திட்டவட்டம்

**விளையாட்டு**



பக். 22

மன்னார் பிரீமியர் லீக்
சென்.ஜோசப்பை வீழ்த்தியது ஸ்ரார்

# இனி தொடர் போராட்டம்

## காணாமற்போனோர் பற்றி உண்மையறிய நாடெங்கும் மாவட்ட ரீதியில் நடத்த முடிவு



*20 வருடங்களுக்கு மேலாக இன்னமும் காணாமற்போனார் கதிக்கும், அவர்களுக்காக நடத்தப்படும் போராட்டங்களுக்கும் இன்னும் முற்றுப்புள்ளி இல்லை.*

யாழ்ப்பாணம், மே 20
காணாமற்போனோர் பற்றிய உண்மையான விவரங்களை வெளிப்படுத்துமாறு கோரி, காணாமற்போனோரின் உறவினர்கள் நாடளாவியரீதியில் தொடர் போராட்டத்தில் குதிக்க உள்ளனர். இவ்வாறு தெரிவித்துள்ளார் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரம்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் போர்க் காலத்தில் பலர் கடத்தப்பட்டு காணாமற்போயினர். அத்துடன் போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரணடைந்த பலரின் நிலைமை இதுவரையில் என்னவென்பது தெரியாது. இவர்களது உறவினர்களை ஒன்று சேர்த்து தொடர் போராட்டங்கள் நடத்துவதன் மூலமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வை காணமுடியும்.

எனவே இலங்கையில் உள்ள மனித உரிமை அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், காணாமற்போனோர் தொடர்பான அமைப்புக்கள் என்று 50 இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள், கொழும்பு மருதானை சமூக சமய நடுநிலை மன்றத்தில் அண்மையில் ஒன்று கூடி தொடர் போராட்டத்தை முன்னெடுக்கும் முடிவை எடுத்துள்ளன. இதனடிப்படையில் ஒவ்வொரு மாதத்திலும் குறிப்பிட்ட ஒரு நாளில் ஒரே சமயத்தில் நாட்டின் சகல மாவட்டங்களிலும் காணாமற்போனோர் பற்றிய விவரங்களை வெளியிடுமாறு தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன் காணாமற்போனோர் தினம் ஒன்றை அனுஷ்டிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

காணாமற்போனோர் என்று எவரும் இலங்கையில் இல்லை என்று ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார். இதன் பின்னரே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-5)

## புறக்கணிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 20
நேற்று நள்ளிரவு முதல் மேற்கொள்ளப்படவிருந்த தனியார் பஸ்களின் புறக்கணிப்புப் போராட்டம் பிற்போடப்பட்டுள்ளது. இதனால் வழமைபோன்று இன்று தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் கட்டணத்தை 10 சத வீதத்தால் அதிகரிக்கக் கோரியே நாடளாவிய ரீதியில் இந்தப் புறக்கணிப்புப் போராட்டத்துக்கு இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் இந்தப் போராட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கைத் தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார். (ங-14-400)

## தொடரும் மிரட்டல்களால் அச்சத்தில் வழக்காளிகள்

### ஆட்கொணர்வு மனு விவகாரத்தில்

யாழ்ப்பாணம், மே 20
படையினரிடம் சரணடைந்த பின் காணாமற் போனவர்கள் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவை திரும்பப் பெறுமாறு மனுதாரர்கள் இனந்தெரியாத நபர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர் என்று காணாமற் போனோரை தேடிக் கண்டறியும் குழுவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போரின் இறுதிக் கட்டத்தில் அரச படையினரின் அறிவித்தலுக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான முன்னாள்

தொடர்ச்சி: பக்கம் 02

## எரித்திரியாவில் பிரபாகரன்

### மறுக்கிறது படைத்தரப்பு



யாழ்ப்பாணம், மே 20
பிரபாகரன் வன்னியில் இருந்து தப்பிச் சென்று எரித்திரியாவில் இருகிறார் என்ற தகவலை முற்றாக மறுக்கிறோம். பிரபாகரன் எரித்திரியாவில் இருக்கிறார் என்பது பேய்க்கதை. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 2009 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற இறுதிப்போரில் நந்திக்கடல் களப்பில் கொல்லப்பட்டு விட்டார். அதனை அவருடைய சகாக்களே உறுதிப்படுத்தி விட்டனர். இவ்வாறு தெரிவித்துள்ளார் இராணுவப்பேச்சாளர் ருவான் வணிகசூரிய.

பிரபாகரன் கொல்லப்பட்ட விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. வெளிநாட்டில் இருக்கின்ற புலிகளின் ஆதரவாளர்கள் மற்றும் அவர்களுக்கு உதவி ஒத்தாசை நல்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரிவினை வாதத்துக்கு நிதி சேகரிப்பதற்காகவே இவ்வாறான பேய்க் கதையை பரப்பிவிட்டுள்ளனர் என்றும் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

## அத்திபாரம் தமிழரசுக் கட்சி ஏனையவற்றுக்கும் சம உரிமை

### கூட்டமைப்பு பற்றி மாவை விளக்கம்



யாழ்ப்பாணம், மே 20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அத்திபாரமாக தமிழரசுக் கட்சி செயற்பட்டு அதில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் சம உரிமை வழங்கி ஒன்றிணைத்து தமிழர் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

யாழ். வளைவு திறப்பு நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு மல்லாகத்தில் நடைபெற்றபோது, தமிழரசுக் கட்சி கூட்டணியில் பிரதான பங்கேற்று செயற்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே போன்று இப்போது கூட்டமைப்பிலும் அத்திபாரமாக உள்ள தமிழரசுக்கட்சி ஏனைய கட்சிகளுக்கு சம நிலை வழங்கி அவற்றை அரவணைத்துச் சென்று தமிழர் போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கும். தமிழரசுக் கட்சி எப்போதும் கூட்டமைப்பிலேயே இருக்கும். 1970 இல் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாகராசா என்பவர் யாழ். நகர முதல்வராக இருந்த போது கட்டப்பட்ட யாழ். வளைவு மீண்டும் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நல்லூர் பிரதேசசபை மூலம் திறக்கப்பட்டுள்ளது - என்றார். (ங-4)

## காணி, பொலிஸ் அதிகாரம் மாகாண சபைக்கு அவசியம்

### மல்வத்த பீடாதிபதி கருத்து

யாழ்ப்பாணம், மே 20
மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவது அவசியம் என்று தெரிவித்துள்ளார் மல்வத்த பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர். அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று மல்வத்த பீடாதிபதியைச் சந்தித்து ஆசிபெற்றார். இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே ஸ்ரீ சுமங்கல தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

''மாகாண சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது பிரச்சினைக்குரிய விடயமல்ல. தேர்தலை இலக்கு வைத்து அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரக் கூடாது. முழு அரசமைப்பிலும் மறுசீரமைப்பொன்று அவசியம்'' என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பிலும் அமைச்சரிடம் மல்வத்த பீடாதிபதி கேட்டறிந்து கொண்டார்.

வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைகளில் பொலிஸ், காணி அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும் என்ற கருத்து பேரினவாத அமைப்புகளிடையே மேலோங்கி வருகின்ற நிலையில், அதற்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் மல்வத்த பீடாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்விவகாரங்களில் வெளியார் தலையிட அனுமதிக்க முடியாது

## பாதுகாப்புச் செயலர் சீற்றம்


கொழும்பு, மே 20
உள்நாட்டு பாதுகாப்பு விவகாரங்களில் புறச் சக்திகள் தலையீடு செய்வதற்கு அனுமதிக்க முடியாதென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷித், அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் தொலைபேசியில் உரையாடினார். இதன்போது, வடக்கில் காணி சுவீகரிப்பு மற்றும் படைக்குவிப்பு தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.
இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் பீரிஸை சந்தித்து விளக்கம் கேட்ட பின்னர் பாதுகாப்புச் செயலர் குர்ஸித் கூறியதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை எனத் தெரிவித்துள்ளார்.
பலாலி, காங்கேசன்துறை பகுதிகளில் காணி சுவீகரிப்பு தொடர்பில் இந்தியா கேள்வி எழுப்பவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ங)

# பாடசாலை மாணவி வன்புணர்வு நெடுங்கேணியில் ஆர்ப்பாட்டம்

மாங்குளம், மே 20
பாடசாலை மாணவியை வன்புணர்வுக்குட்படுத்திய நபரைக் உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தக் கோரி நெடுங்கேணயில் இன்று ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்படவுள்ளது.
பெற்றோர்கள், பொதுஅமைப்புக்கள், ஆசிரியர்கள், மாணவர்களென பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.
நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நெடுங்கேணி பிரதான வீதியூடாக நெடுங்கேணி பிரதேச செயலகத்தை சென்றடையவுள்ளது. இறுதியில் சம்பந்தப்பட்டவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரி மனுவொன்று நெடுங்கேணி வடக்கு பிரதேச செயலரிடம் கையளிக்கப்படும்.
சேனைப்புலம் மக்களும், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டம் பேரணியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.
பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் தமது திணைக்களத் தலைவர்களின் அனுமதியைப் பெற்று இந்த ஆர்பாட்டப் பேரணியில் பங்குபற்றுமாறு இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கேட்டுள்ளார். கடந்த 14ஆம் திகதி குறித்த மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில்பற்றை ஒன்றுக்குள் இருந்து பொதுமக்களால் மீட்கப்பட்டார். (ங-16-422)

# மாகாண அதிகாரங்களில் கை வைக்க வேண்டாம்

## இலங்கையை எச்சரிக்கிறது இந்தியா





கொழும்பு, மே 20
மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை குறைப்பதற்கான எந்த நடவடிக்கையையும் இலங்கை மேற்கொள்ளக் கூடாதென இந்தியா எச்சரித்துள்ளது.
வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை நேற்றுமுன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித். இதன்போதே இவ்வாறு கூறியுள்ளார்.
மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக, மாகாணசபைகளின் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிக்க இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளியான ஊடகத் தகவல்கள் குறித்து, ஜி.எல்.பீரிஸிடம் சல்மான் குர்ஷித் கவலை வெளியிட்டுள்ளார்.
13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் கடப்பாட்டுக்கு முரணான எந்த நடவடிக்கையிலும் இலங்கை அரசாங்கம் ஈடுபடக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.
அத்துடன் வடக்கில் இலங்கை இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயத்துக்கென பொது மக்களின் காணிகள் பறிக்கப்படுவதற்கும் சல்மான் குர்ஷித் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.
இது நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு முற்றிலும், முரணானது என்றும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றும் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளதாக புதுடெல்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங-16)

# கைதான கஜேந்திரன் விடுதலை

யாழ்ப்பாணம், மே 20
மன்னாரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ.கஜேந்திரன், சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட ஆதரவாளர்கள் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.
''நாம் வெற்றி விழா கொண்டாடும் நாளில் எதற்காக நீங்கள் நினைவு அஞ்சலி செலுத்துகிறீர்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 18 இல் தான் இறந்தார் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? என்று பொலிஸாரும் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸாரும் தம்மைக் கேட்டு அறிக்கை கோரியதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் தெரிவித்தார். (ங-4)

## தொடரும் மிரட்டல்களால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகள் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி இராணுவத்தினிடம் சரணடைந்திருந்தனர். இதன் பின்னர் சரணடைந்தவர்கள் அவர்களது உறவினர்களின் கண்ணெதிரே படையினரால் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர். எனினும் அதன் பின்னர் அவர்களது நிலை என்னவென்று தெரியா நிலையில் அவர்களது உறவினர்கள் உள்ளனர். இந்த நிலையில் சரணடைந்து காணாமல் போனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளவர்களில் ஐந்து பேர் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் ஆட்கொணர்வு மனுக்களை கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இதனையடுத்து, முல்லைத்தீவில் உள்ள 58 ஆம் படைப் பிரிவின் தலைமை அதிகாரியையும், இராணுவ தளபதியையும் இன்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகி இது தொடர்பில் சாட்சியமளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
இந்த நிலையில் வழக்கைத் திரும்பப் பெறுமாறு அதனைத் தாக்கல் செய்தவர்களுக்கு, தொலைபேசியூடாகவும், நேரிலும் சீருடையினர் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். இதன் காரணமாக அவர்கள் வழக்கை தொடர்ந்து நடத்துவது குறித்து அச்சம் அடைந்துள்ளனர்.
ஆயினும் குறித்த வழக்கில், வழக்கை தாக்கல் செய்தவர்களை தமது அமைப்பினர் பாதுகாப்பாக அழைத்து வந்து நீதிமன்றில் இன்று முற்படுத்துவர் என்று காணாமல் போனோரை தேடிக் கண்டறியும் குழு தெரிவித்துள்ளது. (ங-5)

## புலம்பெயர் நாடுகளில் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகள்....



லண்டனில்....





டென்மார்க்கில்....







கனடாவில்....





பெல்ஜியத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தனது கையால் தன் கண்ணையே குத்திக்கொள்ளுமா இந்திய அரசு?

வடக்கு மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்த பின்னர்,அது செயல் உருப்பெறும் என்ற நம்பிக்கை அனேகமாக எல்லா வட்டாரங்களிலும் துளிர்த்துள்ளது. ஆனாலும் ஒன்று, அதுவும் இடறுப்படும் என்ற சந்தேகமும் பலத்து வருகிறது!

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் (13+) பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை, பற்களைப் பிடுங்குவது போன்று 'தகர்த்து' எறிந்துவிட வேண்டும் என்று மஹிந்த அரசில் அங்கம் வகிக்கும் இனவாதக் கட்சிகள் இரண்டும் அவற்றின் அமைச்சர்கள் இருவரும் வெளியே உள்ள சக்திகள் பலவும் அழுங்குப் பிடியாக நிற்கின்றன.

இவர்கள் இருவரையும் ஏனைய பல கடும்போக்காளர்களையும் அரசுத் தலைமையே மறைமுகமாகத் தூண்டிவிட்டு நாடகம் ஆடுவதாக அரசியல் மற்றும் அரசு வட்டாரங்களில் வீச்சாகப் பேச்சடிபடுகிறது.

எப்படியோ–

1987 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள மாகாண சபைகளுக்கு உரிய பிரதானமான இரண்டு அதிகாரங்களைப் பிடுங்கி எடுத்தால், அவை வெற்றுப் பொம்மைகளாக மாறிவிடும்.

ராஜீவ்– ஜே.ஆர் ஒப்பந்தத்தின் ஊடு பிறந்ததே பதின்மூன்றாவது திருத்தம். அதனால், அந்தத் திருத்தம் ஊறுபடாமல் இருப்பதனை உறுதி செய்யும் பொறுப்பு இந்திய அரசுக்கு உண்டு.

அது கருதி, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளிடம் இருந்து பிடுங்கி எடுக்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிட வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், இந்தநாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸைத் தொடர்பு கொண்டு வலியுறுத்தி உள்ளார்.

மாகாண சபைகளின் பிரதான அதிகாரங்களாகத் தமிழர்களால் கருதப்படும் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறித்துவிட்டால் மாகாண ஆட்சி வெறும் முருக்கம் செத்தல் ஆகிவிடும்.

சுயாட்சி கோரிய தமிழ் மக்களுக்கு, (அப்போதைய) இந்திய அரசும், ஜே.ஆர். அரசும் கூட்டுச் சேர்ந்து கிள்ளித் தெளித்த உப்பற்ற பாற்கஞ்சியே பதின்மூன்றாவது திருத்தம். அதில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்களைப் பறித்துவிட்டால், மாகாண சபையினால் எந்தவித பயனும் இருக்காது. மத்திய அரசினால் சுழற்றப்படும் பம்பரமாகிக் கீழே விழ வேண்டியதுதான்!

கொழும்பு அரசிடம் உள்ள அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிப்பது என்ற இலக்கைக் கொண்டு உருவாக்கப்பட்டதே பதின்மூன்றாவது திருத்தம்– மாகாண சபைச் சட்டம்.

அவ்வாறிருக்க அவற்றைக் கொழும்பு அரசு பிடுங்கி எடுப்பது என்பது அதிகாரச் சூழ்ச்சி அன்றி வேறல்ல.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியும் மற்றும் தெற்கின் இனவாத அமைப்புக்களும் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுங்கி விடுவதற்கு முனைந்து செயற்படுகின்றன.

அனேகமாக, இந்தியாவையும்– அந்நாட்டு அரசையும்– ஏய்க்காட்டி விட்டு, தாம் நினைத்த காரியத்தை தெற்கின் இனவாதத் தரப்புகள் சாதிக்கக் கூடிய சாத்தியம் மிக அதிகம்.

இந்திய வெளியுறவு அமைச்சர், இலங்கை அமைச்சருடன் தொலைபேசி மூலம் உரையாடினால் போதாது.

இந்தியாவின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தை மாற்றக் கூடாது, வெறிதாக்கக் கூடாது என்று ராஜீகத் தொனியில் கூறினால் மட்டும் போதாது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது கொண்டு வரப்பட்ட கண்டனப் பிரேரணையை ஆதரிப்பதில் ஒளித்துப் பிடித்து விளையாடியது போன்று,–

பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடத்த வேண்டும் என்பதில் உறுதியாக நின்று இலங்கை அரசுக்கு முண்டு கொடுத்தது போன்று–

தானும் ஒரு பங்காளனாக இருந்து நிறைவேற்றிய அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை இலங்கை அரசு துடைத்தெறிய இந்தியா கைகொடுக்கும் என்ற கருத்தே, தமிழ் மக்கள் மனங்களில் எழுந்துள்ளது.

பதின்மூன்றாவது திருத்தத்தை இலங்கை அரசு எக்காரணம் கொண்டும் வலுவற்றதாக்குவதற்கு இந்தியா, அதன் அரசு இடமளிக்கக் கூடாது; அவ்வாறு செய்யின் தனது கண்களை சொந்தக் கைகளால் பிறாண்டுவதற்குச் சமன் என்பதனை அது மனதார உணர வேண்டும்.

அவ்வாறன்றி அயல் நாடான இலங்கையுடன், அந்த நாட்டு அரசுடன் முரண்படக் கூடாது; இருநாட்டு உறவுகளை (Bilateral Relations) முறித்துக் கொள்ளக் கூடாது என்ற 'சித்தாந்தங்களை' முன்னிறுத்திச் செயற்பட முனையுமா என்பன போன்ற சந்தேகங்களும் எழுகின்றன.

அவற்றைக் களைவதற்கு இந்தியா, அதன் ஆட்சியாளர்கள் முனைவார்களா என்பதனை அவர்களே பற்றுறுதியுடன் முடிவு செய்ய வேண்டும். பொறுத்திருந்து பார்ப்போமே....!

# விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுவோம்

## வரவேற்பு வளைவு திறப்பு விழாவில் மாவை

யாழ்ப்பாணம், மே 20

விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க அனைவரையும் ஒன்றிணைத்துச் செயற்படுவோம். எமது இனம் விடுதலைப் போராட்டத்தில் தோற்றுப் போனதல்ல. நாம் துணிந்து போராட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா. ஏ–9 வீதி செம்மணியில் மீள அமைக்கப்பட்ட யாழ்.வளைவின் திறப்பு விழா நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:–

அரசு தனது அடியாள்களைப் பயன்படுத்தி அரசின் சார்பில் அரச ஊழியர்களும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்து கூட்டமைப்பு வசமுள்ள சபைகளை முடக்கி விடுவதற்கு தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

மக்கள் ஆணைக்கு எதிராக ஜனநாயக விழுமியங்களுக்கு மாறாக சர்வாதிகாரமாக இந்த அரசு இதனை முன்னெடுக்கிறது.

உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுவதற்கு பல வகையிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு மக்களின் ஜனநாயகப் பண்புகளைக் கொண்டு அந்தந்தப் பிரதேச சபைக்கான தலைமைத்துவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைக்கு மக்கள் வழங்கியிருக்கிறார்கள்.

அவர்களை மதிக்காது அடக்கி ஒடுக்கி ஆளவேண்டும் என்ற நோக்கில் அரசு செயற்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாத சில அதிகாரங்கள் உள்ளூராட்சி சபைகள் அதன் தலைவர்களுக்கு உள்ளது. இவற்றுக்கு மதிப்புக் கொடுக்காது சபைகளை மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நிராகரித்து சர்வாதிகாரப் போக்கை அரசு எம்மீது திணிக்கின்றது.

இவற்றுக்கெல்லாம் இடமளிக்க மாட்டோம் என்று சபைத் தலைவர்கள் துணிச்சலாக தீவிரமாகச் செயற்படுவது பாராட்டப்பட வேண்டியது.

சபைகள் தமது ஆணையையும், தலைமைத்துவத்தையும் திடகாத்திரமாகக் கொண்டு நடத்த வேண்டும். யாழ்ப்பாணத்தின் தலைநகரம் நல்லூரே. விடுதலை வித்தாக இருக்கும் சங்கிலி மன்னனின் போராட்டத்தை இந்த வாயில் நினைவுபடுத்துவதாக உள்ளது. – என்றார். (ம–4–7–51)

> “சபைகளை மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நிராகரித்து சர்வாதிகாரப் போக்கை எம்மீது திணிக்கின்றது.

(திறப்பு விழா படமும் செய்தியும் 05ஆம் பக்கத்தில்)

## பட்டதாரிப் பயிலுநர்கள்

# 3 ஆண்டு சேவைக்குப் பின் விரும்பிய இடம் மாற முடியும்

கொழும்பு, மே 20

தற்போது அரச சேவையில் உள்வாங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் 3 ஆண்டு சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர் தாம் விரும்பிய இடத்துக்கும் விரும்பிய சேவை நிலையத்துக்கும் இடமாற்றம் பெற முடியும்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டீ.பி. அபேயக்கோன் இவ்வாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 50 ஆயிரத்து 821 பட்டதாரிப் பயிலுநர்கள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்

இவர்கள் தற்போது இலங்கை நிர்வாக சேவை, இலங்கையின் வெளிநாட்டுச் சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆகியவற்றில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் இவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். தமது மூன்றாண்டு சேவைக் காலத்தை அவர்கள் பூர்த்தி செய்த பின்னர் தாம் விரும்பிய திணைக்களத்துக்கும் பிரதேசத்துக்கும் இடமாற்றம் பெற முடியும்– என்றார். (ம–5–22)

# இந்திய நிறுவனங்கள் இலங்கையில் பல 100 கோடி ரூபா நிதி முதலீடு

கொழும்பு, மே 20

பல இந்திய நிறுவனங்கள் பல 100 கோடி ரூபாவை இலங்கையில் முதலீடு செய்துள்ளன என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:–

கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் 100 கோடியை இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. 2012 ஆம் ஆண்டு மட்டும் 16 கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளில் 200 கோடி மதிப்பிலான முதலீடுகள் செய்வதற்கு இந்திய நிறுவனங்கள் பல திட்டமிட்டுள்ளன. தெற்கு ஆசியப் பிராந்தியத்தில் முக்கிய வர்த்தக நாடாக இலங்கை விளங்குகின்றது. மொத்த வர்த்தகத்தில் 4.5 சதவீதத்தை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றது.

இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள் பல இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டி வருகின்றன– என்றார். (ம– 400)

# உள்ளூர் அபிவிருத்தி குறித்து விளக்கம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 20

ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி திட்டம் தொடர்பாக வடமாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் விளக்கம் தரவேண்டும்.

பல லட்சம் ரூபா செலவில் வடக்கில் மூன்று சபைகளில் முன்னெடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இதற்காக வழங்கப்பட்ட உபகரணங்களும் பயன்பாடு இன்றி உள்ளன.

வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கில் 34 உள்ளூராட்சி சபைகளில் 3 சபைகளுக்குமட்டும் முன்னோடி திட்டமாக ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி திட்டம் கொண்டு வரப்பட்டது.

இதில் பருத்தித்துறை, வேலணை, சுழிபுரம் ஆகிய மூன்று சபைகளும் பிரதேச செயலகங்களும் இணைந்த வகையில் சமூக, பொருளாதார [illegible] வெளியிடப்பட்டது.

அத்துடன் ஒவ்வொரு சபையும் ஏனைய திணைக்களங்களும் இணைந்த வகையில் பிரச்சினைகளை முன்னுரிமைப்படுத்தி திட்டங்களை முன்வைத்த நிலையில் கைவிடப்பட்டுள்ளன.

இதற்காக ஜிஐஇசற் நிறுவன நிபுணத்துவ ஆலோசகர் வோட்டர் கெலர் பல மில்லியன் ரூபாவை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக செலவு செய்துள்ளதாக அறிக்கையிட்டுள்ளார்.

இந்த நிலையில் இதற்கான பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர் தற்போது பயிற்சி இன்றி உள்ளதுடன் திட்டங்களும் கைவிடப்பட்டுள்ளன.

சில இடங்களில் இந்தத் திட்டம் வலுவில் உள்ளது. எனவே மீளவும் இந்தத் திட்டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டிய பொறுப்பு வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரையே சாரும்.

எனவே, இதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் தொடர்பில் கூடுதல் கவனம் எடுத்து மீளவும் இந்தத் திட்டத்தை நகர்த்தி முடிவுறுத்தி முன்னோடித் திட்டத்துக்கு வலுச்சேர்த்து உதவுமாறு கேட்டுள்ளார். (ம–50)

# மாங்குளம் முதல் பரந்தன் வரை வெசாக் வலயமாக்க முடிவு

கொழும்பு,மே 20


எதிர்வரும் வெசாக் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மாங்குளம் நகரில் இருந்து பரந்தன் நகர் வரையிலான 35 கிலோமீற்றர் தூரத்தை வெசாக் வலயமாக கிளிநொச்சிப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பாதுகாப்புப் பிரிவுகளின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அசோக மன்னனின் வாழ்க்கைச் சரித்திரத்தைக் கருப்பொருளாகக் கொண்டு 38 அடிகள் உயரத்தில் 42 அடிகள் அகலத்தில் 30 ஆயிரம் மின் குமிழ்கள் உள்ளடக்கும் விதமாக நவீன தொழில்நுட்பத்துடன் கிளி நொச்சி மத்திய கல்லூரியின் விளையாட்டுத் திடலில் நிர்மாணிப்பட்டு வரும்வெசாக் கூடு எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையிலான ஏழு தினங்களுக்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை மாங்குளத்தில் இருந்து பரந்தன் வரையிலான 35 கி.மீற்றர் தூரத்துக்கு வீதியின் இரு புறங்களிலும் பௌத்தக் கொடிகள் மற்றும் வெசாக் கூடுகளால் அலங்கரிப்பதற்கு பாதுகாப்புப் பிரிவுகள் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன. (ம–22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான நகரங்களுக்கு சி.சி.ரி.வி. கமராக்கள்



## தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, மே 20

நாட்டின் பிரதான நகரங்களில் சி.சி.ரி.வி. கமராக்களை பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் வலயக் கல்வி அலுவலகத்தில் தொழில்நுட்பப் பூங்காவினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பிரதான நகரங்களின் முக்கிய இடங்களில் இவை பொருத்தப்படவுள்ளன.

ஏற்கனவே கொழும்பின் பல வேறு பகுதிகளில் சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் வெகுவிரைவில் ஏனைய நகரங்களிலும் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்- என்றார். (ஙு-16)


| உடன் தேவை | ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு, கால்பேட், புறொயிலர் உடன் கொள்முதல் செய்யப்படும். 154/4, தாசன் பாம் கோயில் விதி, யாழ்ப்பாணம். |
|---|---|


# மரண அறிவித்தல்கள்



## திருமதி குருநாதபிள்ளை செல்லம்மா

வவுனியா சாளம்பனையைப் பிறப்பிடம்ாகவும் கல்மடுவை வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதபிள்ளை செல்லம்மா நேற்று (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கமலாதேவி, காலஞ்சென்ற நாகராசா மற்றும் மனோரஞ்சிதம், சரஸ்வதி, சண்முகராசா, மகேந்திரராசா ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்மடு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Unit I, கல்மடு. (சி/9495) விஜயராசா (கண்ணன்) பேரப்பிள்ளை - லண்டன்)



## சாந்தலிங்கம் பரம்பொருள்

*(போதனாசிரியர், அரச இயந்திர மரவேலைப் பயிற்சிப் பாடசாலை, தொழில்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்)*

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், சிவன் கோயில் வீதி, சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் பரம்பொருள் நேற்று (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், கேணியடி வீதி, மீசாலையைச் சேர்ந்த முத்து. காலஞ்சென்ற அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சோமகலாவல்லியின் (சிறீ) பாசமிகு கணவரும், ரோஷநாத் (அலுவலக உதவியாளர், கொமர்ஷல் வங்கி, கிளிநொச்சி), சாகித்தியன் (மாணவன், புனித பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுசியா, அஞ்சலிதேவி, திருவருள், அருணகிரி, அன்பரசி, சிவனேசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சோதிலிங்கம், சிவராசா, நளினி, கௌசல்யா, ஸ்ராலின், செல்வரட்ணேஸ்வரி, ஜெயகோவிந்தமலர், சாரதபவானி, சிவசோதி, பகிரதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தவராசா, சுந்தரலிங்கம், உமாதேவி ஆகியோரின் உடன் பிறாவாச் சகோதரரும், தவராசாவின் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்) பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப 12.30 மணியளவில் வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.18, சிவன்கோயில் வீதி,
சாவகச்சேரி. (36710)

தகவல்: குடும்பத்தினர்.
T.P- 0776390533

## செல்லையா நாகலிங்கம்

*(முன்னாள் காசாளர் மகாராஜா நிறுவனம்)*



மூளாயைப் பிறப்படமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நாகலிங்கம் கடந்த (17.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கந்தையா, காலஞ்சென்ற நடராசா, கிருஸ்ணபிள்ளை, இராசாத்தி, காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், தவமணிதேவி, காலஞ்சென்ற சிவநாயகம், முருகேசு ஆகியோரின் மைத்துனரும், கைலநாயகி, செல்வநாயகி, சுந்தரலிங்கம்(சுவிஸ்), லோகநாயகி(கனடா), காலஞ்சென்ற ஜெயலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாலிங்கம், சுகுணரஞ்சன், ரவிகுமாரி (சுவிஸ்), தேவராஜன்(கனடா), ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற மணிவண்ணன், திலீபன், மயூரி, டினோஷா, ரதீசன், டயானி, சதீஸ், சுகிர்தன்(சுவிஸ்), சுகிந்தன் (சுவி ஸ்), விதுர்ஷன் (கனடா), தேருகா(கனடா), கிஷோர்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.05.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு, சுழிபுரம்.
077 8543696
021 4915140

தகவல்:
குடும்பத்தினர்.


# பத்திரிகை மடிப்பதற்கு ஆள்கள் தேவை

**ஆர்வமுள்ளவர்கள் இன்றும், நாளையும் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை அலுவலகத்துக்கு நேரில் வரவும்.**

மனிதவள முகாமையாளர்:
**உதயன் பணிமனை
361. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**


## காணவில்லை

ஒரு வயது பசுக்கன்று ஒன்று பிறவுண்நிறம் யாழ். பெருமாள் கோயிலடியில் 02 மீற்றர் நீளக் கயிற்றுடன் காணவில்லை தயவு செய்து கண்ட வர்கள் தகவல் தரவும்.
தொலைபேசி:
021 4911529
077 0711388


## ரெட்லேடி பப்பாசி மிகவும் குறைந்த விலையில்

அனைத்து வகையான பழமரங்கள், அலங்காரத்தாவரங்கள், இளையவளர்பு வாழைக்குட் டிகள் (கப்பல், கலண்டிஸ், செவ்வாழை), சிமெந் துச் சாடிகள், பிளாஸ்ரிக் சாடிகள், இயற்கை உரம், மரக்கறிவிதைகள் என் பவற்றை மலிவாக மொத்த மாகவும், சில்லறையாகவும், பெற்றுக் கொள்ளலாம் .

ரெட்லேடி பப்பாசி செய்கை யினை ஊக்கு விக்க மிகக்குறைந்த விலையில் பப்பாசிக் கன்று களை வழங்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பவிசாரு பூங்கனிச் சோலை.
311/1, பலாலி விதி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.
face book: pavesharu poonganishsoolai.

தொடர்புகொள்ள:-
021 2228199
071 8475629
077 3976203


# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில் நீண்ட காலமாகக் கடமையாற்றிய

**சாந்தலிங்கம் பரம்பொருள்**
(மரவேலைப்போதனாசிரியர்)

அவர்களின் மறைவினால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட செயலகம்.
யாழ்ப்பாணம்.

மாவட்ட அலுவலரும், உத்தியோகத்தர்களும்,
தொழிற்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

# 45ஆம் நாள் வீட்டுக் கிருத்தியஅழைப்பு

*அமரர் திருமதி சுப்பையா சிவபூஷணம் (புனிதம்)*



பிறப்பு 25.12.1944
இறப்பு 08.04.2013

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் (22.05.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் எமது அன்புத் தாயின் பெயரினால் அன்போடு அழைக்கின்றோம்.

தகவல்:
கணவர்- செ.சுப்பையா
பிள்ளைகள்-
சு.கனகசெந்தில்நாதன் (பிரான்ஸ்),
சு.கனேசராஜன் (ஆரணி வைத்தியசாலை, திருவையாறு, கிளிநொச்சி)
சு.கனகேஸ்வரி (நிலா- பிரான்ஸ்)
சு.குணசேகரம் (இளங்கோ புடவையகம், பரந்தன்)
சு.உதயகுமார் (சாந்தி, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி)
சு.பிரபா (செல்வாநகர், கிளிநொச்சி)
சு.நகுலன் (உரிமையாளர், சிற்றி மெடிக்கல் சென்ரர், கிளிநொச்சி)

6ஆம் வாய்க்கால்,
அழகாபுரி?
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். நகரின் பிரதான வீதியில் வாகன நெரிசல்களுக்கு மத்தியிலும் பாடசாலைச் சிறுமியை அவரது உறவினர் சைக்கிளில் ஒய்யாரமாக ஏற்றிச் செல்கிறார்.

# தீவகத்துக்கு 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு; 36 திட்டங்கள் இந்த ஆண்டு நிறைவேறும்

யாழ்ப்பாணம், மே 20

தீவகத்தில் உள்ள மூன்று பிரதேச சபைகளுக்கும் ஏற்கனவே தெரிவித்தமைக்கு அமைய 300 மில்லியன் ரூபா நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கியுள்ளது.

இதனால் நெடுந்தீவு - வேலணை - ஊர்காவற்றுறை ஆகிய 3 பிரதேச சபைகளுக்குட்பட்ட 36 திட்டங்கள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படவுள்ளன.

பிரதேச சபைத் தலைவர்களான டானியல் றெக்சியன், சி.சிவராசா, ம.ஜெயகாந்தன் ஆகியோர் துரித அபிவிருத்திக்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

> “ நெடுந்தீவு – வேலணை – ஊர் காவற்றுறை ஆகிய 3 பிரதேச சபை களுக்குட்பட்ட 36 திட்டங்கள் இந்த ஆண்டு நிறை வேற்றப்படவுள்ளன.

கடந்த வருடம் யாழ். நகருக்கு வருகை தந்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் தீவகத்தில் உள்ள மூன்று பிரதேச சபைகளுக்கும் தலா நூறு மில்லியன் ரூபா வீதம் 300 மில்லியன் ரூபாவை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

இதனடிப்படையில் ஒவ்வொரு பிரதேச சபையின் தலைவர், செயலாளர் இணைந்து மக்கள் நல திட்டங்களை முன்னெடுத்து கருத்திட்டங்களை இனம் கண்டனர்.

இவ்வாறு இனம் கண்ட கருத்திட்டங்களே தற்போது நிதி கிடைக்கப் பெற்ற நிலையில் அபிவிருத்திகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை, வடக்கில் உள்ள ஏனைய பிரதேச சபைகளின் தலைவர்களும் தமது சபைகளுக்கும் 100 மில்லியன் ரூபா ஒதுக்கித் தருமாறு கோரிய போதிலும் ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-50)

## மிகவும் மோசமான நிலையில் எழுவைதீவு இறங்குதுறை

யாழ்ப்பாணம், மே 20

எழுவைதீவு இறங்குதுறை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தில் படகுகளை நிறுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் உடனடியாக பாலத்தைப் புனரமைக்க வீதி அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பகுதி மக்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

358 குடும்பங்கள் தானே இதற்கு 50 மில்லியன் ரூபா செலவு செய்வதா என்று வீதி அபிவிருத்தித் திணைக்களம் எண்ணுகின்றதோ எனவும் எழுவைதீவு மக்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பாலத்தைப் புனரமைக்க 50 மில்லியன் ரூபா செலவாகும் என்று வீதி அபிவிருத்தித் திணைக்களம் மதிப்பீடு செய்துள்ளது.

பாலத்தின் புனரமைப்பு தொடர்பாக தீவக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் வலியுறுத்தி வந்த போதும் அந்தப் பால வேலை குறித்து அதிகாரிகள் இன்னமும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-7)

# யாழ். வளைவு திறந்து வைப்பு




யாழ்ப்பாணம், மே 20

செம்மணி வீதியில் உள்ள யாழ்ப்பாணம் வரவேற்கிறது வளைவு திறப்பு விழா நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனதிராசா நாடாவை வெட்டி வளைவைத் திறந்து வைத்தார். நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்து வைத்தார். பெயர் பலகையை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் திரை நீக்கம் செய்தார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன் உட்பட தமிழரசுக் கட்சியின் உப செயலாளர் சி.வீ.கே. சிவஞானம், யாழ்.மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், நல்லூர் பிரதேச சபை உப - தலைவர் திருமதி கோமதி ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் யாழ்.மாநகரசபை உறுப்பினர் இ.இராஜதேவன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், நல்லூர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். (ம-4-7-51-17)

## எழுவைதீவு மீனவர்கள் கூறு விலைக்கு மீன் வழங்கலாம்

யாழ்ப்பாணம், மே 20


எழுவை தீவில் மீன் வியாபாரிகள் மீனவர்களிடமிருந்து கூறு விலையில் அவற்றைக் கொள்வனவு செய்யக்கூடியதாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மீனவர்களிடம் இருந்து வியாபாரிகள் மிகவும் குறைந்த விலையில் மீன்களை எடுத்துக்கொள்வதாகவும் இதனால் மீனவர்கள் நியாயமான விலையைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாகவும் கூறப்பட்டது.

மீனவர்கள் தாம் பிடிக்கும் மீன்களுக்குரிய விலையை நியாயமாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக கூறுவிலையில் மீன்களை விற்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகள் அங்கு சென்று தமக்கான மீன்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவத்தார். (ம-7)



# சங்கானை குடியிருப்பு காணியை பங்கிட 14 தடவைகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 20

சங்கானை மத்தியில் உள்ள குடியேற்ற காணியை பங்கீடு செய்து தருமாறு 14 தடவைகள் கோரிவிட்டோம்.

இதுவரை வலி.மேற்கு பிரதேச சபை இந்தக் காணிகளுக்கான உறுதியை வழங்குவது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வலி.மேற்கு பிரதேச செயலர் காணியை வழங்குமாறு கடந்த 3 வருடங்களாக கோரி வருகின்றார். ஆனால் பயன் எதுவும் இல்லை.

இவ்வாறு சங்கானை அம்பாள் சனசமூக நிலையத்தினர் கவலை தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வலி.மேற்கில் சுகாதாரத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் நாம் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றோம்.

காணியை நில அளவை செய்து காணிகளை பிரித்து தருவதாக கடந்த 3 வருடமாக கூறிக் காலம் கழிந்துவிட்டது.

இந்த விடயமாக நாம் யாரிடம் செல்வது என்று தெரியாமல் உள்ளோம். சபை வந்து 2 வருடங்கள் கழிந்துவிட்டன. காணி கிடைக்கும் என்ற நிலை மாறிவிட்டது.

ஜனாதிபதியின் சுற்றறிக்கையின் கீழ் எமக்கான காணி வழங்குவது தொடர்பில் போதிய கருத்தியல் வாதம் உண்டு.

இவ்வாறான நேரங்களிலும் எமக்கான காணிகள் உறுதியற்று உள்ளது.

இதனால் நேர்ப் திட்டத்தின்கீழ் வீடுகள் கிடையாமல் போனது. தற்போது இந்தியன் வீட்டுத் திட்டமும் இல்லாது போகின்றது.

இவ்வாறு நாம் காணி உரிமையும் பங்கீடு இன்றி வாழ்ந்து வருகின்றோம் என்று கூறினர். (ம)

# சுன்னாகம் மின்நிலையத்தில் வெளியேறும் புகையால் சிரமம்

## சுவாச நோய் ஏற்படுவதாக மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 20

சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து வெளியேறும் புகையால் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பெரிய மின்பிறப்பாக்கிகள் மூலம் குடாநாட்டுக்கான மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதிலிருந்து வெளியேறும் புகை சுமார் 80 அடிக்கு மேற்பட்ட உயரத்தில் வெளியேற்றப்படுகின்றது.

இருப்பினும் அந்தப் பகுதி மக்கள் பாதிப்புக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சுவாச நோய்களும் ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் பிரதம பொறியியலாளர் அமீன் உபீன் தெரிவிக்கையில்,

''மின் பிறப்பாக்கிகளுள் தரமான உற்பத்திப் பொருள்களையே இங்கு உபயோகித்துள்ளோம்.


இது குடாநாட்டு மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். தொடர்ச்சியாக உபயோகிக்காமல் திடீரென மின்பிறப்பாக்கிகளை உபயோகிக்கும் போதே இவ்வாறான கரித்துகள்கள் வெளியேறும்.

ஆனால் இங்கு இருப்பது 24 மணிநேரமும் 365 நாள்களும் செயற்படுகின்றது. எமது செயற்பாட்டுக்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்''- என்றார். (ம-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் 55 பேர் சாவு

## கனமழையால் பெருக்கெடுக்கும் ஆறுகள்



பீஜிங், மே.20

சீனாவில் 100 ஆண்டு களில் இல்லாதளவுக்கு கன மழை யால் ஆறுகள் பெருக் கெடுத்து ஓடுவதால் இதுவரை 55 பேர் பரிதாப மாக இறந்துள்ளனர். பலர் காணாமல் போயுள் ளனர். போர்க் கால அடிப் படையில் மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

சீனாவின் தென் பகுதிகளில் சில தினங்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. பல குடியி ருப்புகள் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. இதனால் பொது மக்கள் வெளியில் செல்ல முடியாமல் தவிக்கின்றனர். கன மழையில் இதுவரை மூழ் கியும், நிலச் சரிவு இடிபாடு களில் சிக்கியும் 55 பேர் இறந்துள்ளனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள. நிலச் சரிவில் சிக்கி மேலும் பலர் இறந்திருக்கலாம் என்று அஞ் சப்படுகிறது.

ஆறுகளில் வரலாறு காணாத வெள்ளம் ஓடுகிறது. சீனாவின் தென் பகுதிகளில் சில நாள் களாக கன மழை பெய்து வரு கிறது. இதனால் பல இடங் களில் நிலச்சரிவு ஏற்பட்டுள் ளது. பல குடியிருப்புகள் வெள் ளத்தில் மூழ்கிவிட்டன. இதனால் பொதுமக்கள் வெளியில் செல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

> “ஆறுகளில் அபாய கட்டத்தையும் மேவி வெள்ளம் ஓடுவதாக எச்சரிக்கை விடப் பட்டுள்ளது. கனமழையால் 100 ஆண்டு களில் இல்லாத அளவுக்கு ஆறு களில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. மழை பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகள் முடுக்கி விடப் பட்டுள்ளன.


குவாங்டாங் மாகாணத்தில் 5 நகரங்களில் கன மழையால் 173 டவுண்ஷிப்புகள் வெள் ளத்தில் மிதக்கின்றன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். இதனால் 2,700 இற்கும் அதிகமான வீடுகள் சேதம் அடைந்துள்ளன. 6.50 லட்சம் மக்கள் கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளனர்.

ஆறுகளில் அபாய கட்டத்தை யும் மேவி வெள்ளம் ஓடுவ தாக எச்சரிக்கை விடப்பட்டுள் ளது. கனமழையால் 100 ஆண்டுகளில் இல்லாத அள வுக்கு ஆறு களில் வெள் ளம் கரைபுரண்டு ஓடுகிறது. மழை பாதித்த பகுதிகளில் மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட் டுள்ளன.

பல இடங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், மீட் புப் பணியிலும் சிக்கல் ஏற் பட்டுள்ளன. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கியுள்ள மக்க ளுக்குஉணவுஉட்படஅத்தியாவசிய பொருள்களை படகு கள் மூலம் அரச ஊழியர்கள் விநி யோகம் செய்து வருகின்றனர். (வ)

# குறுந்தூர ஏவுகணை வட கொரியா சோதனை

### அமெரிக்காவுக்கு பதிலடி



அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கும் நோக்கில் குறை வான தூரம் பாய்ந்து சென்று தாக்கும் 3 ஏவுகணைகளை பசுபிக் கட லின் கிழக்குப் பகுதி யில் வடகொரியா நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏவி யதாக தென் கொரியா தெரி வித்துள் ளது.

இதுகுறித்து தென் கொரிய பாதுகாப்பு அமைச்சக செய் தித் தொடர்பாளர் கிம் மின்-சியோக் கூறுகையில்,

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை காலை 2 ஏவுகணை களையும், பிற்பகல் ஒரு ஏவு கணை யையும் வட கொரியா ஏவியது. இதன்மூலம் வட கொரியாவின் நோக்கம் என்ன வென்று தெரியவில்லை - என்றார். கடந்த மார்ச் மாதம் குறைவான தூரம் செல்லும் 2 ஏவுகணைகளை வட கொரியா சோதித்தது குறிப்பிடத்தக்கது.

வடகொரியாவின் நடவடிக் கைக்கு அமெரிக்காவும், ஐ. நா. சபையும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

இந்தநிலையில் தென் கொரி யாவுடன் சேர்ந்து அமெரிக்க இராணுவம் போர் பயிற்சியை இந்த வாரம் நடத்தியது. இதற்கு வட கொரியாவும் எதிர்ப்புத் தெரிவித்தது. அத னையடுத்து நேற்று முன் தினம் 3 நடுத்தர ஏவுகணை களை ஜப்பான் கடலில் ஏவி வடகொரியா சோதனை செய் தது.

இதனை உறுதிபடுத்தியுள்ள தென் கொரியா வடகொரி யாவின் தாக்குத லுக்கு பதிலடி கொடுக்கத் தயாராக இருப்ப தாகக் கூறியுள்ளது. (வ)

## வைரஸ் தொற்றால் சீனாவில் 36 பேர் உயிரிழப்பு

சீனாவில் H7N9 வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்வடைந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வைரஸ் தொற்றுக்குள்ளான 131 பேர் இதுவரை அடையாளம் காணப் பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் குறித்த வைரஸ் தாக்கத்துக் குள்ளான முதலாவது நபர் சீனாவில் இனங்காணப்பட்டார். (வ)

## சிரிய பிரச்சினைக்கு தீர்வு காண சர்வதேச மாநாடு

### மூன் தீர்மானம்

சிரிய வன்முறைகளை முடி விற்குக் கொண்டு வருவது தொடர்பில் சர்வதேச மாநாடு நடத்தத் தீர்மானித்துள்ளதாக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டு வருடங்களாகத் தொட ரும் வன்முறைகளால் 80 ஆயி ரத்திற்கும் அதிகமானோர் உயி ரிழந்துள்ள நிலையில் இந்த நிலைமை மேலும் தொடர் வதற்கு இடமளிக்கக்கூடாது. இதனால், தாமதமின்றி இந்த மாநாட்டை விரைவில் நடத்த வேண்டும். குறித்த மாநாட்டில் கலந்துகொள் வதற்காக சிரிய அரசுக்கு ஆத ரவு தெரிவிக்கும் ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக் கப்பட வுள்ளது-என்றார். (வ)

# இம்ரான்கான் கட்சியின் பெண் நிர்வாகி சுட்டுக்கொலை

### பாகிஸ்தானில் பரபரப்பு

கராச்சி, மே.20

பாகிஸ்தானில் இம்ரான்கான் கட்சியைச் சேர்ந்த மூத்த பெண் நிர்வாகி நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் அங்கு பர பரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன் றத் தேர்தலில், நவாஸ் ஷெரீப் பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி அதிக இடங்களை கைப் பற்றியது. இதையடுத்து, நவாஸ் பிரதமராக பதவியேற்க உள் ளார். ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி படுதோல்வி அடைந்த நிலையில், முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானின் தெரிக் இ இன்சாப் கட்சி தேர்தலில் 2 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

தேர்தல் பிரசாரத்தின்போது மேடை சரிந்து படுகாய மடைந்த இம்ரான்கான், லாகூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



இந்தநிலையில், இம்ரான் கான் கட்சியின்சிந்து மாகாணதுணைத் தலைவர் சாரா யூசுப் சாஹித், நேற்று முன்தினம் சுட்டுக் கொல் லப்பட்டார். வீட்டுக்கு வெளியே நின்றிருந்த அவரை மர்ம ஆசாமிகள் சுட்டுக் கொன்றனர். இந்த சம்பவத்துக்கு முகைதா குவாமி அமைப்பின் தலை வர் அல்டாப் ஹுசைன் பொறுப் பேற்றுள்ளார்.

தேர்தலின்போது வாக்களிப் பதை புறக்கணித்த இந்த அமைப்பு, மறுவாக்குப் பதிவு நடந்த வேண்டும் என்று போராட் டம் நடத்தி வருகிறது. இதைத் தொடர்ந்து பிரச்சினைக் குரிய தொகுதியில் சில நாள்களில் மறுவாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையம் உத்தர விட்டுள்ளது. (வ)

# எவரெஸ்ட் சிகரத்தை தொட்டார் சவூதி பெண்

சவூதி அரேபியப் பெண் ஒரு வர் முதல் முறையாக உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.



எவரெஸ்ட் சிகரத்தை தொட்ட முதலாவது அரேபிய பெண் ணாகவும் 25 வயதான ராஹா மொஹாரக் பதிவாகி யுள்ளார்.

எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய4 பேர் கொண்ட குழுவில் இந்த பெண்ணும் அடங்கியுள்ளார்.

முதல் முறையாக கட்டார் மற் றும் பலஸ்தீன் ஆகிய நாடு களைச் சேர்ந்தவர்களும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனைப் படைத்துள்ளனர்.

நேபாளத்தில் கல்வி மேம்பாட் டுத் திட்டங்களுக்கு நிதி திரட்டு வதற்காக அரபு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்த மலை யேறும் முயற்சியை மேற் கொண்டிருந்தனர்.

தமது நாட்டுப் பெண்கள் புதிய சாதனைகளை செய் வதற்கு தனது இந்த முயற்சி உதவும், என நம்புவதாக மொஹாரக் கூறியுள்ளதாக பி.பி.சி செய்தி வெளி யிட்டுள்ளது.

சவூதி அரேபியா ஒரு பழைமை வாதம் பேணும் இஸ்லாமிய நாடு என்பதுடன், அங்கு பெண் களுக்கு நிறைய கட்டுப்பாடு கள் உள்ளன என்பதும் குறிப் பிடத்தக்கது. (வ)

# ஈராக்கில் குண்டு வெடிப்பு: 76 பேர் சாவு, 148 பேர் காயம்

பக்தாத், மே.20

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரட்டை குண்டு வெடிப்பில் 76 பேர் உயிரி ழந்தனர்.148 பேர் படுகாயம் அடைந்தனர்.

2011 இல் ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படை கள் திரும் பப் பெறப்பட்டதை அடுத்து முஸ்லிம் குழுக் களுக்கு இடை யேயான பதற்றம் முன் எப் போதும் இல்லாத அளவு அதி கரித் துள்ளது.

ஷியா, சன்னி பிரிவு முஸ் லிம் களிடையே நீண்ட நாள் களாக இருந்து வரும் பகை யின் அண்மைய உச்சகட்ட மோதலாக நேற்று முன்தினம் இரட்டைக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. பாகுபா நகரின் மசூதி ஒன்றில், தொழுகை முடித்தவர்கள் வெளியே வந்த சமயத்தில் முதலாவது குண்டு வெடித் தது.

குண்டுவெடிப்பில் சிக்கியவர் களை காப்பாற் றுவதற்காக அந்தப் பகுதி யில் ஏராள மானோர் கூடிய சிறிது நேரத் திற்குள் இரண் டாவது குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பில் இதுவரை 76 பேர் உயிரிழந் துள்ளனர். 148 பேர் படுகாயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள் ளனர். எனினும் இந்த தாக்கு தலுக்கு எந்த ஓர் அமைப்பும் இதுவரை பொறுப்பேற்க வில்லை. (வ)

> “ஷியா, சன்னி பிரிவு முஸ்லிம்களிடையே நீண்ட நாள்களாக இருந்து வரும் பகையின் அண்மைய உச்சக்கட்ட மோதலாக நேற்று முன்தினம் இரட்டைக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரை மாற்றும் எண்ணம் இல்லை

## காங்கிரஸ் திட்டவட்டம்

டில்லி, மே.20
மன்மோகன் சிங் திறமையான பிரதமர். எனவே, அவரை மாற்றும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என காங்கிரஸ் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நிலக்கரிச் சுரங்க ஊழல், ரயில்வே முறைகேடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் காங்கிரஸ் கட்சிக்குக் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.
இந்த சூழ்நிலையில் பிரதமர் மன்மோகன் சிங்கை முன்னிறுத்தி மக்களவைத் தேர்தலை சந்தித்தால் கட்சிக்கு பின்னடைவு ஏற்படும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சிலர் கருதுகின் றனராம். எனவே, குளிர்கால கூட்டத்தொடருக்கு முன்னதாக பிரதமர் மாற்றப்படுவார் என்றும், முன்கூட்டியே மக்களவைத் தேர்தல் நடக்க வாய்ப்பு உள்ளது என்றும் தகவல்கள் வெளி யாகின. ஆனால் அதுபோன்ற எண்ணம் காங்கிரஸுக்கு இல்லை என அக்கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பி.சி.சாக்கோ கூறியதாவது,
பிரதமரை மாற்றுவது பற்றி யாரும் நினைக்க வேண்டாம். திறமையான பிரதமரை நாம் பெற்றிருக் கிறோம். தலைமை பொறுப்பு பற்றிய கேள்வி எங்களிடம் இல்லை. அரசு சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, முன்கூட்டியே தேர்தல் நடத்தும் திட்டம் இல்லை.
உணவு பாதுகாப்பு பிரேரணை மற்றும் நிலம் கையகப்படுத்துதல் பிரேரணையை நிறைவேற்றுவது தொடர்பாக காங்கிரஸ் கட்சி விவாதித்து வருகிறது. நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடருக்கு நாம் எதிர்ப் புத் தெரிவிக்கவில்லை. இது குறித்து ஒருமனதாக முடிவு எடுக்க வேண்டும். அவர்கள் தயார் என்றால், விவாதத் துக்கு நாம் தயாராக இருக் கிறோம் –என்றார்.
இதேவேளை தேர்த லுக்கு இன்னும் நாள்கள் இருப்பதால், அடுத்த பிரதமராக மன்மோகன் சிங் தான் தேர்ந்தெடுக்கப்படுவாரா என்பதை குறித்து தெரிவிக்க சாக்கோ மறுத்துவிட்டார். (வ)



மத்திய புலனாய்வுத் துறையை (சி.பி.ஐ.), தவறாகப் பயன்படுத்தும் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து, ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாரதீய ஜனதாக் கட்சியினர்.

# தமிழர் போராட்டத்துக்கான எங்கள் ஆதரவு தொடரும்

## காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர் தெரிவிப்பு



**ஜனநாயக முறையில் நடக்கும் இந்தப் போராட்டத்தை இராணுவத்தைக் கொண்டோ. பொலிஸைக் கொண்டோ அடக்கி ஒடுக்க முடியாது.**

கடலூர், மே.20
காஷ்மீரில் நடைபெறும் விடுதலைப் போராட்டமும் தமிழ் மண்ணில் நடை பெறும் இன விடுதலைப் போராட்டமும் ஒரே மாதிரி யானவைதான். தமிழர் போராட்டங்களுக்கு எங்கள் ஆதரவு தொடரும் என்று காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவரும் ஜம்மு கஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவருமான யாசின் மாலிக் தெரிவித்தார்.
கடலூரில் சனிக்கிழமை நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற நாம் தமிழர் கட்சியின் உள்ளரங்குக் கூட்டத்தில் சிறப்பு விருந் தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
காஷ்மீர் பிரச்சினையையும் தமிழர்களின் ஈழப் போராட்டத்தையும் ஒரே மாதிரியானவை என்று கூறினார். அவர் கூறுகையில், 'இன விடுதலைக்கான போராட்டங்கள் அவ்வளவு எளிதாக வெற்றி பெறுவ தில்லை. அதுபோல், அடக்குமுறைகள் மூலம் இன விடுதலைக்கான போராட்டங்கள் ஒடுக்கப்பட்டதுமில்லை. காஷ்மீரில் நடைபெறும் போராட்டமும், தமிழர்களின் போராட்டமும் ஒரே மாதிரியானதுதான். தமிழர்களின் இந்த இன விடுதலைப் போராட்டம் வரவேற்கத்தக்கது. ஜனநாயக முறையில் நடக்கும் இந்தப் போராட்டத்தை இராணுவத்தைக் கொண்டோ. பொலிஸைக் கொண்டோ அடக்கி ஒடுக்க முடியாது. தமிழர்களின் போராட்டத்துக்கு எங்கள் ஆதரவு தொடரும்–என்றார்.

# 'ஈழத்தமிழர் ஒருபோதும் அழியமாட்டார்கள்'

## ஆங்கில நூல் வெளியீடு

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் தி.மு.க. தேர்தல் பணிக் குழு செயலாளர் எல்.கணேசன் எழுதிய 'ஈழத்தமிழர்கள் ஒருபோதும் அழிய மாட்டார்கள்' என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழா நேற்று முன் தினம் நடைபெற்றது.
விழா வுக்கு தலைமை தாங்கிய தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் நூலை வெளியிட திராவிடர் கழக தலைவர் கி.வீர மணி பெற்றுக் கொண்டார்.
விழாவில் கலந்து கொண்ட மு.க. ஸ்டாலின் பேசுகையில் தெரிவித்ததாவது:-
ஈழத்தமிழர்கள் ஒரு போதும் மீள மாட்டார்கள். ராஜபக்ஷ போன்ற சிலர் வேண்டுமானால் ஒழிந்து விட்டது என்று கூறலாம். தற்போது டெசோ அமைப்பு தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்து வருகிறோம். சரித்திரம் மீண்டும் திரும்பும்.



வீழ்வது முக்கியம் அல்ல. மீண்டும் எழுவோம்.
டெசோ அமைப்பு பற்றி யார் கேலி பேசினாலும் டெசோ தனது இலக்கை அடையும்வரை தொடர்ந்து போராடும். எல்.கணேசன் எழுதிய ஈழத்தமிழர்கள் ஒரு போதும் அழியமாட்டார்கள் என்ற நூலில் ஈழத்தமிழர்கள் மற்றும் அவர்களின் போராட்டங்கள் குறித்தும், பிரபாகரன் குறித்தும், தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.
டெசோ அமைப்பு பற்றி யார் கேலி பேசினாலும் டெசோ தனது இலக்கை அடையும் வரை தொடர்ந்து போராடும். எல்.கணேசன் எழுதிய ஈழத் தமிழர்கள் ஒரு போதும் அழியமாட்டார்கள் என்ற நூலில் ஈழத்தமிழர்கள் மற்றும் அவர்களின் போராட்டங்கள் குறித்தும், பிரபாகரன் குறித்தும், தெளிவாக குறிப் பிட்டுள்ளார். ஈழத்தமிழர்களுக்கு அடுத்த விடியல் எப்போது என்றால் உலக தமிழர்கள் ஆதரவு கொடுப்பதன் மூலம் ராஜபக்ஷ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக் கப்படும் போதுதான் –என்றார். (வ)

# மன்மோகன் செப்ரெம்பரில் அமெ.பயணம்

பிரதமர் மன்மோகன் சிங் செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
அமெரிக்க வெளியுறவு இணையமைச்சர் வில்லியம் பர்ன்ஸ் அண்மையில் இந்தியா வந்தார். அப்போது அமெரிக்கா வருமாறு ஜனாதிபதி ஒபாமா விடுத்த அழைப்பை மன்மோகன் சிங்கிடம் அவர் தெரிவித்தார். இதனை ஏற்றுக் மன்மோகன் சிங் வரும் செப்ரெம்பரில்




வொஷிங்டனுக்குப் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பயணத்தின் போது நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொது சபைக் கூட்டத்திலும் பிரதமர் பங்கேற்பார் என்று தெரிகிறது. (வ)

## சி.பி.ஐக்கு சுதந்திரம் அளிக்கும் விவகாரத்தில்

# அமைச்சரவை குழு செயற்பாட்டில் உச்ச நீதிமன்றம் தலையிட முடியாது

மத்திய புலனாய்வுத் துறைக்கு சுதந்திரம் அதாவது தன்னாட்சி வழங்குவது தொடர்பான மத்திய அமைச்சரவைக் குழு செயற்பாட்டில் உச்ச நீதிமன்றம் தலையிட முடியாது என்று, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு தொடர்பான சி. பி. ஐ. விசாரணை வரைவு அறிக்கையை மத்திய அரசு திருத்தம் செய்தது. இதுத் தொடர்பாக எழுந்த பிரச்சினையில் சி.பி.ஐ. விசாரணை சுதந்திரமான முறையில் இருக்க வேண்டும், யாரின் கட்டுப்பாட்டுக்குள்ளும் சி. பி. ஐ. இயங்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு அறிவுறுத் தியதோடு. இனி யாரும் தலையிட முடியாத படி, சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
அதன்படி, சட்ட திருத்தங்கள் மேற்கொள்ள மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் 5 அமைச்சர்கள் கொண்ட குழுவை மத்திய அரசு நியமித்துள்ளது. இந்நிலையில் [illegible] வினர். உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுத் தாக்கல் செய்துள்ளனர். அந்த மனுவில் சி.பி.ஐ. அமைப்பை வலுப்படுத்த நாடாளுமன்ற குழு பரிந்துரைகள் செய்துள்ளது. அதை மத்திய அரசு கண்டு கொள்ளாமல் குழுவை நியமித்துள்ளது. நாடாளுமன்ற குழு பரிந்துரைகளை பரிசீலனை செய்யவும், அதை மீறி சி.பி.ஐ. அதிகாரிகள் நியமனத்தில் புதிய விதிமுறைகளை வகுக்க அமைச்சரவை குழுவுக்கு தடை விதிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தனர்.



இந்த மனு நீதிப திகள் சவுகான், மிஸ்ரா அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தியதால் பயணிகள் சாரதிகள் முரண்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம்,மே 20

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களில் உரிய கட்டணம் அறவிடப்படுவதால் பயணிகளுடன் ஓட்டோ சாரதிகள் முரண்படும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களுக்கான சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களில் இதுவரை காலமும் மீற்றர் பொருத்தப்பட்டு அதனடிப்படையில் கட்டணம் பெறப்படும் நிலை இருந்ததில்லை.

எனினும் தற்போது புதிய நடைமுறையாக ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு கூடுதலான கட்டணங்களை அறவிட வேண்டியதில்லை.

மீற்றருக்கு ஏற்ப கட்டணத்தை மட்டுமே மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோ சாரதிகள் அறவிட முடியும்.

இதனால் பயணிகளுக்கும் ஓட்டோ சாரதிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படப் போவதில்லை. மீற்றர் பொருத்தப்பட்டுள்ள முறைமை பொதுமக்களுக்கு நன்மையளித்துள்ளது.

தற்போது மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களுக்கு சங்கத்தால் ஏகமனதாகத் தீர்மானித்த கட்டண அறவீடுகளின் படி முதலாவது கிலோ மீற்றருக்கு 80 ரூபாவும் ஏனைய அடுத்தடுத்த கிலோ மீற்றருக்கு 50 ரூபாவும் கட்டணங்களாக பெறும்படி ஓட்டோ சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

அதனடிப்படையிலேயே தற்போது மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களில் கட்டணம் அறவிடப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளனர். (ந-14)

# ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட இடங்களில் தரிப்பிடம் மீற்றர் பொருத்தப்பட்ட ஆட்டோக்களுக்கு

யாழ்ப்பாணம்,மே 20



யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களுக்கு அந்தந்தத் தரிப்பிடங்களில் தரித்து நிற்பதற்கான 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபை எல்லைக்கு வெளியே ஏனைய கிளைச் சங்கங்களில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்கள் மற்றும் பதிவு செய்யப்படாத தனியார் ஓட்டோக்கள் கண்ட கண்ட இடங்களில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. அதனால் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டு அந்தந்த தரிப்பிடங்களில் தரித்து நிற்பதற்கான அனுமதி பெற்ற ஓட்டோக்களின் உரிமையாளர்கள் தரிப்பிடங்களில் தரித்து நின்று போதிய வருமானமின்றி வீடுகளுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஓட்டோ உரிமையாளர், யாழ்.மாவட்ட ஓட்டோச் சங்கத்துடன் கலந்துரையாடியமைக்கு அமைவாக குறித்த தரிப்பிடங்களில் தரித்து நிற்பதற்கு அடையாளப்படுத்தும் ஸ்ரிக்கர் ஒட்டப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைவாக முதற்கட்டமாக மாநகர சபை எல்லைக்குட்பட்ட தரிப்பிடங்களில் இலக்க அடிப்படையில் ஸ்ரிக்கர் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஏனைய கிளைச் சங்கங்களில் அந்தந்தப் பிரதேசங்களுக்கு ஏற்ற முறையில் அடையாளப்படுத்தும் ஸ்ரிக்கர் வழங்க ஓட்டோ சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (ந-14)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



அச்சுவேலி, மே 20

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கதிரமலை குகநேசன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்கள அதிகாரியாகக் கடமை யாற்றும் இவர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவனும் அச்சுவேலி விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் மற்றும் விக்கினேஸ்வரா விளையாட்டு கழகத்தின் செயலாளரும் ஆவார். (ஒ-11)

## சிரேஷ்ட மாவட்ட உத்தியோகத்தராக நியமனம்

யாழ்ப்பாணம்,மே 20

வடமாகாண கல்வி அமைச்சில் வெற்றிடமாகவுள்ள சிரேஷ்ட மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற வடக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்துக்கு வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஒ-288)

# இன்று வரை மறியல்

தென்மராட்சி, மே 20

ஏ-9 வீதியில் சவாரி மோட்டார் சைக்கிளில் வந்த வர்த்தகரை கைதடி நுணாவில் பகுதியில் மோதிய வாகனச் சாரதியை இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

வியாழக்கிழமை இடம் பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நுணாவில் சந்தியில் சைக்கிள் திருத்தும் கடை வைத்துள்ள வைத்திலிங்கம் மகேஸ்வரன் (வயது-65) என்பவர் பலத்த காயங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டு மரணமானதாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அத்துடன் வானச் சாரதியையும் முற்படுத்தினர். வாகனச் சாரதியை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-9)

## சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மே 20

இளம் பெண் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் வெள்ளி இரவு 10.45 மணியளவில் சுன்னாகம் மயிலணி வடக்குப் பகுதியில் இடம் பெற்றது. ஒரு பிள்ளையின் தாயான மதிவர்ணன் தர்சினி (வயது-27) என்பரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ரி)


## பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

பருத்தித்துறை

## பதவி வெற்றிடங்கள் (வெளிவாரி)

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **வயதெல்லை:-** 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு இவ் வயதெல்லை பொருந்தாது)

02. **விண்ணப்ப முடிவு திகதி:-** 2013.06.05

03. **பிணை:-** குறித்த பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் பொறுப்புகளுக்கு ஏற்ப சங்கத்தினால் கோரப்படும் பிணைகளைச் சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

04. கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

05. (I)**பதவி:-** விற்பனையாளர்:- 308 - 17

**சம்பள அளவுத் திட்டம்:-** 8950 - 10300 / 65X10 - 70X10

**தகைமைகள்:-** (அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஸ்ட தராதரப் பத்திரம் அல்லது (ஆ) 8ஆம் தரம் சித்தியும் 3 வருடத்திற்கு குறையாத விற்பனைத் தொழில் அனுபவம்.

(II) **பதவி:-** லொறிச் சாரதி:- 312 - 14

**சம்பள அளவுத் திட்டம்:-** 9700 - 11350 / 80X10 - 85X10

**தகைமைகள்:-** தரம் 05 சான்றிதழுடன் பஸ்/ லொறிச் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 02 வருடத்திற்குக் குறையாத தொழிலனுபவம் உடையவராகவும் தேக ஆராக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(III) **பதவி:- லொறி சுத்திகரிப்பாளர்:-** 314 - 16

**சம்பள அளவுத் திட்டம்:-** 9200 - 10650 / 70X10 - 75X10

**தகைமைகள்:-** (அ)கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத் திட்டத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம். அல்லது (ஆ) தரம் 05 சான்றிதழுடன் தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

06. குறித்த பதவிகளுக்குரிய மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிரூபங்களுக்கு அமைவாக வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விசேட படிகளும் வழங்கப்படும்.

07. விண்ணப்பிக்கும் முறை:-

(1)சங்கத்தில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்க முடியும்.

(2) சங்கத்தில் ரூபா 20 செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினை முறையாகப் பூர்த்திசெய்து "தலைவர்" பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 1ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை" என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(3). விண்ணப்பப் படிவத்துடன் கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், சேவை அனுபவச் சான்றிதழ்கள், என்பவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை

தலைவர்,
பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.



## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், சிவந்த, அழகிய பெண் 1983 ஆம் ஆண்டு உத்தரட்டாதி 4ஆம் பாதம் கிரகபாவம் $21\frac{1}{4}$. . பதிவுத்திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றவர். பொருத்தமான மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(வெளிநாடு விரும்பத்தக்கது)

தொடர்பு: 077 470 5137. (35037) (45.6)



## கல்வி

English, German, Sinhala, ஆகிய மொழிகள் Spoken English With Grammar மற்றும் ஜேர்மன் மொழி பரீட்சையில் சித்தி பெறாதவர்களுக்கு விசேடமாக தங்கள் வதிவிடங்களில் கற்பிக்கப்படும்.

Condact: M.P. Mahendirarajah.
Expert Teacher
T.P:-077 5926983



## மாபெரும் தங்கநகை ஏலவிற்பனை

செலான் வங்கியின் ஒரு வருட, 6 மாத, 3 மாத கால அடிப்படையில் அடகு வைக்கப்பட்டு உரிய காலத்தில் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் யாவும் எதிர்வரும் 01.06.2013 சனிக்கிழமை காலை 9 மணி முதல் அடகு வைக்கப்பட்ட பின்வரும் கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. என்பதை அறியத்தருகின்றோம்.

**(யாழ்ப்பாணம் - (சங்கானை, மானிப்பாய் உள்ளடங்கலாக) மற்றும் நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா)**

SEYLAN BANK PLC

**- வட பிராந்திய முகாமையாளர். செலான் வங்கி.** (C/9471)(2.6)


## மரண அறிவித்தல்

## சுவக்கீன்பிள்ளை யேசுதாசன் (கலாபூசணம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுவக்கீன்பிள்ளை யேசுதாசன் (சின்னப்பூந்தான்) 17.05.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவக்கீன்பிள்ளை-ஜேர்மனம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பிலிப்பையா மற்றும் விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற றீற்றா புஸ்பராணியின் (ராசாத்தி) அன்புக் கணவரும், அனிற்றா யூலியற் (நிர்மலா-ஜேர்மனி), அன்ரன் யூபேட் நிர்மலா (அமெரிக்கா), கனிஸ்ரா யூடித் (டெனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜன் (ஜேர்மனி), தனுஷியா (அமெரிக்கா) ஆகியோரின் மாமனும் டில்ஷான், டில்க்ஷியா, டினுஷியா பிரவிந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.05.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3 மணியளவில் சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நல்லாயன் றோட், சில்லாலை,
பண்டத்தரிப்பு.


(36643) (10,6)

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி முகாம்

கரணவாய்,மே 20
பாடசாலைகளில் நாளாந்தம் காலை வேளைகளில் மேற்கொள்ளப்படும் உடற் பயிற்சி தொடர்பான வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்று நாளையும் நாளை மறுதினமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
இதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது என்று வட மாகாண கல்வித் திணைக்களத்தால் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-400)



யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு கடந்த வியாழக்கிழமை ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. (ம-14)

## போசாக்கு குறைந்த நிலையில் சாவகச்சேரியில் 48 சிறார்கள்

தென்மராட்சி,மே 20
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 48 சிறார்கள் போசாக்கு குறைந்த நிலையில் உள்ளமை ஆய்வுகளின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது.
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை குழந்தைகள் சிகிச்சைப் பிரிவின் ஏற்பாட்டின் பிரகாரம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வுகளின் பிரகாரம் 48 சிறார்கள் அதிகுறைந்த போசாக்கின்மை நிலையில் உள்ளமை இனங்காணப்பட்டது.
போசாக்குக் குறைந்த நிலையில் காணப்பட்ட சிறார்களும் பெற்றோரும் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரவழைக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை குழந்தைகள் சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த வைத்திய அதிகாரி மூலம் விசேட சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் பெற்றோருக்கு அறிவுறுத்தல் மற்றும் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டன.
'எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவது' என்னும் சுகாதார அமைச்சினது செயற்றிட்டத்துக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## கட்டாக்காலி நாய்களால் பயணிப்போர் சிரமம்

குருநகர்,மே 20
யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமான வீதிகளில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களால் குறித்த வீதிகளூடாக பயணிப்போர் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.
இவ்வாறு அலையும் கட்டாக்காலி நாய்கள் வாகனங்களில் மோதி இறப்பதால் வீதிகளில் துர்நாற்றமும் வீசுகிறது.
நாய்களை வளர்ப்போர் தமது வீடுகளில் கட்டி வளர்த்தால் இவை அநாவசியமாக உயிரிழப்பதையும் தவிர்க்க முடியும் என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது.
கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்கள் வீதிகளில் பயணிப்போரை துரத்திச் செல்வதுடன் கடித்தும் வருகின்றன என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ம-51)

# காணிச் சுவீகரிப்புகளை நிறுத்தி உரிமையாளர்களுக்கே வழங்குக

## கரவெட்டிப் பிரதேச சபை தீர்மானம்

வடமராட்சி,மே 20
வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் காணிச் சுவீகரிப்பை கண்டிக்கிறோம். உடனடியாக அந்த நடவடிக்கையை நிறுத்தி காணி உரிமையாளர்களுக்கு அவர்களின் காணிகளை வழங்க வேண்டும். கரவெட்டிப் பிரதேச சபை இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
சபைத் தலைவர் பொ.வியாகேச தலைமையில் சபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது ஆளும்கட்சி உறுப்பினரான கே.பரஞ்சோதி இதற்கான தீர்மானத்தை முன்மொழிந்தார். மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினரான க.இரத்தினம் வழிமொழிந்தார்.
குறிப்பிட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு உட்பட வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான, அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த சொந்த நிலங்களை வலுக்கட்டாயமாக அரசு அபகரித்து வருகின்றது.
இந்த நிலங்களில் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் இன்னமும் அகதிகளாக அகதி முகாம்களில் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.
அரசின் இந்தச் செயலானது தமிழ் மக்களை நிரந்தரமாக அகதிகளாக்கி இல்லாதொழிக்கும் செயற்பாடாகும்.
அது மட்டுமல்லாமல் சுவீகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளில், சிங்கள மக்களைக் குடியேற்றி இலங்கையை ஒரு தனிச்சிங்கள நாடாக மாற்றுகின்ற இந்தத் திட்டத்தை அரசு மிக வேகமாக முன் நகர்த்தி வருகின்றது.
எமது கரவெட்டிப் பிரதேச சபையானது அரசின் இந்தச் செயலைக் கண்டிக்கிறது. காணி அபகரிப்பை அரசு உடனடியாக நிறுத்தி காணி உரிமையாளர்களுக்கு காணிகளை வழங்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்வதென தீர்மானிக்கின்றது - என்றுள்ளது.
இந்தத் தீர்மானம் சபைக்கு கொண்டுவரப்பட்டபோது ஐ.ம.முன்னணியின் மூன்று உறுப்பினர்களில் ஒருவர் சபைக்குச் சமுகமளிக்கவில்லை. மற்றைய உறுப்பினர்களில் ஒருவர் ஏற்கனவே சபையை விட்டு வெளியேறி இருந்தார். எஞ்சிய மூன்றாவது உறுப்பினர் சபையில் தீர்மானம் வாசிக்கப்பட்டபோது சபையை விட்டு வெளியேறி இருந்தார். தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் மீண்டும் அவர் சபை நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். (ம-8)

## உவர்நீரை நன்னீராக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துக

### ஊர்காவற்றுறை பிரதேச செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 20
ஊர்காவற்றுறை, நாரந்தனைப் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்ட குடிதண்ணீர் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள்.
இவ்வாறு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் கேட்டுள்ளார்.
இந்தத் திட்டத்தின் கீழ் உவர்நீரை நன்னீராக்கி குடிதண்ணீருக்கு விநியோகிக்கும் பணிகள் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இந்தத் திட்டம் ஒரு வருடகாலத்திலேயே கைவிடப்பட்டது.
இந்த நிலையில் இத்திட்டத்தை மீள ஆரம்பித்து மக்கள் குடிதண்ணீரைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்று கூறினார்.
இந்தத் திட்டம் 40 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## குடிதண்ணீர் சேவை சீரானது

யாழ்ப்பாணம்,மே 20
இருபாலை பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் சீராக இடம்பெற்று வருகிறது.
தினமும் இரண்டு தடவைகள் இந்தப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.
வலி. கிழக்கு பிரதேச சபையால் விநியோகிக்கப்பட்டு வரும் இந்தக் குடிதண்ணீர் சேவை அண்மையில் போதிய ஆளணி வசதி இன்றிப் பாதிக்கப்பட்டது.
இதனால் மக்கள் தூர இடங்களுக்குச் சென்று குடிதண்ணீர் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் புனரமைக்கப்பட்ட வெங்காயக் களஞ்சியம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.
இந்த களஞ்சியக் கட்டத்தில் ஒரே சமயத்தில் இரண்டாயிரம் அந்தர் வெங்காயத்தை களஞ்சியப்படுத்த முடியும். யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதி உதவியுடன் இந்தக் களஞ்சியக் கட்டடம் புனரமைக்கப்பட்டது.
புனரமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை யு. என்.டி.பி. நிறுவனத்தின் யாழ். பொறுப்பதிகாரி எஸ். ஞானகணேசன், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதனிடம் கையளித்தார். (ம-17)

## அதிக சத்தத்தில் பாடல் ஒலிபரப்பும் தனியார் பஸ்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்,மே 20
தனியார் பஸ்களில் பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்பினால் அல்லது வீடியோக் காட்சிகளைக் காண்பித்தால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பஸ் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தனியார் பஸ்களில் அதிக சத்தத்துடன் சினிமாப்பாடல்கள் ஒலிபரப்புச் செய்யப்படுவதால் தூர இடங்களுக்கு பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் குறுந்தூரப் பயணிகள் குறித்த இடங்களில் இறங்க முடியாத நிலையிலும் சிரமப்படுகின்றனர்.
இது தொடர்பாக பயணிகளால் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
அதற்கமைவாக பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்புச் செய்யும் மற்றும் வீடியோக் காட்சிகளைக் காண்பிக்கும் பஸ் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.
யாழ்.மாவட்டத்தில் தற்போது தனியார் பஸ்களில் அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்புச் செய்யப்படுவது தொடர்பாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் தனியார் பஸ் சங்கம் குறித்த பஸ்களுக்கு தண்டப் பணம் அறவிடப்படுவதாக தெரிவித்துள்ளது. [illegible]

## வீதியின் சீர்கேட்டால் தடம்புரண்ட வாகனம்

வீதியின் சீர்கேட்டால் காட்டு மரங்கள் ஏற்றிவந்த வாகனம் வீதியை விட்டு விலகி தடம் புரண்டது. இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை பகல் கெற்பேலி அ.த.க.பாடசாலைக்கு அருகில் இடம்பெற்றது.
வாகனத்தில் ஏற்றிவரப்பட்ட முதிரை, பாலை மரங்கள் அந்தப் பகுதியில் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன. கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
மிருசுவில் ஏ-9 வீதியிலிருந்து கெற்பேலி ஊடாக பாலாவி வடக்குக்குச் செல்லும் இந்த வீதி கனரக வாகனங்களின் [illegible] சேதமாக [illegible] காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை
க.பொ.த. [சா/த] பரீட்சை 2012

கடந்த 2012ஆம் ஆண்டு
டிசெம்பர் மாதம் நடைபெற்ற
க.பொ.த. (சா/த) பரீட்சையில்
எமது பாடசாலை மாணவி
செல்வி

**தனபாலசிங்கம் சுஜிதா**

அவர்களை, 8A, C பெறுபேற்றைப்
பெற்று தமக்கும் எமது
பாடசாலைக்கும் பெருமைதேடித்
தந்தமைக்காகவும், சித்தியடைந்த
ஏனைய மாணவர்களையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை, புதுக்குடியிருப்பு.

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 . 10 . 1948



உதிர்வு 05 . 06 . 2002

**அமரர் இராசலிங்கம் அமரசோதி**

திதி:20.05.2013

அன்புச் சுடரொளியே!
அழியாப் பெருநிதியே
துன்பு துடைத்தழித்த
தூயவரே துதிக்கின்றோம்!

117-A, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (36616)(2.6)

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்
24.05.1928



மறைவு
20.04.2013

கடந்த 20.04.2013
அன்று இறைபதம்
எய்திய எமது
குடும்பத் தெய்வம்

**அமரர் ஆறுமுகம் சிவபாக்கியம்**

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் சொல்லியும், அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டும், சகல வழிகளிலும் ஒத்தாசை நல்கி, எம் அன்னையின் பிரிவுத் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் எம்மை தேற்றியவர்களுக்கும், எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.05.2013) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறுஅன்புடன் அழைக்கின்றோம்.

லோட்டன் வீதி,
மானிப்பாய். (36621)(6-11)

குடும்பத்தினர்.

# சித்திரத் தேர் வெள்ளோட்டம்

தென்மராட்சி, மே 20

மந்துவில் மேற்கு கேலம் இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கென நிர்மாணிக்கபட்ட புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும்.

தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர் சி. நாகராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தேர் நிர்மாணப்பணியில் ஈடுபட்ட ஸ்தபதி ந. இளங்கோவன் தலைமையிலான சிற்பக் கலைஞர்கள் கௌரவிப்பு இடம்பெறும். சித்திரத் தேர் வெள்ளோட்ட ஆசியுரையினை சிவஸ்ரீ சோம. சசிதரக்குருக்கள், ஆவரங்கால் சிவன் கோவில் பிரதம குரு வே. நடராசக் குருக்கள் மந்துவில் முத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோம. சந்திர சிகாமணிக் குருக்கள், சிவஸ்ரீ வி. தயாபர சர்மா ஆகியோரும் வாழ்த்துரையினை வே. இரத்தினசிங்கம், சி. கந்தசாமி ஆகியோரும் நிகழ்த்துவர். (ம-9)

# 'அம்மா' பாடல் இணையத்தில்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணக் கலைஞர்களால் சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட ''அம்மா' எனும் தலைப்பிலான வீடியோ பாடல் இணையத் தளங்களில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தினேஸ் ஏகாம்பரத்தின் பாடல் வரிகளுடன் நெடுந்தீவு யோகேஸ், அம்மு,பிரின்ஸி ஆகியோர் இந்தப் பாடலை பாடியுள்ளனர். யாழ்ப்பாணம், கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்து இளம் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட இந்தப் பாடலை "யூரியூப்" எனும் இணையத்தளத்தில் Jaffna amma song எனும் தேடலில் பார்வையிடலாம். (ந-14)

## தெரிவு செய்யப்பட்ட 41 பேருக்கு கற்றாக் இலவச சத்திர சிகிச்சை

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில் மேற்கொண்ட பரிசோதனையின் போது கற்றாக் ஏற்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 41 பேருக்கு விஷன் 20/ 20 திட்டத்தின் கீழ் இலவசமாக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான பதிவுகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் தொடக்கம் இடம்பெற்று வருகிறன.

கண் கிளினிக்கில் சத்திர சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களை உடனடியாக பதிவினை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரியின் வேண்டுகோளின் பிரகாரம் யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் யாழ். போதனா வைத்திய சாலை கண் சிகிச்சை நிபுணர் சந்திரகுமார் மூலம் சத்திரசிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு விரைவில் சத்திரசிகிச்சை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# ஆறு வீதிகள் புனரமைப்பு

வடமராட்சி,மே 20

கரவெட்டிப் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள 6 வீதிகள் சபை நிதி மூலம் திருத்தி அமைக்கப் படவுள்ளன.துன்னாலை பூதராயர் வீதி, உடுப்பிட்டி பழவத்தை வீதி, அல்வாய் கிழக்கு மணியம் பாடசாலை வீதி, கொற்றாவத்தை உப்புக் கிணற்றடி வீதி, கரவெட்டி மத்தி தச்சன் தோப்பு வீதி, கர வெட்டி கிழக்கு யார்க்கரு வீதி ஆகிய 6 வீதிகளுமே திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றன.

சபை நிதி மூலம் இந்த வீதிகளைத் திருத்த கரவெட்டிப் பிரதேச சபையில் ஏற்கனவே ஏகமனதாகத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

# முதலாம் வருட நினைவின் நிழல்



தோற்றம் 16 08 1969

மறைவு 30 05 2012

**திருமதி சாந்தினி மகேந்திரகுமார்**

(முன்னாள் ஆசிரியை, வ/ நெளுக்குளம் கலை மகள் மகா வித்தியாலயம்)

திதி:- 20.05.2013

ஓராண்டு போனதம்மா உன் மகன்
நிழலில் நீ சேர்ந்து
ஆனாலும் எம் நினைவின் நிழலாய்
என்றும் நீ வாழ்கின்றாய்
எமதுயிர் போகும்வரை இத்துயரம் மாறாது
உன் நினைவின் நிழலும் எம்மை விட்டுப் போகாது
உன் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திப்போமாக.

3 ஆம் கட்டை,நெளுக்குளம்,
வவுனியா. 077 258 8346

க.மகேந்திரகுமார் (கணவர்)
(ஆசிரியர், வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்) மற்றும் குடும்பத்தினர்.

(35889)(2.6)

## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

- நீங்கள் முள்ளந்து, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வறட்சி, சருமவியாதி, இருமல், முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

## ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

- எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வரட்சி இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்க்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீரக கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆஸவங்கள், தைலங்கள், சூரணங்கள், குளிகைகள், சிரப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## அசுவகந்தாதி யமகம்

இளமைத் துடிப்பு மிக்க, முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தையும், விரைவாக உங்கள் சக்தியை விரைவில் மீண்டும் புதுப்பித்து நரம்புத் தளர்ச்சி, மூட்டுவலி, இடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் அளிக்க வல்லது.

நீங்கள் நாட வேண்டிய இடம்:

**சிவா நறுமணப் பூங்கா**

இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொலைபேசி: 021 222 2567 (சி/8817)(45.8.7)

## விற்பனைக்குண்டு

1. யாழ்ப்பாணக் கிளை
   மோட்டார் சைக்கிள்கள்
   1. PULSAR-180 DTSI-NPXE-XXXX
   2. PLEASURE- NPXH-XXXX
   3. SPLENDER NXG- NPWJ-XXXX
   4. PULSAR 150-NPXT-XXXX
   உழவு இயந்திரம் - 37- XXXX

**தொடர்பு: 077 364 4409**

2. கிளிநொச்சிக் கிளை
   மோட்டார் சைக்கிள்கள்
   1. SPLENDER NXG-NPXS-XXXX
   2. CD DELUXE- NPXR -XXXX
   3. DISCOVER 150-NPXB- XXXX
   4. PRESS CUB 50-NPXU- XXXX
   5. PULSAR - 150CC- NPXL-XXXX
   6. CD DELUXE- NPWK -XXXX
   உழவு இயந்திரம் - 25 SRI- XXXX
   ROAD MATE - NPQY-XXXX

**தொடர்பு: 077 757 4773**

**TRADE FINANCE AND INVESTMENTS PLC**

74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 221 9997,
021 222 1898

A9 வீதி, கரடிப் போக்கு
சந்தி, கிளிநொச்சி.
021 228 0110,
021 228 0108

(C/9468)(6.11)

## இப்போது யாழ்ப்பாணத்தில் நாம் Skyway Express

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவையில் முன்னோடிகளாகிய நாம்
உலகின் 05 முன்னணி கூரியர் சேவை நிறுவனங்களின் கூட்டிணைவுடன் சிறந்த சேவையை வழங்குகிறோம்.

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 720 /= Germany 750 /= France 815 /= Denmark 775 /=
- அவுஸ்ரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிற்கும் உணவு பொதிகளை அனுப்பும் சேவை எம்மிடம் மட்டுமே Netherland 825 /=
- மருந்து பொருள்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.


முழு உலகையும் அன்பினால் ஒன்றிணைப்போம் (C/9476)

இல.355A கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel : 021 221 9792

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 116

# புதிதாய் பிறந்த குழந்தைகளின் மீதான கவனிப்பு



கல்வியறிவு, மருத்துவம் மற்றும் ஏனைய வசதிகள் அதிகரித்துக் காணப்படும் இன்றைய காலத்திலும் பல்வேறு சிக்கல்களின் காரணமாக புதிதாய் பிறந்த குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப் படுகிறார்கள். அவற்றில் பெரும்பாலானவை தகுந்த கவனிப்பின் மூலம் தவிர்க்கப்படக் கூடியவை. அதற்காகப் பெற்றோரும் உறவினர்களும் கவனிக்க வேண்டியவை அம்சங்களாவன:-

1. இயலுமானவரை தாயும்,சேயும் சேர்ந்திருந்தல் வேண்டும். தாய் குழந்தையை அவரவணைப்பதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெறலாம்.

★தாய்பாலூட்டல் இலகுவாக்கப்படுகிறது. தாய்க்கு பால் சுரப்பு அதிகரிப்பதுடன் குழந்தையும் பசியெடுக் கையில் தாய்ப்பாலை பருகமுடிகிறது.

★தாய்க்கும் குழந்தைக்குமிடையிலான பாசப் பிணைப்பு அதிகரிக்கிறது.

★குழந்தையின் உடல் வெப்பநிலையானது பேணப் படுகிறது. குறிப்பாக குளிர் அல்லது மழைகாலங்களில்.

★தோலுக்கு தோலான தொடுகை மூலம் குழந்தைக்கு தாயின் சூழலிலுள்ள கிருமிகளுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.

2. குழந்தை பால் அருந்த தயாராகவுள்ள அறிகுறிகளை வேளைக்கே அறிந்து தாய் பாலூட்ட வேண்டும். பசியினால் குழந்தை அழத்தொடங்கியவுடன் அதனை சாந்தப்படுத்தி பாலூட்டலை ஆரம்பிப்பதில் சிரமம் ஏற்படலாம். எனவே பின்வரும் அறிகுறிகளை அவதானிக்க வேண்டும்.

★குழந்தை தனது வாயால் தேடத் தொடங்கும் மார்பிற்கு அருகில் இருப்பின் முலைக்காம்பை நோக்கி வாயைக் கொண்டு வரும்.

★கைவிரல்களைச் சூப்பத் தொடங்கும்.

★வாயைச் சப்புக்கொட்டலாம்.

★இறுதியாகத்தான் பிள்ளை அழத் தொடங்கும்.

3. தாய்ப்பாலைத் தவிர வேறு பானங் களையோ, நீரையோ பருகக் கொடுத் தலாகாது. (மருத்துவ பிரச்சினைகள் இல்லாதவிடத்தில்)

4. போதிய அளவுக்கு குழந்தை பால் அருந்துமாயின், குழந்தை பிறந்து இரு நாள்களின் பின்னர் ஒரு நாளைக்கு 6 த டவைக்குமேல்சிறுநீர்கழிக்கும். இதனை விடக் குறைவாயின் வைத்திய ஆலோசனை பெறுதல் நன்று.

5. குழந்தை பிறந்து முதல் 24 மணித்தியாலங்களுக்குள் மலம் கழிக்கும். சாதாரணமாக இது பின்னர் வேறுபடலாம். ஒன்று தொடக்கம் எட்டுப் பத்து தடவை மலம் கழிக்கலாம். முதல் சில நாள்களில் மலம் கழிப்பதில் குழந்தைக்கு சிக்க லிருப்பின் வைத்திய ஆலோசனை பெறப்படல் வேண்டும்.

6. சில வேளைகளில் சாதாரணமாக பால் அருந்தியவுடன் தோளில் போட்டு தட்டி ஏப்பம் விடச் செய்கையில் பால் வாயால் சிறிதளவு வெளியேறலாம். ஆனால் குழந்தை சத்தி எடுக்குமானால், (குறிப்பாக பித்தம் கலந்த பச்சை அல்லது மஞ்சள் நிறத்தில்) உடனடியாக மருத்துவசாலைக்குச் சென்று ஆலோசனை பெறவேண்டும்.

7. அதே போல் மலச்சிக்கலும், சத்தியும், வயிறு வீக்கமும் காணப்படுமாயின், உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும்.

8.சாதாரண குழந்தை ஒன்றை 24 மணித்தியாலங்களின் பின்னர் ஒவ்வொரு நாளுமே குளிப்பாட்ட முடியும். அப்போது தான் தோல் சம்பந்தமான கிருமித் தொற்றுக் களிலிருந்து குழந்தையைப் பாதுகாக்க முடியும்.

9. எப்போதும் தொப்புள் கொடி பகுதியானது அது உலரும் வரை திறந்தே வைத்திருந்தல் நன்று. அந்தப் பகுதியில் மலமோ, சிறுநீரோ பட்டிருப்பின் உடனடியாக சவர்க்கார நீர்கொண்டு கழுவி தூய்மையான உலர்ந்த துணியால் துடைக்க வேண்டும். தேவையின்றி வேறு பதார்த்தங்கள் அதன் மேல் பூச வேண்டாம்.

10. அதே போல் கண், கமக்கட்டு, கழுத்து, இடுப்புப் பகுதி போன்ற பகுதிகளை அழுக்கின்றி தூய்மையாக வைத்திருக்க வேண்டியதுடன் அந்தப் பகுதிகள் சிவந்து ஈரலிப்பாக உள்ளனவா என அடிக்கடி அவதானிக்க வேண்டும். அப்படியாயின் வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும்.

11. குழந்தையின் தோலில் சீழ் பிடித்த பருக்கள், கொப்புளங்கள் ஏற்படுவது, கிருமித்தொற்றுக்களால் தான். எனவே அவை குழந்தையில் காணப்படுமாயின் இறுதிநேரம் வரை காத்திராது உடனடிச் சிகிச்சை பெறவேண்டும்.

12. புதிதாய் பிறந்த குழந்தையில் ஆபத்தான நோய்கள் இருக்குமாயின் அது பின்வருவனவற்றை வெளிக் காட்டலாம்.

★ பால் அருந்துவதில் ஆர்வம் இருக்காது.

★ உடல் சூடாகவோ அல்லது குளிராகவோ இருக்கலாம்.

★ பிள்ளையின் சாதாரண துடிப்பாட்டம், அழுகை என்பன குறைவடைந்து சோர்வடையலாம்.

★மூச்சு விடுவதில் சிரமம் அல்லது முணங்கல் சத்தம் என்பன காணப்படலாம்.

★ சில சமயங்களில் வலிப்பும் ஏற்படலாம்.

★ இவ்வாறான சந்தர்ப்பங்களில் உடனடிச் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

13. சாதாரணமாக புதிதாய் பிறந்த குழந்தைகளில் சிறிதளவு மஞ்சள் நிறம் காணப்படலாம். எனினும் பிள்ளையின் உடலில் மஞ்சள் நிறம் (மஞ்சள் காமாலை) அதிகமாயின் அதற்கான சிகிச்சை தேவைப்படும்.

14. தொப்புள் கொடிப் பகுதியின் கிருமித் தொற்றும், ஆபத்தானதே. அதனை தடுப்பதற்கு அந்தப் பகுதியை சுத்தமாக வைத்திருப்பதுடன் அந்தப் பகுதி சிவந்தோ, சீழ் வடிந்தோ, துர்நாற்றமாகவோ காணப்பட்டால் உடனடி யாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

15.ஒரு குழந்தையானது தனது பிறந்த நிறையில் சிறி தளவை (10%) முதல் 5 நாள்களில் இழந்து, அதன் பத்தாம் நாள் வயதில் பிறப்பு நிறையை அடையும். அவ்வாறில் லாமல் அதிகளவு நிறை இழப்பு அல்லது 10 நாள்களில் பின்னரும் நிறை அதிகரிப்பு இல்லையெனில் அது குழந்தைக்கான போதிய போசனை கிடைக்கவில்லை என்பதற்கான அறிகுறியாகும்.

எனவே மேற்கூறப்பட்ட முக்கியமான கவனிப்புக்களை யும், நோய்களுக்கான அறிகுறிகளையும் அறிந்திருந்தால் நமது பச்சிளம் பாலகர்களை நாம் சிறந்த முறையில் பாதுகாத்துக்கொள்ளலாம்.

**மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்,**
**குழந்தை வைத்திய நிபுணர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

# தினமும் பழங்களை உண்டு பயன் பெறுவோம்



எளிமையும் எண்ணற்ற சத்துக்களையும் கொண்டது பழங்கள். இவை உணவை ருசியாக்குவதுடன் மருத்துவ ரீதியிலும் எமக்கு உதவுகின்றன. பழைய ரிஷிகள், முனிவர்கள் தம் வாழ்வில் பழங்களை மட்டுமே உட்கொண்டு உயிர் வாழ்ந்தார்கள் என்பது வரலாறு கூறும் உண்மை. எனவே கிடைக்கும் காலங்களில், கிடைக்கும் பழங்களை கூடியளவு உட்கொள்வது மிகவும் சிறந்தது. குழந்தைகளுக்கு இனிப்பு பண்டங்கள் வாங்கிச் செல்வதை விடுத்து பழங்களை வாங்கி கொண்டு செல்லுங்கள்.

பதப்படுத்தப்பட்ட பழங்கள், நாள்பட்ட பழங்களை உண்பதை விட, புதிய பழவகை களை எம்முடைய அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டால் போசாக்கு அதிகமாகக் கிடைக்கும். கோடை காலங்களில் கூடிய அளவில் பழவகைகளை நாம் சேர்த்துக் கொள்வது மிகவும் சிறந்தது. ஏனெனில் பழவகைகளில் கூடியளவு நீர்ப்பற்று இருப்பதனால் நாம் இழக்கும் நீரினை சமப்படுத்த இது ஏதுவாக இருக்கும்.

பழங்களில் குறைந்த அளவிலேயே கொழுப் புச் சத்து இருக்கின்றது. கூடிய அளவு நார்ப் பொருள்கள் காணப்படுகின்றன. இதனால்,

★ எம்முடைய உடற்பருமனை குறைத்து ஆரோக்கிய உடலை அடைய முடியும்.

★ உடலில் உள்ள கொழுப்பின் அளவு குறையும்.

★ குருதி அமுக்கம் குறைவடையும்.

எமது உணவில் கூடியளவு பழங்களை சேர்த்துக் கொண்டால் புற்றுநோய், சலரோகம், இருதயநோய், உயர் குருதி அழுத்தம் போன்ற நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

★ பழங்களில் கலோரிப் பெறுமானம் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது.

★கனியுப்புக்களும், விற்றமின்களும் போது மான அளவு காணப்படுகின்றன.

★தர்ப்பூசணி மற்றும் பேரீச்சையில் எதிர்பார்க் கப்படக்கூடிய இரும்புச் சத்தை நாம் பெறமுடியும்.

★நெல்லி, கொய்யா போன்ற பழங்களில் கூடியளவு விற்றமின் 'சி'யை பெறலாம்.

★மஞ்சள் நிறப் பழங்களில் விற்றமின் 'ஏ'யைப் பெற முடியும். இவை பார்வைக் குறைபாடு, மாலைக்கண் நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்க உதவும்.

★பப்பாசிப்பழம்- நீரிழிவு நோய்க்கு உகந்தது.

★கொய்யா - மலச்சிக்கலைப் போக்கும்.

★எலுமிச்சை- சமிபாட்டுக் குறைபாட்டால் ஏற்படும் வாந்தியைப் போக்குகின்றது.

★விளாம்பழம்- முகத்தை இளமையாக மாற்றும், இதயத்திற்கு வலிமை தரும், நரம்புகளுக்கு வலிமை தரும், பித்தம், தலைவலி, கண்பார்வை மங்கல், வாயில் கசப்பு, கை, கால்களில் அதிக வியர்வை, நாவில் ருசியற்ற நிலையை மாற்றும்.

★வாழைப்பழம்- இதயத்தைப் பாதுகாக்கும்.

★திராட்சைப்பழம்- இதயத்தைப் பாதுகாக்கும்.

★சத்துப் பெறுமானம் (பழங்கள்100g க்கு கணக்கிடப்பட்டுள்ளது)

| பழங்கள் | சக்தி (Kcal) | கொழுப்பு (g) | கல்சியம் (mg) | இரும்பு (mg) | vit-A (mg) | vit-C (mg) |
|---|---|---|---|---|---|---|
| அப்பிள் | 59 | 0.5 | 10 | 0.660 | 0 | 1 |
| வாழைப்பழம் | 116 | 0.3 | 17 | 0.36 | 78 | 7 |
| பேரீச்சை | 317 | 0.4 | 120 | 7.3 | 26 | 3 |
| கொய்யா | 51 | 0.3 | 10 | 0.27 | 0 | 212 |
| எலுமிச்சை | 57 | 0.9 | 70 | 0.26 | 15 | 63 |
| தர்ப்பூசணி | 17 | 0.2 | 32 | 1.4 | 169 | 26 |
| பப்பாசி | 32 | 0.1 | 17 | 0.5 | 666 | 57 |
| மாதுளை | 65 | 0.1 | 10 | 1.79 | 0 | 16 |
| விளாம்பழம் | 134 | 3.7 | 130 | 0.48 | 61 | 3 |
| நெல்லி | 58 | 0.1 | 50 | 1.2 | 9 | 600 |
| மாம்பழம் | 74 | 0.4 | 14 | 1.3 | 2743 | 16 |

ஆதாரம்:- ICMR

காலத்துக்கு காலம் எமக்கு வெவ்வேறு விதமான பழங்களை மலிவாகப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. நாளுக்கு ஒரு பழம் என்பதை நாம் கடைப்பிடித்தால் நோய்களில் இருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

ஷாலினி புவனேசமூர்த்தி
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை ஓர் வரைபடம்

7

■ நிவேதிதா மோகன்.



"அம்மா! ஆதவுக்கு ஏதோ வேலையாம், வேறு ஒருநாள் வருவாராம் என்று ஒரு தயக்கத்துடன் மெல்லிய குரலில் கூறிவிட்டுத் திரும்பினாள். அப்போது நிலாவின் அம்மா, அவன் வர மாட்டான் என்றவுடன் நிலாவின் மனது இரண்டு துண்டாக பிளந்தது.

பாடசாலை செல்லும் வழியில் ஆதவை பார்த்த நிலா, ஆதவிடம் "அம்மா! உங்களுடன் பேச வேண்டுமாம்" என்று சொன்னாள். ஆதவின் மனம் ஒரு வித பதற்றத்துடன் "ஓ, பார்க்க லாமே.. எப்போது பார்க்க வேண்டும்?" என்று வினவினான். அதற்கு நிலா "இன்று மாலை 6 மணிக்கு வீட்டுக்கு வாங்கோ" என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

மாலை 6 மணி, நிலாவின் வீட்டுக் கதவை யாரோ தட்டினார்கள். நிலா ஆதவாகத் தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டு போய் கதவைத் திறந்தாள். கதவைத் திறந்த நிலாவின் முகம் வாடிப்போனது. அங்கு நின்ற ஆண் ஆதவின் நண்பன். அவன் நிலாவிடம் "ஆத வுக்கு ஏதோ வேலையாம், வேறு ஒரு நாள் வருவான்" என்று கூறிவிட்டுச் சென்றான். உடனே நிலா அவளின் அம்மாவிடம் சென்று "அம்மா! ஆதவுக்கு ஏதோ வேலையாம், வேறு ஒருநாள் வருவாராம்" என்று ஒரு தயக்கத்துடன் மெல்லிய குரலில் கூறிவிட்டுத் திரும்பினாள். அப்போது நிலாவின் அம்மா, "அவன் வர மாட்டான்" என்றவுடன் நிலாவின் மனது இரண்டு துண்டாக பிளந்தது. "ஏன் அம்மா இப்படிச் சொல்லுறிங்கள் " என்று கேட்டாள். "போய் சாப்பாட்டு மேசையில் இருக்கும் கடித உறையை எடுத்துவா" என்று அதட்டினார். நிலாவும் பதற்றத்தோடு அந்த உறையை எடுத்து வந்தாள். எடுத்து வந்த உறையை திறந்து அதில் இருந்து சில புகைப்படங்களை எடுத்தார் நிலாவின் அம்மா.

நிலா அது என்னவாக இருக்கும் என்று ஆவலாய்ப் பார்த்துக் கொண்டு இருந்த வேளையில் நிலாவின் இதயத்துடிப்பு ஒரு நிமிடம் நின்று போய்விட்டது. திடீர் என மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். அந்தச் சம்பவம் நிலாவின் அம்மாவை ஒரு நிமிடம் உலுப்பி எடுத்தது.

நிலாவின் அம்மாவின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு தேவாவும், ஜோதியும் விரைந்து சென்றனர். மயக்கம் தெளிந்து எழுந்த நிலா கதறி அழத் தொடங்கிவிட்டாள். காரணம் அந்தப் புகைப் படத்தில் இருந்தது ஆதவும் இன்னொரு பெண்ணும். நிலாவால் அதை நம்பவே முடியவில்லை. உடனே நிலா அழுது கொண்டே "உங்களுக்கு எப்படி இந்தப் படம் கிடைத்தது" என்று ஒரு வித சந்தேகத்தோடு கேட்டாள்.

"நீ அவனை காதலிக்கிறாய் என்று தெரிந்தும் நான் பக்கத்து வீட்டு ரமணன் அண்ணாவிடம் அவனைப் பற்றி ஆராயச் சொன்னேன். அப்போதுதான் ஆதவ் பெண்களை ஏமாற்றும் பொறுக்கி என்பதை சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள் என்று , சாட்சிக்கு இந்தப் படங்களைக் கொடுத்தான்" என்று கூறி முடித்தார்.

உடனே நிலா அவளின் அம்மாவின் காலில் விழுந்து "அம்மா என்னை மன்னித்துவிடுங்கள். நான் இனிமேல் நீங்கள் சொல்வதைத் தான் கேட்பேன்" என்று அழுதாள்.

கண்களில் கண்ணீர் வழிய நிலாவை ஆறுதல் சொன்னார் நிலாவின் அம்மா.

மறுநாள் காலை பாடசாலைக்கு நடந்து சென்ற நிலா, ஆதவை பார்த்து மனதுக்குள் அழுகையும், கோபமும் நிறைந்தவாறு திட்டிக்கொண்டு சென்றாள்.

ஆதவ், நிலாவுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்துக்கொண்டு, "ஏய்! நிலா என்ன பார்த் தும் பார்க் காமல் போகின்றாய்?" என்று கத்திக் கொண்டு பின்னால் ஓடினான். உடனே நிலா திரும்பி "இன்னொரு தடவை உங்களை எனக்குப் பின்னால் பார்த்தால் உங்களை ஒன்றும் செய்ய மாட்டேன். ஆனால் நான் தற்கொலை செய்துவிடுவேன்" என்று சொல்லிவிட்டு ஓடிப் போனாள்.

நிலா, ஏன் இப்படிச் செய்தாள் என்று புரியாமல் ஆதவ் தவித்தான். இது தான் சமயம் என்று நினைத்து நிலாவின் அம்மா நிலாவை ஆஸ்திரேலியா அனுப்பத் தயாரானார். ஆனால் இது எதுவும் தெரியாமல் பச்சைப் பூச்சியைப் போல மனதுக்குள், தான் ஏமாந்துவிட் டோமே என்று தவித்தாள் நிலா.

அது ஒரு சனிக்கிழமை. நிலாவின் வீட்டுக்கு நிலாவின் பெயரில் ஒரு தபால் வந்திருந்தது. நிலா, என்னவாக இருக்கும் என்ற வியப்போடு போய் அதை வாங்கினாள். ஆனால் அது என்ன கடிதமாக இருக்கும் என்று நிலாவின் அம்மா வுக்கு நன்றாகவே தெரியும். கடிதத் தைப் பிரித்துப் பார்த்தாள் நிலா. (தொடரும்)

# எல்லா உரிமையும் உனக்கும் இருக்கிறது...

■ அ.பிரேமினி.

சமுதாயம் கண்ணுக்குப் புலப்படாத ஒரு கற்பனை உலகத்தில் பெண்ணை வெகு உயரத்தில் தூக்கி வைத்துக் கொண்டாடி வந்திருக்கிறது. ஆனால் நடைமுறை வாழ்க்கையில், யதார்த்தத்தில் பெண்களைச் சமமாகப் பாவிக்க முன் வரவில்லை. விண்ணை பெண்ணென் கிறார்கள். மண்ணையும் பெண்ணென் கிறார்கள். நதியையும், மதியையும், கடவுளும் பெண்ணென்கிறார்கள். ஆனால் தன்னுடனே குடித்தனம் நடத் தும் பெண்ணை மட்டும் சக உறவாகப் பார்க்கத் தெரியவில்லை.

மனிதன் முதல் முதல் கற்ற தொழில் வேட்டையாடுதல். வேட்டையாடித் திரிந்த காலத்தில் கூடப் பெண்ணின் கைதான் ஓங்கி இருந்திருக்கிறது. அன்றெல்லாம் பெண் இரண்டாவது பாலினமாகவோ, இரண்டாம் பட்சமாக இருந்திருக்கவில்லை. அவளுக்கு கொடுத்த முக்கியத்துவதுவமும் அவ ளது வீரமுமே அதற்குச் சான்று. அப் பொழுது முதலே பெண்ணின் பெருமையை சகிக்காத ஆண்கள் அடுத்த புராண இதி காச காலத்திலிருந்தே பெண்ணை அடி மைத்தனம் செய்ய ஆரம்பித்திருக்க வேண்டும். அடுக்களையிலும் படுக்கை யறையிலும் பூட்டிவைக்க ஆரம்பித்தி ருக்க வேண்டும். அன்று தொடங்கி இன்று வரைக் கும் சுயநலம் மிகுந்த தன் ஆதிக்கக் கொடியை பெண்ணி னத்தின் மீது நிலைநாட்டிக்கொண்டிருக் கும் இந்த சமுதாயத்தின் திறமை மீது எனக்கு கொஞ்சம் ஆச்சரியம்தான்.

அன்று தொட்டு ஆணானவன் எழுத்து உரிமையைத் தான் எடுத்துக் கொண் டான். அரசியல் உரிமையையும் ஆண் வர்க்கத்துக்கு மட்டும் என்றான். அவனே பெண்ணும் சேர்த்துச் சட்டங்கள் இயற் றினான். தன் சுய நலத் திற்கெனவே அவற்றில் பெண்களை அடக்கி வைத் தான். பிள்ளைபெறுவதும் அடுப்பூது வதும் மட்டுமே பெண்களின் பணியாக நேற்றுவரை இருந்திருக்கிறது. இன்றும் கூட அனை வரும் அந்த நிலையி லிருந்து மீண்ட பாடில்லை.

பழங்காலத்திலிருந்தே தொடர்ந்துவந்த பெண் சமுதாயத்தின் மீதான அடக்கு முறைகளும் குற்றங்களும் சில புரட்சிக் குரல்களால் களையப்பட்டாலும் காலத் துக்கு ஏற்றபடியான புதிதுபுதி தான அநீதிகள் பெண்கள் மீது திணிக் கப் பட்டுக்கொண்டே தான் இருக்கின்றன.

இதில் குறிப்பிடத்தக்க விசயம் என்ன வென்றால் பெண்ணை கொண்டே பெண்ணை அழிக்கும் வித்தை. இது தான் இன்றைய இருபத்தியோராம் நூற் றாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்த மனித சமுதாயத்தின் பெண்ணி னத்தின் மீதான புதிய சாதனை. நாகரிக வளர்ச்சியில் இந்த கொடுமைகள் இன்று கொஞ்சம் மறைவது போல் தோன்றி னாலும் காலத்திற்கு ஏற்றபடி பெண்ணி னத்தின் மீதான புதிய பிரச்சினைகள் தோன்றிக்கொண்டுதான் இருக்கின் றன. எப்பொழுதுமே இந்த பெண் குலத்தின் மீதான அடக்குமுறைகளும் அநீதிகளும் வேரறுக்கப்படுவதில்லை. காலத்திற்கேற்ப புதியதாய் அவதாரம் எடுக்கின்றன.



பொதுவாகவே இந்த சமூகம் 'ஒவ் வொரு ஆணின் வெற்றிக்கு பின்னும் ஒரு பெண் இருப்பாள்' என சொல்லி பெருமைப்பட்டுக்கொள்ளும். எனக் கென்னவோ இந்த வாக்கியம் கேட்கும் பொழுதெல்லாம் பெண்ணின் வெற் றியை ஆண்கள் தட்டிப்பறித்து பெரு மைப்பட்டுக்கொள்வதாக தோன்றும். அதென்ன வெற்றிக்கு பின்னால்?, அதாவது, வெற்றி ஆணுக்குத்தான் வேண் டும். ஆனால் அதற்கு சொந்தக்காரி அந்த ஆணுக்குப் பின் நிற்க வேண்டும் என்பதா அதன் உட்கருத்து? வேண்டு மென்றால் பெண்ணையும் சமமாய் பாவித்து ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னா லும் ஒரு ஆண் இருந்து பார்க்கட்டுமே. பெண்கள்தான் இன்று அனைத்து துறை களிலுமே கால் பதித்து விட்டார்களே, பெண்ணுரிமை கிடைத்தாயிற்றே என. நான் இல்லையென்றும் சொல்ல வில்லை. ஆனால் நாமே இமாலய உயரம் ஏறவேண்டி யிருக்க அவர்கள் ஏறியிருப்பது முதல் சில படிகளே என்றுதான் சொல்கிறேன்.

இன்றும் தனது ஆசிரிய மனைவியின் சம்பளத்தில் குடும்பம் நடத்த, வீட்டில் சும்மாவே முடங்கிக் கிடக்கும் கணவர் எங்கள் அண்டை வீட்டிலே உண்டு. இதை பெண்ணுரிமையென எப்படி சொல்ல இயலும்?

இன்றைய சமுதாயத்தின் பெண்ணினமே! ஒவ்வொரு முறையும் உங்களுக்கு குரல் கொடுக்க ஏன் பாரதி தேடுகிறீர்கள். ஆமை போல் ஆண்களின் அதிகார ஓட்டுக் குள் இன்னும் எத் தனை காலம் அடங்கியே இருக்கப் போகிறீர்கள்?

உலகின் அனைத்திலுமே உங்களுக்கும் சம உரிமை உண்டென முதலில் உணர்ந்திடுங்கள். வீடும் அலுவலக மும் தவிர உலகில் இருக்கும் அனைத் தையும் எப்பொழுது கற்றுக்கொள்ளப் போகிறீர்கள்?

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாவருக்கும் அஞ்சாத ஞானச்செருக்கும்

இங்கே பிறக்கும் ஒவ்வொரு பெண் ணுக்கும் சொந்தமாகட்டும். அடங்கிக் கிடப்பதும் முடங்கிக் கிடப்பதுமா கலாசா ரம்? வீட்டுப்படி தாண்டா திருப்பதா பண்பாடு? சுய ஒழுக்கத்து டனான எவ ருக்கும் தொடு வானம்வரை சென்றுவர உரிமையுண்டு. புதுமைப் பெண்களாய் வீறு கொண்டு நடவுங்கள். இயற்கை கூட உன் திறமை அறிந்து தான் சமூக வளர்ச் சிக்கான பெரும் பொறுப்பான தாய்மையை உன்பால் கொடுத்துள்ளது. ஆணுக்கு நாடென்றும் பெண்ணுக்கு வீடென்றும் பிரிக்கப்பட்ட பழைய சட்டம் உடைத் தெறியப்படட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்தோட்ட கறுவாச் செய்கை


*திருமதி ச.கி.நி.கமலராஜன்,*
*விவசாயத் திணைக்களம்*
*யாழ்ப்பாணம்.*

யாழ்ப்பாண விவசாயத் திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 3 பயனாளிகளுக்கு 75 கறுவாச்செடிகள் வீட்டுத் தோட்டங்களில் நடுகை செய்வதற்கு வழங்கப்பட்டன. இதனை விட சில ஆர்வமுள்ளவர்களினால் தமது வீடுகளில் ஒன்று அல்லது இரண்டு கறுவாச் செடிகள் நடப்பட்டு பராமரித்து வரப்படுகின்றன.

கறுவாவின் தரத்தை தீர்மானிப்பதில் மண் மற்றும் காலநிலைக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. கறுவா சகல மண் வகைகளிலும் அயனமண்டல காலநிலை நிலைமைகளைத் தாங்கி வளரக் கூடிய பயிராகும். இதன் வளர்ச்சிக்கு 20-30 பாகை செல்சியஸ் வெப்பநிலையும், 1,250-2,500 மில்லி மீற்றர் ஆண்டு மழை வீழ்ச்சியும் போதுமானதாகும்.

விதை, நாற்று, தண்டுத்துண்டம் மூலம் இனம்பெருக்கக் கூடிய பயிராகும். நடுவதற்குத் தேவையான தரமான 8-10 மாத வயதுடைய நாற்றுக்களை பதிவுசெய்த நாற்று உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். மழைகாலம் ஆரம்பிப்பதற்கு சிறிது முன் நாற்றுக்களை நடுகை செய்வது சிறந்தது. நடுகை இடைவெளியாக பயிர் வரிசைகளுக்கிடையில் 1.2 மீற்றர் (4 அடி) இடைவெளியும், பயிர்களுக்கிடையில் 0.6 மீற்றர் (2 அடி) இடைவெளியும் விட்டு ஒரு குழியில் மூன்று நாற்றுக்கள் உள்ளவாறு நடவேண்டும். நாற்றுக்குழி 1 அடி நீள, அகல, அழம் கொண்டதாக வெட்டப்பட்டு அதற்குள் 1 பங்கு மாட்டெருவும் 1 பங்கு மண்ணும் இடப்பட்டு நிரப்பப்பட வேண்டும்.

செடியின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் பசளைப் பிரயோகம் முக்கியமானதொன்றாகும். ஒரு நடுகைக் குழியில் நட்டு முதலாம் வருடத்தில் யூரியா-7 கிராம், பாறைப்பொசுபேற்று-3.5 கிராம், மியூறேற்றுப் பொட்டாசு-3.5 கிராம் என்பன இடப்படல் வேண்டும்.





இரண்டாம் வருடம் முதலாம் வருடத்தின் இரு மடங்கும் மூன்றாம் வருடமும் அதன் பின்பும் முதலாம் வருடத்தின் மூன்று மடங்கும் பசளை இட வேண்டும். இந்தப் பசளைகளை அரைவாசியாகப் பிரித்து வருடத்தில் இரு தடவைகள் காலபோக, சிறுபோக மழை ஆரம்பித்ததுடன் இட வேண்டும். பயிரின் அடியிலிருந்து 1 அடி தள்ளி வட்டமாக பயிரைச் சுற்றி மண் ஈரமாகவுள்ளபோது பசளை இட்டு மண்ணுடன் கலந்து விட வேண்டும். வருடாந்தம் நடுகைக் குழிக்கு பசளையிடுவதற்கு 2-3 மாதம் முன் 35 கிராம் டொலமைற்றை பிரயோகிப்பதன் மூலம் இலைகள் வெளிறி மஞ்சளாவதைத் தவிர்க்கலாம்.

செடிகளை ஆரம்பத்தில் கத்தரித்து பயிற்றுவிப்பதன் மூலம் தொடர்ந்து தரமான கறுவாப்பட்டைகளை தரக் கூடிய செடியை உருவாக்கலாம்.


நாற்று நட்டு 2-3 வருடங்களின் பின் அல்லது தண்டின் அடி 4-6 சென்ரிமீற்றர் விட்டத்தைக் கொண்டிருக்கும் போது நிலமட்டத்திலிருந்து 4-6 சென்ரிமீற்றர் உயரத்தில் 30 பாகை சரிவில் தண்டை நேர்த்தியாக வெட்டுதல் வேண்டும். மூன்று நேரான ஆரோக்கியமான விரைவாக வளரும் தண்டுகளை விட்டுவிட்டு ஏனைய சுருண்டு வளரும். குறைவளர்ச்சியடைய தண்டுகளை அகற்ற வேண்டும். வெட்டியபின் 1-2 வருடத்தின் பின் இந்தத் தண்டுகள் அறுவடைக்கு தயாராகிவிடும். ஒன்றுமாறி ஒன்றாக இந்தத் தண்டுகளை வெட்டி ஒவ்வொன்றிலும் 3 தண்டுகளை வளர விட வேண்டும். இதனால் 8-10 வயதுடைய கறுவாப் பயிரில் ஒரு வருடத்தில் 5-8 தண்டுகளை அறுவடைசெய்ய முடியும். ஒவ்வொரு வெட்டும் உள்நோக்கி 30 பாகை சரிவில் இருப்பதன் மூலம் வெளிநோக்கிய செடிப் பரம்பலை உருவாக்கலாம்.

முதிர்ந்த தண்டுகளின் அறுவடை மழைகாலம் முடிந்தவுடன் மற்றும் உருவாகிய இளம் இலைகள் வைரமாக வந்தவுடன் மேற்கொள்ளப்படும். இந்தக்காலம் பட்டையை உரிப்பதற்கு இலகுவாக இருக்கும். நல்ல பயிர் முகாமைத்துவத்தை மேற்கொண்டால் வருடத்துக்கு 2 இற்கும் மேற்பட்ட தடவைகள் அறுவடை மேற்கொள்ளலாம்.

அறுவடைசெய்த தண்டின் நுனி மற்றும் கிளைகள் மற்றும் மொக்குகளை அகற்ற வேண்டும். தண்டுகளை ஒரு நாள் குவித்து சாக்கால் மூடி வைத்து பின் அடுத்த நாள் வெளிப்பட்டையை உரசி அகற்ற வேண்டும். மரக்கட்டை அல்லது செப்பு அல்லது பித்தளை கம்பியால் (Rod) உட்பட்டை வைரமான தண்டுப் பகுதியிலிருந்து பிரியும் வண்ணம் நன்றாக அமத்துதல் (Rubbing) வேண்டும். அமத்தும் போது சாறு வெளியேறும். பின் கூரான கத்தியால் தண்டின் எதிரான இரு பக்கங்களில் சமாந்தரமாக கீறி கத்தியின் கூரால் பட்டையைப் பிரித்து எடுக்க வேண்டும். பின் நிழலான இடத்தில் பட்டைகளை அடுக்கி காய வைக்க வேண்டும். பட்டைகாய்ந்து வளைந்து வரும். இந்தப் பட்டைகளை எமது வீட்டுப் பாவனைக்கு பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் ஏற்றுமதி செய்யும் நோக்கமாயின் பட்டைகளின் நீளங்களுக்கு ஏற்ப தரம் பிரித்து நீண்ட பட்டைகளுக்குள் சிறிய பட்டைகளைச் செருகி கட்டுக்களாகக் கட்டி ஏற்றுமதி செய்ய வேண்டும்.

கறுவாப் பட்டையை வாசனைப் பொருளாகப் பயன்படுத்துவது மட்டுமல்லாது பட்டை, இலை, வேர் என்பவற்றிலிருந்து மூன்று வகையான எண்ணெயையும் பிரித்தெடுக்கமுடியும். இதன் இலையை அவித்து பெறப்படும் சாறு வீட்டுத் தோட்டத்தில் பீடைநாசினியாகவும் பயன்படுகின்றது. வீட்டுத்தோட்ட மளவில் செய்யும் கறுவாப் பயிரிலிருந்து எமது அன்றாடத் தேவைகளுக்கு தேவையான கறுவாவை நாமே உற்பத்தி செய்துகொள்வோம். ★

# பயத்தை விரட்டுவோம்



அது என்ன? அது எங்கிருந்து வருகிறது? எங்கு தோன்றுகிறது? அதன் தன்மை என்ன? அதன் விளைவு என்ன? அதைத் தவிர்க்க என்ன வழி? இப்படி நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. உங்களைக் கேட்டால் நீங்கள் சொல்வீர்கள் பயம் என்பது ஒரு நினைப்பு என்று.

அதன் உற்பத்தி இடம் ஏது? சகல எண்ணங்களும் மனதில் தோன்றுகின்றன, காரணம் மனம் என்பதே ஒரு இடைவிடாத எண்ணங்களின் சேர்க்கை.

அது நம்முள் எழும் ஒரு அவநம்பிக்கையின் பிரதிபலன். ஒரு நாய் குரைத்துக் கொண்டு நம்மை நோக்கி ஓடி வருகிறது. அதைக் கண்டதும் நாம் அது நம்மைக் கடித்துவிடுமோ என்ற நினைப்பில் (பயத்தில்) ஓர் அவநம்பிக்கை பிறக்கிறது. நம் தைரியம் நம்மை விட்டு விலகுகிறது. நாம் ஓடத் தொடங்குகின்றோம். நாயும் வெகு வேகவேகமாக எம் பின் வருகிறது. அதன் விளைவு?

நம் தேகம் நடுங்குகிறது. நம்மில் ஒரு தரம் சூடு பரவுகிறது. நமக்கு வியர்க்கிறது. நம் நாடி வேகமாகத் துடிக்கிறது. மூச்சு வாங்குகிறது. கடைசியில் நாம் செயலற்றுப் போகின்றோம். ஓட முடியாமல் நின்றுவிடுகின்றோம். இதைப் பார்த்த நாய் தன்னைக் கல்லால் அடிப்பார்களோ என்று பயந்து பின் நோக்கி ஓடுகிறது. அப்போது நமக்குத் தன்னம்பிக்கை பிறக்கிறது. நம் தேகத் துடிப்பு குறைகிறது. சரியாக மூச்சுவிட முடிகிறது. பயம் அகலுகிறது.

இப்போது நாம் உணர்வது என்ன? நாய் நம்மைக் கடிக்குமோ என்ற பொய் எண்ணம் நம்மை பயத்தில் ஆழ்த்தியது.

அது திரும்பிப் போனதும் நமக்கு உண்மை விளங்குகிறது. இறப்பில் எல்லோருக்கும் பயம் வருவது சகஜம். காரணம் இறப்பு என்பது நம் உலக அனுபவங்களின் முடிவு. நம்மால் அதை நினைத்துக்கூடப் பார்க்க இயல்வதில்லை. காரணம், நாம் உலக வாழ்க்கையே நிஜம் என்ற தவறான கருத்தில் இருக்கிறோம். உலக வாழ்க்கை தற்காலிகமானது. அது ஒரு மாயை, அதற்கு முடிவு உண்டு என்ற எண்ணம் நமக்கில்லை.

கனவில் நாம் இறப்பதாகக் காண்கிறோம். அப்போது நமக்குக் கனவிலேயே பயம். விழிப்பு வந்து பார்த்தால் நம் உடல் ஆடுகிறது, வியர்க்கிறது, நம் நெஞ்சு பதைக்கிறது. பிறகு அது ஒரு கனவே என்ற உண்மை புரிந்த பிறகு நாம் சமநிலைக்கு வருகிறோம்.

கனவில் வரும் நினைப்புகள் பொய்யே என்ற உண்மை நாம் உணர்ந்தபொழுது புரிகிறது. கனவில் புரிவதில்லை. காரணம், அப்போது நாம் ஒரு பொய் வாழ்க்கையில் இருந்தோம். விழித்திருப்பது நிஜ வாழ்க்கை என்றும் கனவு பொய் வாழ்க்கையென்றும் தெரிகிறது.

உங்களுக்குத் தேர்வு காலத்தில் படிக்கும் போது சித்தி அடைவோமா? என்ற திகில் எழுகிறது. ஏன்? நீங்கள் நன்றாகப் படிக்கவில்லையேல் உங்கள் மேலே உங்களுக்கு சுயநம்பிக்கை இல்லாமல் போகிறது. அதனால், இந்தப் பயம் உங்களைத் தாக்குகிறது. நீங்கள் நன்றாகப் படித்து சுயநம்பிக்கையுடன் தேர்வு எழுதினால் நிச்சயம் சித்தி அடைவீர்கள்.

பொய் நினைப்பு, அவநம்பிக்கை, உண்மை உணராத நிலை இவைகளே நம் பயத்தின் அடித்தளம்.

எப்பொழுதும் நல்லதையே நினைக்க வேண்டும். கெட்ட நினைப்பை அகற்ற வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு நம்மேல் சுய நம்பிக்கை எழும், அப்பொழுது பயம் நம்மைத் தாக்காது. சுருங்கச் சொன்னால் பயம் என்பது மனதில் எழும் ஒரு கெட்ட எண்ணமே. அதன் அடித்தளம் சுயநம்பிக்கை இல்லாமலிருப்பது, கெட்ட நினைப்புகள் நம்மைத் தாக்குவது, உண்மையை உணராத நிலை.

பயம் நம்மைத் தாக்கினால் உண்மை ஏது பொய் ஏது என்ற தரம்பிரித்துப் பார்க்கும் சக்தியை இழக்கிறோம்.

அது நம் உடல், மனம், புத்தி இவைகளை பாதிக்கிறது. நாம் இந்த மூன்று நிலையிலும் செயலிழந்து போகிறோம்.

இதைத் தவிர்க்க, எந்தவொரு காரியமானாலும் அதை சீர்தூக்கிப் பார்த்து அதன் உண்மை நிலையை உணர்ந்து, தைரியமாக வருவதை எதிர் கொள்ள நம்மைத் தயார் செய்து, செய்யும் காரியத்தில் முழு மனதைச் செலுத்தி, விளைவு நன்றாகவே அமையும் என்ற சுயநம்பிக்கையுடன் சரிவர அந்தக் காரியத்தில் ஈடுபடுவோமானால், அதனால் வரும் பயன் நல்லதாகவே அமையும். எண்ணத்தில் தெளிவும், உள்ளத்தில் உறுதியும் இருந்தால் பயம் நம்மை நெருங்காது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையுணர்ந்து படி

என் பாசமிகு குழந்தைகளே!

நீங்கள் ஒன்றை அவசியம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் படிப்பதற்காக, உங்கள் முன்னேற்றத்துக்காக உங்கள் பெற்றோர்கள் படும் கஷ்டங்கள் என்ன என்று தெரியுமா?

தாங்கள் என்ன கஷ்டப்பட்டாலும் தங்கள் குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்க வேண்டும் என்பதையே இலட்சியமாகக் கொண்டு பாடுபடுகின்றனர்.

அவர்கள் படும் கஷ்டத்தை நீ அறிந்திருக்கிறாயா? நீ உணர்ந்திருக்கிறாயா?

அதை நீ அறிந்தால், உணர்ந்தால் நன்றாகவே நீ படிப்பாய்.

நன்றாகப் படித்து, பெற்றோரின் துயரைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் வளரும்.

சொல்லப் போனால், அத்தகைய எண்ணத்தை நீங்கள் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

வயதான காலத்தில் நீ உன் பெற்றோரைக் காப்பாற்ற வேண்டும் என்பது உன் கடமை. அவர்கள் உனக்காக பட்ட கஷ்டத்துக்கு நீ நன்றி செலுத்த வேண்டியது அவசியம். இல்லாது போனால் அது மகாபாவம்.

ஆனால், அதையெல்லாம் எதிர்பார்த்து அவர்கள் உன்னைப் படிக்க வைக்கவில்லை என்பது உண்மை.

தங்கள் கஷ்டம் உங்களுக்குத் தெரியக் கூடாது என்றுதான் அவர்கள் நினைப்பார்கள்.

ஆனால் அவர்கள் நிலையினை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்.

நன்றாகப் படியுங்கள்.

சிறுவயதில் என் தாய், என் அருகில் அமர்ந்து கொண்டு,

**" சீனிச் சர்க்கரை சர்க்கரை- நீ**
**சர்க்கரைக் கட்டியடா,**
**சர்க்கரை போல் என் உள்ளத்தில்**
**இனிப்பைத் தருபவன் நீயடா"**

என் உள்ளத்தில் இனிப்பைத் தருவது போல் இந்த உலகுக்குக்கு நீ தர வேண்டாமா?

"படி.. நல்ல அறிவார்ந்த நூல்களைப் படி" என்பார்கள்.

அன்று, மண்ணெண்ணெய் விளக்கு ஒளியில் படித்துக் கொண்டிருந்த எனக்கு, என் அன்னை தந்த போதனைதான், இன்று அன்னை ஸ்ரீ யோகமாயாவை உபாசிக்கின்ற பாக்கியத்தைக் கொடுத்துள்ளது.

கல்வியில் ஆர்வம், தளராத முயற்சி, குடும்பச் சூழ்நிலை, பெற்றோரின் கஷ்டம் இவற்றை உணர்ந்தால் மண்ணெண்ணெய் விளக்கொளியில், தெரு விளக்கின் வெளிச்சத்தில் கூட நன்றாகப் படிக்கலாம்.

ஏழ்மை, வறுமை என்பதெல்லாம் கல்விக்குத் தடையல்ல என்பதை உணர்ந்து கொள்.

வசதி வாய்ப்புகள் மட்டுமே ஒருவனுக்குக் கல்வியைத் தந்துவிடாது.

ஆர்வம், முயற்சி இரண்டும் வேண்டும்.

உன்னால் முடியாது என்று ஏன் நினைக்கிறாய்?

உன்னால் முடியும் என்று நம்பு.

அது உன் மனதுக்குத் தரும் புதுத் தெம்பு.

இன்று எத்தனையோ ஏழை மாணவர்கள் நன்றாகப் படித்து, மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறுகிறார்கள். வசதி வாய்ப்புகள் இருந்தும் சிலரால் ஏன் படிக்க முடியவில்லை?

கல்வி என்பது கடைச்சரக் கல்ல; காசு கொடுத்து வாங்கு வதற்கு.

ஆர்வம் வேண்டும். அறிவைத் தேடும் முயற்சி வேண்டும்.


இவை இரண்டையும் வளர்த்துக் கொள். நன்றாகப் படி.

பட்டொளி வீசிப் பறக்கட்டும் உன் வெற்றிக்கொடி..



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# கொழும்புத்துறையில் முளை கொண்ட சவேரியார் குருத்துவக் கல்லூரி



(கடந்தவாரத் தொடர்ச்சி......)

எஸ்.யேசுதாஸ்

ஒவ்வொரு நாட்டிலும் பிரதேசத்திலும் வாழும் தனித்துவமான இன, மொழி, கலாசாரம் கொண்ட இறை மக்களின் ஆன்மிக மேம்பாட்டுக்கென அவ்வப் பிரதேச பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கத் தக்க வகையில் குருத்துவக் கல்லூரிகளை உருவாக்கலாமென 2 ஆம் வத்திக்கான் சங்க சட்ட ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய யாழ். ஆயர் அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டார்.

கொழும்புத்துறையில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாக இயங்கி பின்னர் செயற்பாடின்றி இருந்த ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான வளாக கட்டடத் தொகுதியில் 1980 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி யாழ்.ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

> **1980 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி யாழ்.ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.**

இயேசு தம் பணி வாழ்வை ஆரம்பித்த போது கடலில் வலை வீசிக்கொண்டிருந்த சீமோன் பேதுரு, அந்திரேயா மற்றும் யாக்கோபு, யோவான் ஆகியோரை "என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" என அழைத்து சீடத்துவ உருவாக்கம் செய்தார். அத்தோடு நின்று விடாது உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று மறைபரப்புப் பணிப் பொறுப்பை வழங்கினார். என் ஆடுகளைப் பேணி வளர்த்து என்னைப் பின்தொடர்ந்து மேய்ப்புப் பணியை நிறைவேற்றுங்கள் என்னும் இயேசுவின் அழைப்புக்கிணங்க குருத்துவம் என்னும் இறைபணி தொடர்ந்து வருகிறது.

மேலும் இறுதி இரவுணவின் போது இயேசு அப்பத்தையும் இரசத்தையும் தமது உடலாகவும், உதிரமாகவும் சீடர்களுக்குப் பகிர்ந்தளித்து நற்கருணை என்னும் திருவிருந்தை ஏற்படுத்தி 'இதை என் நினைவாகச் செய்யுங்கள்' எனப் பணித்தமை குருத்துவத்துக்கு இயேசு வழங்கிய சிறப்பு அங்கீகாரமாகத் திகழ்கிறது.

இவ்வாறு புனிதமும், தனித்துவமும், இறைவழிநடத்தலும் நிறைந்த குருத்துவப் பணியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்களுக்கென [illegible] கல்விக் கல்லூரியை [illegible] இலங்கை ஆயர் மன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டதையடுத்து கொழும்புத்துறையில் அமைப்பதென யாழ். ஆயரால் முடிவு செய்யப்பட்டது.

இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பகுதியில் வாழ்ந்த சதாசிவம் என்பவரிடம் யாழ்.மேற்றிராசனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 10 ஏக்கர் காணியில் புனித சூசையப்பர் ஆலயம், கொழும்புத்துறை றோ.க.சாதனாப் பாடசாலை, கத்தோலிக்க ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பயிற்சிக் கலாசாலை என்பன யாழ் ஆயரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்தது.

பாடசாலைகள், கல்விசார் நிலையங்களை அரசு சுவீகரித்த போது இந்த ஆசிரிய பயிற்சிக்கலாசாலையும் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. அப்போது என்றாவது ஆசிரிய கலாசாலை செயற்பாடு இந்தப் பகுதியில் முடிவுறுமாயின் மீண்டும் அதை ஆயரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்டமையின் காரணமாக அரசு இந்தக் கலாசாலையை மூடியபோது ஆயரிடம் திருப்பி கையளிக்கப்பட்டிருந்தது.

பின்னர் சிலகாலம் பாவனையின்றி இருந்த இந்தக் கட்டடத்தை நவீனமயப்படுத்தி புனரமைத்ததுடன் மேலும் சில கட்டடங்களை அமைத்து 1980 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி அப்போதைய யாழ்.ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

எளிமைத்தனமும், தலைசிறந்த மறைபரப்பு போதகப் பணியும் கொண்டு இறைபணிபுரிந்த புனித பிரான்சிஸ் சவேரியாரின் பெயரில் யாழ்.மறைமாவட்டத்தில் குருத்துவக் கல்லூரி உதயமானது. 5 குருமட மாணவரோடு முதலாவது தொகுதி கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டது.

சவேரியார் குருமடத்தின் முதலாவது அதிபராக அனுபவம் வாய்ந்த மறை அறிவிப்பாளரும் சிறந்த நிர்வாகியுமான காலஞ்சென்ற அருட்தந்தை பிலிப் பொன்னையா அடிகள் நியமிக்கப்பட்டார். இவரது கண்காணிப்பிலிருந்த ஆளுமை, ஒழுங்கமைப்பான வழிகாட்டல்கள் மிக விரைவான வளர்ச்சிக்கு அடித்தளமிட்டன.

அதேவேளை யாழ்.பிரதான வீதியில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவந்த புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் குருத்துவத்துக்கென இணைந்த மாணவர்களை , உயர்தரம் வரை கல்வி புகட்டிய பின் குருத்துவ உருவாக்கலுக்காக கண்டிக்கு அனுப்பும் நடைமுறை இருந்து வந்தது. [வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி டிப்போ காணி அபகரிப்பு கண்டித்து மனு அனுப்பி வைப்பு

கிளிநொச்சி, மே 20
கிளிநொச்சி டிப்போ காணியின் ஒரு பகுதியில் தனியார் பஸ் நிலையம் அமைப்பதற்குரிய காணியை அபகரித்து கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சபை ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு அமைப்புகளுக்கு மனுக்களை அனுப்பி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி டிப்போவுக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதி இராணுவத்தினரின் புனித பூமியாகவும், அதில் ஒரு பகுதி சிறுவர் பூங்காவுக்கும் என எடுக்கப்பட்டுள்ளன. மிகுதியாக இருக்கும் காணியில் தான் தற்போது கிளிநொச்சி டிப்போ இயங்கி வருகின்றது.

தற்போது டிப்போ காணியின் ஒரு பகுதியை தனியார் பஸ் நிலையத்தை அமைத்துக் கொள்ளும் அதேவேளை, டிப்போவை புதுமுறிப்புக்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இ.போ.ச.வின் கிளிநொச்சி சாலை ஊழியர்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர். அத்துடன் கடந்த 2010ஆம் ஆண்டு முதலாம் இலக்க சுற்றறிக்கையின்படி இ.போ.ச. வுக்குச் சொந்தமானதும் இ.போ.சவின் பொறுப்பில் இருக்கின்ற காணிகளையும் கட்டடங்களையும் அனுமதியின்றி கைப்பற்றுதல், பாவித்தல் சொந்தமாக்குதல் என்பன இடம் பெறாதபடி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இந்தச் சுற்றறிக்கையின் பின்னர் காணி அபகரிப்பு தொடர்பாக எந்தச் சுற்றறிக்கையும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் இவ்வாறு இந்தக் காணி அபகரிக்கப்பட்டு டிப்போவை நகரில் இருந்து நான்கு கிலோமீற்றருக்கு அப்பால் கொண்டு செல்வது தம்க்கும் இ.போ.ச. நிர்வாகத்துக்கும் தெரிவிக்கப்படவில்லை எனத் தெரிவித்து சுமார் 85 வரையான ஊழியர்கள் கையொப்பமிட்ட மனுக்களை இலங்கை ஜனாதிபதி மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோருக்கு தமது எதிர்ப்பை தெரிவித்து அனுப்பி வைத்துள்ளனர். (ந-6)

## முன்பள்ளி திறப்பு விழா



துணுக்காய், மே 20
முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிஞ்சியன்குளம் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் கிருஷ்ணபிள்ளையின் ஞாபகார்த்தமாக குடும்பத்தினரால் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட முன்பள்ளி திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.
முன்பள்ளி கட்டடத்தை அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களின் நாளைய வளர்ச்சி தலைவருமான நாமல் ராஜபக்ஷ நாடாவை வெட்டி திறந்து வைத்தார். சேவா வனிதா தலைவி டி.ஜி.குமுதினி பீரிஸ் பெயர் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார். (ந-415)

## கடும் மழையால் 5 வீடுகள் சேதம்


வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை கடும் காற்றுடன் பெய்த கனமழையினால் மரங்கள் சில சரிந்து வீழ்ந்ததுடன் வவுனியா அரபாநகர் பகுதியில் 5 குடும்பங்களின் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
இவ்வாறு வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் தெரிவித்தார்.
இந்தக் குடும்பங்களுக்குத் தேவையான அவசர உதவிகள் மேற்கொண்டுள்ளதாகவும் மேலும் வவுனியாவில் பாதிப்படைந்த பிரதேசங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-402)



கிளிநொச்சியில் யாழ். வணிகர் கழகத்தினரால் சகல வசதிகளுடன் கூடிய மகாதேவா சிறுவர் இல்லம் 3000சதுர அடி பரப்பிலும் 2½ கோடி ரூபா செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றது. (ந-ரி)

## இடரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுங்கள்

மன்னார், மே 20
மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் செயற்கை அவயவங்கள், சார்பு உறுப்புகள், நடமாடும் உபகரணங்கள் என்பவற்றை பொருத்தும் மேத்தா நிறுவனம் தற்போது நடமாடும் சேவையை வன்னியிலும் விஸ்தரித்துள்ளது.
இது தொடர்பாக மேத்தா அமைப்பின் தொடர்பு அதிகாரி சின்கிலேயர் பீற்றர் தெரிவித்ததாவது:-
வன்னியில் நாம் மேற்கொண்டிருக்கும் நடமாடும் சேவையின் மூலம் சுமார் 2000 பேர் பயனடைந்துள்ளனர்.
இவர்களில் 47 இளைஞர், 28 வயோதிபர்கள் 18 பெண்கள், 7 சிறார் கள் அடங்குவர்.



உதவி செய்ய ஆர்வமுள்ளவர்களால் 35 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
80 சிறார்கள் கை,கால்களை இழந்த நிலையில் தொடர்ந்து கல்வி கற்கப் போதிய வசதியின்றி உதவியை நாடியுள்ளனர்.
இவர்களில் ஒரு கால் அல்லது இரு கால்களை இழந்த 41 சிறார்களும் ஒரு கை அல்லது இரு கைகளை இழந்த 14 சிறார்களும் சார்பு உறுப்புக்கள் பொருத்த வேண்டிய 25 சிறார்களும் உள்ளனர்.
வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இந்தச் சிறார்கள் தமது கல்வியைத் தொடர மேத்தா நிறுவனத்தை நாடியுள்ளனர்.
இவர்களின் அடிப்படைத் தேவையான பாடசாலைக் கல்வியைத் தொடரவும், போசாக்கின்மையை பூர்த்தி செய்யவும், மேலதிக அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளவும் உதவிகளை செய்யவிரும்பும் தனிநபரோ, நிறுவனங்களோ எம்மோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார். (ந-12)

## கிளி. பன்னங்கண்டியில் வீடு உடைத்துத் திருட்டு

கிளிநொச்சி,மே 20
கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் வீடொன்று உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள், நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-
குறித்த தினத்தில் வீட்டின் உரிமையாளர் ஆலயத்துக்கு சென்றிருந்த சமயம் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள், வீட்டில் இருந்த 14 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகள், ஏனைய பொருள்கள் என சுமார் ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.
குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-6)

## கிளிநொச்சியில் 6,170 வரையான பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

### கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 20
கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 170 இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
வடமாகாண பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பான கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-
பெண் தலைமைத்துவ குடும்



பங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. இந்தக் குடும்பத்தில் வாழும் சிறுவர்களும் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். அத்துடன் எமது மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இவை இந்த மாவட்டத்தின் அபிவிருத்தியை பாதிக்கின்றன.
பெண்கள், சிறுவர்கள் தொடர்பான பிணக்குகளை தீர்க்க பிரதேச, மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளபோதும் இவர்களது பிரச்சினை முற்றாகத் தீரவில்லை. இதற்காக சமூகத்தவர் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.
எமது மாவட்டத்தில் பெண்கள், சிறுவர் உரிமைகளைப் பெறுவதில் விழிப்புணர்வு அற்றநிலை காணப்படுகின்றது. இதற்காக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் பெண்கள் பணியகமும் ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுத்தாபனமும் இணைந்து செயற்படும் வேலைத்திட்டம் பேருதவியாக அமையும். இது போன்ற திட்டங்கள் எதிர் காலத்திலும் தேவை. இத [illegible]

## கைத்தொழில் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

மாங்குளம்,மே 20
கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் கைத்தொழில் பயிற்சிக்கு இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இதில் தாதி உதவியாளர், கணினி வன்பொருள் தொழில்நுட்பம், தட்டச்சு பொறியியலாளர் போன்ற பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
பயிற்சி நெறியை பூர்த்தி செய்ய விரும்புவோர் 22.05.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ம-422)



## இரத்ததான நிகழ்வு



கிளிநொச்சி, மே 20
கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தினரின் இரத்ததான நிகழ்வு.
சர்வதேச செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையின் கரைச்சிப் பிரிவினரால், கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை இரத்ததானம் வழங்கப்பட்டது.
இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளை அலுவலகத்தில் கரைச்சிப் பிரிவின் தலைவர் தி.சிவரூபன் தலைமையில் இடம் பெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் தலைவர் உட்பட பிரிவு உறுப்பினர்கள், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம், மாவட்டசெயலகம், கரைச்சிப் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இரத்ததானம் செய்தனர். (ந -405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
20/05/2013

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். பணப் பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**இடபம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற் கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு பாராட்டு கிடைக்கும்.

**மிதுனம்:** உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். புதிய திட்டங்கள் நிறைவேறும்.

**கடகம்:** நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**சிங்கம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் ஏற்படும். சிலர் உதவிக் கேட்டு நச்சரிப்பார்கள். அரசுக் காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**கன்னி:** எங்கு சென்றாலும் நல்ல வரவேற்பு கிடைக்கும். பணப் புழக்கம் கணிசமாக உயரும். இள வயது நண்பர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**நாளை**

வைகாசி-07 செவ்வாய்க்கிழமை 21.05.2013
திதி: ஏகாதசி பி.ப. 05.34 வரை
நட்சத்திரம்: அத்தம் பி.இ. 02.02 வரை
சுபநேரம்: 10.22 - 11.52 வரை
இராகுகாலம்: 02.52 - 04.22 வரை

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**விருச்சிகம்:** புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**தனுசு:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வுமனப் பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். செய்நன்றி மறந்தவர்களை நினைத்து வருந்துவீர்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**மகரம்:** எடுத்த வேலையை முடிக்காமல் ஓயமாட்டீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்:** எதிர்பாராத பண வரவு உண்டு. உறவினர், நண்பர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மீனம்:** நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 6 | | | 1 | | |
| 7 | | | 5 | 3 | | | | 9 |
| | | 5 | | 9 | 2 | | | 7 |
| 5 | 3 | 1 | 2 | | | | 7 | |
| | 8 | | | | | | 9 | |
| | 7 | | | | 4 | 5 | 8 | 1 |
| 9 | | | 4 | 2 | | 7 | | |
| 8 | | | | 1 | 3 | | | 4 |
| | | 4 | | | 8 | | | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 8 | 6 | 4 | 7 | 1 | 2 | 5 |
| 7 | 2 | 6 | 5 | 3 | 1 | 8 | 4 | 9 |
| 1 | 4 | 5 | 8 | 9 | 2 | 6 | 3 | 7 |
| 5 | 3 | 1 | 2 | 8 | 9 | 4 | 7 | 6 |
| 6 | 8 | 4 | 1 | 7 | 5 | 3 | 9 | 2 |
| 2 | 7 | 9 | 3 | 6 | 4 | 5 | 8 | 1 |
| 9 | 1 | 3 | 4 | 2 | 6 | 7 | 5 | 8 |
| 8 | 5 | 2 | 7 | 1 | 3 | 9 | 6 | 4 |
| 4 | 6 | 7 | 9 | 5 | 8 | 2 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வெளிநாட்டு மோகத்தால் பணத்தை இழந்த இளைஞர்கள்

சங்கானை, மே 20

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த எட்டு இளைஞர்களை ஏமாற்றி ரூபா 12 லட்சத்தை மோசடி செய்துள்ளனர் கோப்பாயைச் சேர்ந்த தம்பதிகள்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கோப்பாயைச் சேர்ந்த இருவர் தம்பதிகளாக சங்கானைக்கு வந்து தாங்கள் வெளிநாட்டுக்கு அனுப்பும் முகவர்களாகச் செயற்படுவதாகவும் முற்பணமாக ரூபா ஒன்றரை லட்சம் தருமாறும் வெளிநாட்டுக்குச் சென்ற பின் மிகுதிப் பணத்தைத் தருமாறும் கூறி ஆஸ்பத்திரி வீதி சங்கானையைச் சேர்ந்த எட்டு இளைஞர்களிடம் ரூபா பன்னிரண்டு லட்சம் பெற்றுள்ளனர்.

இந்த மாதம் அவர்களை அனுப்புவதாகவும் அதற்காகக் கொழும்புக்கு வருமாறும் கூறிவிட்டுத் தம்பதிகள் கொழும்புக்குத் திரும்பினர். இளைஞர்கள் எட்டுப் பேரும் கொழும்புக்குச் சென்றனர்.

ஆனால் அவர்களில் நான்கு பேருக்குச் சிங்கப்பூர் செல்வதற்கான சாதாரண சுற்றுலா விசா விமான ரிக்கெட்டைக் கையளித்துவிட்டு தம்பதியர் தலைமறைவாகினர்.

வேலை வாய்ப்புத் தருவதாகக் கூறி இப்படி மோசடி செய்யப்பட்டதையும் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதையும் அறிந்த இளைஞர்கள் குறித்த ரிக்கெட்டுக்களை இரத்துச் செய்துவிட்டுச் சங்கானைக்குத் திரும்பிவிட்டனர்.

குறிப்பிட்ட இருவரும் தலைமறைவாகியுள்ளதுடன் செயற்படாத தொலைபேசி இலக்கங்களையும் கொடுத்துள்ளதால் எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்க முடியாமல் இளைஞர்கள் கவலையுடன் உள்ளனர்.

இதுபற்றி மானிப்பாய் பொலிஸில் இவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-29)

# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடத்திய போட்டி முடிவு

யாழ்ப்பாணம், மே 20

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாடசாலை மாணவர்களுக்கிடையே மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட "மொழியும் மனித நேயமும்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த அழகரத்தினம் அனுஷா, இரண்டாம் இடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த நவசோதா நிரோஷாந்த், மூன்றாம் இடம் எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேச வித்தியாலயத்தைச் சேர்ந்த டிலக்ஷனா பரமானந்தசோதி ஆகியோரும் பெற்றுக்கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் முதலாம் இடம் புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.பிரியதர்ஷினி, இரண்டாம் இடம் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த சீ.மேரி லூட்ஸ் வேர்ஜின், மூன்றாம் இடம் பண்டாரவெளி அரச ம.ம.பாடசாலையைச் சேர்ந்த எம்.எப்.பமீமா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் முதலாம் இடம் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எம்.உமயசோதா, இரண்டாம் இடம் வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த யு.ஸ்வர்ணா, மூன்றாம் இடம் விபுலானந்தா கல்லூரியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் மயூரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் முதலாம் இடம் அக்/அல்ஹம்றா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜி.ஹிம்சிமாம், இரண்டாம் இடம் கமு.அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ஆர்.பாத்திமா ருஸைக்கா, மூன்றாம் இடம் கமு/ மஹ்மூத் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த ஆதம்பாவா பாத்திமா நகூஹா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் இடம் மட்.மகஜன கல்லூரியைச் சேர்ந்த இராசநாயகம் றேயா, இரண்டாம் இடம் மட்.செட்டிப்பாளையம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பா.யனுதாஞ்சலி, மூன்றாம் இடம் மட்.பாலமுனை அலிகார் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த முஹம்மட் பரீட் பாத்திமா பரூஷா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் முதலாம் இடம் திகோ. ஸாஹிரா கல்லூரியைச் சேர்ந்த சமீம் பாத்திமா நுஹா, இரண்டாம் இடத்தை திகோ. பாத்திமா பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.றிபானா, மூன்றாம் இடம் திகோ.பாத்திமா பாலிகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.நஸ்லினா பானு ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் முதலாம் இடம் செம்மலை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ப.துவாரகா, இரண்டாம் இடம் பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த விற்றாலிங் கிறிஸ்டினா, வித்தியானந்தா கல்லூரியைச் சேர்ந்த கீர்த்தனா மகா லிங்கம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (ம-14-9)

# ஹாட்லிக் கல்லூரி மாணவன் கௌரவிப்பு

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை கணித பாடத்தில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தை பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் பாலகோபாலன் கபிலனை பாராட்டி கௌரவித்துள்ளது.

சங்கத் தலைவர் இ.பூரணச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவனை பாராட்டி பரிசில்களை வழங்கினார்.

அதேசமயம் கடந்த ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்கத்தின் எல்லைப் பரப்புக்கு உட்பட்ட முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும் நிகழ்வில் பாராட்டப்பட்டனர். (ஒ-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## நெல்லியடி பிரதான வீதியில் வேகமாக ஓடும் 'டிப்பர்'கள்

பருத்தித்துறை, மே 20

நெல்லியடியின் பிரதான வீதியால் சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவரை பின்பக்கமாக வந்த டிப்பர் மோதியது. தெய்வாதீனமாக அவருக்கு சிறுகாயங்களே ஏற்பட்டன.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை 9 மணியளவில் நடைபெற்றது. இது தொடர்பாக விசாரணையை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார் சாரதியின் அனுமதிப்பத்திரத்தை பறிமுதல் செய்து டிப்பர் வாகனத்தையும் நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அதிகாலை வேளைகளில் நெல்லியடி பிரதான வீதியால் செல்லும் டிப்பர் வாகனங்கள் மிக வேகமாக செல்கின்றன. இதனால் அதிகாலை வேளையில் கூட அச்சத்துடனேயே வீதியைக் கடக்க வேண்டியுள்ளது.

எனவே வீதிப் போக்குவரத்து சேவையில் கடமையாற்றும் பொலிஸார் டிப்பர் வாகனங்களின் வேகத்தில் அக்கறை செலுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-422)

## ஊரிக்காடு ஊடாக செல்லும் 752 சேவையை நடத்தக் கோரிக்கை

பருத்தித்துறை, மே 20

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை ஊரிக்காடு வழியாக செல்லும் 752 வழி இலக்க பஸ் சேவை நிறுத்தப்பட்டதற்கு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இச் சேவை சுமார் 15 நாள்கள் வரை நடைபெற்றது. ஆனால் அதன் பின்னர் முன்னறிவித்தல் எதுவுமின்றி இந்தச் சேவை நிறுத்தப்பட்டுவிட்டது.

இதனால் பல பயணிகள் பஸ் வரும் எனக் காத்திருந்து ஏமாந்து போகின்றார்கள். பயணிகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு தொடர்ச்சியாக இந்தச் சேவையை நடத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ஓ-422)

# உடுப்பிட்டிச் சந்தைக்கு இரு தெரு விளக்குகள்

வடமராட்சி, மே 20

உடுப்பிட்டிச் சந்தைக்கு தெரு விளக்குகள் பொருத்த கரவெட்டிப் பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சந்தைப் பகுதி இரவு வேளைகளில் இருளில் இருப்பதனால், அந்தப் பகுதிக்கு தெரு விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என கரவெட்டிப் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரான அ.சந்திரசேகரம் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அவரது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, உடுப்பிட்டி சந்தைப் பகுதியில் இரு தெரு விளக்குகள் பொருத்துவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந-8)

# இரவில் நடமாடியவர் கைது

தென்மராட்சி, மே 20

வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் இரவு வேளையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய வடமராட்சி கிழக்கு ஆழியவளையைச் சேர்ந்த நபர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த புதன்கிழமை இரவு சந்தேகத்துக்கு இடமான முறையில் நபர் நடமாடுவதாக அந்தப் பகுதி மக்கள் தகவல் வழங்கினர். அதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் நபரைக் கைது செய்தனர்.

இவரை பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்நபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-9)



அரியாலை புனித யூதாததேயு ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்றபோது புனிதரின் திருச்சொரூபம் பவனியாக எடுத்து வரப்படுகிறது. (ந-135)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, மே 20

மிருசுவில் மன்னன் குறிச்சி நெல்லிக் கிணற்றடி கந்தசாமி ஆலய பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஓ-9)

★ ★ ★

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதியும் தீர்த்தத்திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் இடம்பெறும்.

பெருந்திருவிழா கிரியைகள் விஷ்ணுஸ்ரீ சோமஸ் கந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (வ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே 20

தொல்புரம் கொட்டடியம்பதி ஆதிமுத்துமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளன. ஆலயத்திற்கு நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் திருவிழாக் காலத்தில் இடம்பெறும்.

★ ★ ★

வடமராட்சி, மே 20

கரணவாய் தெற்கு, கலட்டிப் பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஓ-8)

★ ★ ★

வடமராட்சி, மே 20

கரவெட்டி உச்சில் அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா வும், மறுநாள் 25 ஆம் திகதி [illegible] தீர்த்தத் திருவிழா வும் நடைபெறும். (ஓ-8)



கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்கள் நடத்திய அன்னையர் தின நிகழ்வில் அன்னை ஒருவருக்கு மாணவி கௌரவம் செய்வதையும் நிகழ்வில் கலந்திருப்பவர்களையும் காணலாம். (ந)

### மன்னார் மடுமாதா ஆலயத்தில்

# புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இறை ஆசி வேண்டி பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,மே 20

'மகாசென்' புயலாலும் வடக்கு, கிழக்கு ,மலையகம் ஆகிய பகுதிகளில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட இடர்களாலும் உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்திக்காகவும் பாதிக்கப்பட்ட மக்கள் புனர்வாழ்வு பெறுவதற்கும் இறை ஆசி வேண்டி விசேட பிரார்த்தனை மன்னார் மடு மாதா ஆலயத்தில் நடைபெற்றது.



தென்பகுதியிலிருந்து சென்ற சௌமிய இளைஞர் நிதியத்தினரால் நாட்டுக்கு நிரந்தர அமைதி, சமாதானம், தேசிய நல்லிணக்கம் வேண்டி தியானம், பிரார்த்தனைகள், மௌன விரதங்கள் ஆகியன நேற்று வெள்ளிக்கிழமை காலை மடு ஆலயத்தில் நடத்தப்பட்டது.


அன்றையதினம் காலை 6 மணிக்கு இடம்பெற்ற திருப்பலி பூசையை அருட்தந்தை வணபிதா. எமிலியாஸ் பிள்ளையும், பிரார்த்தனைகளை சௌமிய இளைஞர் நிதியத்தின் தலைவர் எஸ்.பி.அந்தோனி முத்துவும் நடத்தினர்.

மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் தியான வழிபாட்டை பிரம்மசிறி தர்மகுலராஜா குருக்கள் நடத்தினார்.

இந்த நல்லிணக்க குழுவினர் மன்னார், பேசாலை, தலைமன்னார் போன்ற இடங்களுக்கும் சென்று மதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். அத்தோடு ஆன்மிக வழிபாடுகளிலும் கலந்துகொண்டனர்.

'இடர்களிலிருந்து இலங்கையைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் சௌமிய இள்ளஞர் நிதியத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட 10 ஆவது ஆன்மிக வழிபாடு மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றது. அதன் முதலாவது நிகழ்வு கொழும்பு, கோட்டை உலக வர்த்தக மையத்தின் முன்பு நடைபெற்றது.

இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்தும் நாட்டின் பல பகுதிகளிலும் அனைத்து இடர்களிலும் இருந்து மக்களையும், மண்ணையும் காப்பாற்ற இறை ஆசி வேண்டி நடத்தப்படும் என்று நிதியத்தின் தலைவர் எஸ்.பி.அந்தோனி முத்து தெரிவித்தார். (ச)




சுவாமி சின்மயானந்தரின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு வடமாகாண சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது. (ஓ-14)

## யாழ்.-பருத்தித்துறை 751 பஸ் சேவை குறித்து முறைப்பாடு

பருத்தித்துறை.மே 20

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவையில் தரமற்ற பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது குறித்தும் உரிய நேரத்துக்கு சேவைகளை நடத்தாதையிட்டும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காலை 6 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறையினூடாகச் செல்லும் பஸ் [illegible] வருவதில்லை என்றும் பஸ்ஸினுள் ஏறும் பயணிகள் உள்ளே கேட்கும் அதிக சத்தத்தினால் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப் படுகிறது.

குறிப்பாக இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஓரிரு பஸ்களினால் பயணிகள் சிரமம் அடைவதாகவும் இதனால் பலர் பருவகாலச் சீசன் டிக்கெட் பெற்று சிரமங்களுடன் பயணிக்க வேண்டியுள்ளது என்றும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக உரியவர்களை கவனமெடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இராணுவப் பிரசன்னம் தேர்தலில் அச்சத்தை ஏற்படுத்தும்

## கீர்த்தி தென்னக்கோன் தெரிவிப்பு

கொழும்பு,மே 20
மாகாணசபைத் தேர்தலின் போது வடக்கில் இராணுவ பிரசன்னம் குறித்து கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் அச்சம் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணசபைத் தேர்தலின்போது அரசியல் சுதந்திரம், ஊடக சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் என்பன அவசியமானது .

வடக்கில் இன்று பொதுமக்கள் செல்லமுடியாத இடங்கள் உள்ளன. அங்கு தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.


> அதிக இராணுவ பிரசன்னம் என்பது வாக்காளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும்

இந்தநிலையில் பொதுமக்கள் ஒன்று கூடுவது அதிக இராணுவ பிரசன்னத்துக்கு மத்தியில் எவ்வாறு சாத்தியமாகும். -என்றார்.

வடக்கில் உள்ள பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசின் செயற்பாடுகளுக்கு சவால் விடுக்க முடியாது என்று 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

எனினும் அதிக இராணுவ பிரசன்னம் என்பது வாக்காளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் என்பதை கடந்த காலத்தில் உணரமுடிந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் 70 வீதமான வாக்காளர்கள் அடையாள அட்டைகள் இன்றி உள்ளனர். எனவே அவர்களுக்கு வாக்களிப்பதில் சிரமங்கள் ஏற்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச)



கொழும்பு - ஹற்றன் பிரதான வீதியின் கினிகத்தேனை முதல் ஹற்றன் வரையான பாதையில் மண் சரிவுகள் காணப்படுகின்றன. இந்த மண் அகற்றப்படாததால் இந்த பாதை இரு வழிப் பாதையாக காணப்பட்ட போதும் பல இடங்களில் ஒரு வழிப் பாதையாகவே பயன்படுத்தப்படுகிறது.

## தேர்தல் பொறுப்புகள் பஸிலிடம்

கொழும்பு,மே 20
ஆளும் கட்சியின் தேர்தல் பொறுப்புக்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப் படவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களை வழிநடத்தும் பிரதான பொறுப்பு அமைச்சர் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

கட்சியின் பொதுச் செயலர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்டிருந்த பல பொறுப்



புக்கள், பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்சிக்குள் உள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள சகல தேர்தல் நடவடிக்கைகளையும் பஸில் ராஜபக்ஷ வழிநடத்துவார் என்று குறிப்பிடப்படுகிறது. (ச)

## பிரதமர் தலைமையில் அரச வெசாக் மொனராகலையில்

கொழும்பு,மே 20
அரச வெசாக் உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி மொனராகலையில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண தலைமையில் நடைபெறவுள்ளது.

57 ஆவது அரச வெசாக் உற்சவமாக கொண்டாடப்படும் இந்த நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு மொனராகலை ரஜமஹா விகாரையில் ஆரம்பமாகவுள்ளது.

இதனை முன்னிட்டு எதிர்வரும் 24 ஆம்,25 ஆம் திகதிகளில் மொனராகலையில் வெசாக் வைபவங்கள் நடைபெறவுள்ளன. அன்றையதினம் ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடப்படவுள்ளது. (ச)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

திருமதி இரஞ்சினி இரகுநாதன்
(இலங்கை திட்டமிடல் சேவை வகுப்பு I)
தென்மராட்சி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரஞ்சினி இரகுநாதன் அவர்கள் இலங்கை திட்டமிடல்,சேவை தரம் I இற்கு கடந்த 11.03.2011 தொடக்கம் தரம் உயர்த்தப்பட்டுள்ளதை பாராட்டி மேன்மேலும் பதவியுயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி.
சக உத்தியோகத்தர்கள் திட்டமிடல் கிளை.
(C/9284)(6.11)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 12.12.1950
மறைவு 21.04.2013

திருமதி சந்திரவதனா இலங்கநாதன்

அம்மா! எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பு கனிந்த, அழகிய கோலங்கள் மற்றும் நினைவலைகள் எங்கள் மனதை விட்டு அகலாது தாயே உங்களை அன்புடனும் பாசத்துடனும் நினைவு கூருகின்றோம்.

இன்று (20.05.2013) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், நாளை (21.05. 2013) செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

102, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(36674)(10.6)


## சப்புகஸ்கந்தவில் நாளை பணிகள் ஆரம்பம்

கொழும்பு,மே 20
தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

டுபாயிலிருந்து மசகு எண்ணெய் கொண்டு வரும் கப்பல் இன்று திங்கட்கிழமை நாட்டை வந்தடையவுள்ளது.

அதனால் நாளை முதல் எண்ணெய் சுத்திகரிப்புப் பணிகளை ஆரம்பிக்க முடியும் என்று பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்தார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதான விநியோகப் பாதையில் திருத்தப் பணிகள் பூர்த்தி செய்தவுடன் சுத்திகரிப்புப் பணிகளை ஆரம்பிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய திருத்தவேலைகள் குறித்து ஏற்கனவே சபைக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கமைய திருத்தப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன என்று அவர் கூறினார்.

கடந்த 16ஆம் திகதி முதல் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


**நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோல திருவிழாவும் மகேஸ்வர பூசையும்**

ஆலய வருடாந்த சங்காபிஷேக நிகழ்வு 23.05.2013 வியாழக் கிழமை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 1008 சங்காபிசேகம் இடம்பெற்று இரவு எம்பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வீதி வலம் வந்து அடியார்களுக்கு காட்சி கொடுப்பார்.
வருடாந்த மகேஸ்வர பூசை
25.05.2013 சனிக்கிழமை இடம்பெறும்.
குறிப்பு:ஆலயத்தில் 3000 பழைய ஓடுகள் விற்பனைக்கு உண்டு.

நீர்வேலி அரசகேசரி தேவஸ்தானம்.
ஆலய பரிபாலன சபையினர்.
(C/9474)(6.11)



**வடமாகாண அதிபர்கள் சங்கப் பொதுக்கூட்டம் -2013**

காலம் : 2013.05.24 வெள்ளிக்கிழமை - பிற்பகல் 2.00 மணி
இடம் : யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி - குமாரசாமி மண்டபம்
தலைமை : திரு.செ.சேதுராஜா

வடமாகாண சமகாலக் கல்வி நிலைமைகள் பற்றிய முக்கிய கலந்துரையாடலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் சங்கத்தின் அனைத்து நிரந்தர அங்கத்தவர்களையும் அங்கத்துவம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களையும் அங்கத்துவம் பெறுவதற்கு விருப்பமுடைய வடமாகாணத்திலுள்ள அனைத்து தரம்பெற்ற அதிபர்களையும் அன்றைய கலந்துரையாடலிலும் பொதுக்கூட்டத்திலும் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திரு. அ. அகிலதாஸ்
செயலாளர், வடமாகாண அதிபர்கள் சங்கம்.
(சி/8617) (45.6)



**Roomவாடகைக்குண்டு**
திருநெல்வேலி, கலாசாலை வீதியில் Room வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 609 0837

**காணி விற்பனைக்கு**
யாழ்.நகர் மத்தியில் கடையுடனும் வீட்டுடனும் சேர்ந்த இரண்டு ஆதன இலக்கங்களை உடைய காணி விற்பனைக்கு உண்டு. (38661) (45.6)
தொடர்பு: 077 979 9160,077 667 9433

**காணி விற்பனை**
நீர்வேலி இராஜவீதி வைரவ கோயிலுக்கு முன்பாக றோட்டுக்கு கிழக்காக உள்ள 10½பரப்பு காணி உடன்விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 256 2513,077 902 5073

**தவறிவிட்டது**
சுதுமலை கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் சுப்பிரமணியம் ஆகிய எனது ஆள் அடையாள அட்டை (இல730534086V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக் கவும். ஆ.சுப்பிரமணியம், சுதுமலை கிழக்கு, மானிப்பாய்.
தொடர்பு: 077 620 9243


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் முன் னாள் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனின் மணிவிழா நிகழ்வுகள் கோப்பாய் கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை நடைபெற்றன. அந்த நிகழ்வில்.... (ந-86)

# இலங்கை கடற்பரப்பில் அத்துமீறினால் மீன்பிடிக்கான அனுமதி ரத்துச் செய்யப்படும்

## இந்திய மத்திய அரசு அதிரடித் தீர்மானம்

புதுடில்லி,மே 20

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் மீன்பிடிக்கான அனுமதிப்பத்திரங்களை ரத்து செய்வதற்கு இந்திய மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கை - இந்தியாவுக்கு இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதால் எழும் பிரச்சினைகள் காரணமாக இலங்கை - இந்திய உறவில் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. அத்துமீறல் குற்றச்சாட்டால் எழுந்துள்ள நிலையில் இரு நாடுகளுக்கு இடையில் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் இந்திய மத்திய அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டதுடன் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். இதனால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக் கோரியும் மீனவர்களது பிரச்சினைகளுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தும் இந்திய மீனவக் கிராமங்களைச் சேர்ந்த மீனவ அமைப்புகள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றன.

இது தொடர்பாக இந்திய மத்திய அரசு பரிசீலனை செய்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் இடுபடும் இந்திய மீனவர்களது மீன்பிடிக்கான அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்யவும் மீனவர்களுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் செயற்பாடுகள் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-14)

## தமிழ் உப தபாலதிபர் தொழிற் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 20

அகில இலங்கை தமிழ் உப தபால் அதிபர்கள் தொழிற்சங்கத்தின் 42 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிரதம தபாலகத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை தமிழ் உப தபால் அதிபர்கள் தொழில் சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் ஞா.இரட்ணசிங்கம் கலந்து கொள்வார்.

வடக்கு, கிழக்கு உட்பட தமிழ் மொழியிலான உப தபாலகங்களை ஒன்றிணைத்து நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் உப தபாலதிபர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (ஒ-14)

## ஏற்றம் இறக்கம் தொடர்வதால் நகை வியாபாரத்தில் வீழ்ச்சி

### யாழ். வர்த்தகர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

தங்கத்தின் விலை கடந்த சில மாதங்களாக அதிகரிப்பதும் குறைவதுமாக இருப்பதால் யாழ். நகர் நகைக் கடைகளில் நகை வியாபாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக யாழ். நகர் நகைக் கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்கத்தின் விலை உயர்வாக இருக்கும் போது ஆபரணங்களைக் கொள்வனவு செய்து நகைக் கடைகளில் விற்பனைக்காக வைத்திருந்த வர்த்தகர்கள் திடீரென தங்கத்தின் விலை குறைவடைந்த போது சந்தையின் தற்போதைய விலைகளுக்கே நகைகளை விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கொள்வனவுக்கேற்ப இலாபத்தைப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

பொருளாதார வீழ்ச்சி காரணமாக உலக சந்தையில் கூடுதலான தங்கக் கட்டிகள் விற்பனை செய்யப்படுவதாலேயே தங்கத்தின் விலை சரிவடைய ஆரம்பித்தது.

இந்த நிலையில் கடந்த காலங்களில் 24 கரட் தங்கம் 60 ஆயிரம் ரூபா விற்பனை செய்யப்பட்ட நிலையில் கடந்த சில மாதங்களாக 24 கரட் தங்கம் 48 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதன் காரணமாக தங்கத்தின் விலை மேலும் குறைவடையலாம் என பொது மக்கள் ஆபரணங்களை வாங்குவதைத் தவிர்த்து வருகின்றனர்.

தங்கத்தின் விலை நாளாந்தம் நிர்ணயிக்கப்படுவதால் விலைகளில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படும். திடீரென அதிகரிப்பதும், குறைவதும் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளால் தீர்மானிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தொடர்ச்சியாக தங்கத்தின் விலை அதிகரிப்பதும், குறைவதும் பொதுமக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் நகைக் கடைகளில் வியாபாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால் நகை வியாபார நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14)

## அறிவித்தல்

190ஆம் கட்டை, நுணாவில் மேற்கில் இயங்கும் டிஷ்னா மகளிர் வாழ்வாதாரப் பயிற்சி நிலையத்தினரால் "டிஷ்னா உற்பத்தி-இளைய தலைமுறையினருக்கான வாழ்வாதாரப் பயிற்சி நிலையம்" என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட கடிதத்தலைப்பில் (Letter Head) திருமதி C.சுந்தரலிங்கம் என்ற பெயரும், J/308, கிராம அலுவலர் பதவிப் பெயரும் எனது அனுமதியின்றி, எனக்கு அறிவிக்காமலே ஆலோசனைக் குழு (ADVOISORY COMMITTEE) எனக்குறிப்பிடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனக்கும் இந்த நிறுவனத்துக்கும் எதுவிததொடர்பும் இல்லை. எனவே இந்தக் கடிதத்தலைப்பை உபயோகித்து இந்த நிறுவனத்தினர் இதுவரை மேற்கொண்ட மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள கடிதத் தொடர்பாடல்கள், நிதி தொடர்பாடல் நடவடிக்கைகள் எவற்றுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

திருமதி ச.சுந்தரலிங்கம்,
கிராம அலுவலர், J/308

(சி/92666) (10,6)

## விழி நீர் சொரிகின்றோம்



அமரர்
**கனகரத்தினம் செல்வராசா**
(மனேச்சர்)

அனைவராலும் மனேச்சர் என்று அன்பாக அழைக்கப்பட்ட அமரர் கனகரத்தினம் செல்வராசா அவர்கள் புகலிடம் தேடி இங்கிலாந்து மாநகரில் வாழ்ந்த போதும், தான் பிறந்த ஊரான அரியாலை மண்மீது மிகுந்த பாசமும், நேசமும் கொண்ட உயர்ந்த மனிதன். உண்ணும் உணவையும் அணியும் ஆடையையும் இங்கிலாந்தில் பெற்றுக்கொண்டு அன்பையும், ஆசையையும் அரியாலை மண்ணுக்கு பொழிந்த பெருமகன். தனது சிறு வயது முதலே அரியாலைக்கு பெருமை சேர்த்த பொது மகன். தான் சார்ந்த பிரசித்தமான யா/அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில் வீதியில் சித்திரத் தேர் ஓடுவதற்காய் இங்கிலாந்து மாநகர வீதியில் சொந்தக் காரில் ஓடி நிதி திரட்டிய மகான். "நொத்தார்-மனேச்சர் க.கனகரத்தினம் நினைவு இல்லம்" என்னும் பெயரில் கோயில் பிரதம குரு விடுதி அமைய முழுமையாக நிதியுதவி புரிந்த வள்ளல்.

அமரர் அவர்களது திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய மகாமாரி அம்மனை இறைச்சுகின்றோம்.

யா/அரியாலை பிரப்பங்குளம்
மகாமாரி அம்மன் கோயில் சமூகம்.

(36691)(10,6)

### நூலக வாரத்தை முன்னிட்டு

## உள்ளூர் எழுத்தாளர்களின் புதுவரவு நூல்கள் எதிர்பார்ப்பு

நூலக வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தால் உள்ளூர் எழுத்தாளர்களிடம் இருந்து புதுவரவு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

வாசகர்களை நூலக வாரத்தில் உள்வாங்கி நூலின் பயன்பாடுகளை அதிகரிக்கச் செய்யவும், வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தவும் புதிய வரவு நூல்கள் வரவேற்கப்படுகின்றன.

தற்போது பாவனையில் உள்ள நூல்களை விட உள்ளூர் எழுத்தாளர்களின் ஆக்கத்திறன் கொண்ட வரலாறுகளை உள்ளடக்கிய நூல்களை வாசகர்கள் எதிர்பார்க்கின்றனர். நூலாசிரியர்கள் தம்மால் தொகுக்கப்பட்ட நூல்களை அன்பளிப்பாக வழங்கி நூலக வாரத்தில் தமது நூல்களை வாசகர்கள் பயன்பெற நூலகத்தைப் பயன்படுத்தலாம் என்று நூலகர் தெரிவித்துள்ளார். (ந-14)

### பயிற்சிப் பட்டறை

சமூக சேவைகள் அமைச்சினால் மாற்று ஆற்றல் உடையோர் மாவட்ட சுய உதவிக் குழு அங்கத்தவர்களுக் கான பயிற்சிப் பட் டறைஇன்றும்நாளையும் காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-14)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
NISAN SUN NY டீசல் கார் (64 - XXXX),
HONDA CD 200, MD90 மோட்டார்
சைக்கிள் ஆகியன விற்பனைக்குண்டு.
தொ.பே: 078 615 5929, 021 320 5939

(36695)(6.11)

## தவறிவிட்டது

17.05.2013 அன்று சங்கானைக்கும் சுழிபுரத்துக்கும் இடையில் 782 இலக்க தனியார் பேருந்தில் தங்கநகை (தாலிக்கொடி) தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே: 077 122 4560, 077 699 1525.

(35037) (45.6)

## 8ஆவது ஆண்டு நினைவு தினம்

உதயம்
01.01.1943

அஸ்தமம்
20.05.2005

திதி: துவாதசி (22.05.2013)



அமரர்
**ஆறுமுகம் இராஜகோபால்**
(செம்பியன் செல்வன்)

காலச்சக்கரத்தில் மீளாத்துயில் மறக்க முடியாது
இன்று நீர் நாளை நான்
மனத்தை ஆற்றுப்படுத்துவோம்
காலச்சக்கரத்தை எதிர்த்து நிற்போம் என்றும்
வாழ்வை சேவையாக்கி சாகாவரம் பெறுவோம்.

இல. 10, புதுவீதி,
அத்தியடி யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்
புவனம், இராகுலன்.

(36692)(10,6)

## மரண அறிவித்தல்



**பொன்னையா யோகானந்தன்**

(இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர் , மகாவலி அபிவிருத்திச்சபை, பொலநறுவை)

இல. 57/ 2, புங்கன்குளம் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா- யோகம்மா தம்பதியரின் புதல்வன் யோகானந்தன் 18.05.2013 சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரியாலை.
தொடர்பு: 077 452 8836,
077 193 3116.
ஆதவன் (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

(36694)(45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வு

காரைநகர் தேசிய சேமிப்பு வங்கியின் 2012 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வங்கி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.
வங்கிக் கிளை முகாமையாளர் அ.கெங்காதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடபிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தம் கலந்து கொள்வார். (ஒ-5)

### நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.
கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டப் பிராந்திய ஒன்றிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவரும், அகில இலங்கை பஸ் கம்பனிகளின் உப தலைவருமான பொ. கங்காதரனும், சிறப்பு விருந்தினராக சாவகச் சேரி நகர சபை உறுப் பினர் சூசைமுத்து அலெக்ஸாண்டரும் கலந்து கொண்டனர். நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர்- துரைசிங் கம் யோகேந்திரகுமார், உப தலைவர்- ஐயாத் துரை பபாகரன், செயலாளர்-அற்புதராசா விக்ரர் அற்புதநேசன், உதவிச் செயலாளர்- சி.குகதாஸன், பொருளாளர்-ப.ஞானதேவன், நிர்வாக உறுப்பினர்களாக நா.பொன்னுத்துரை, பா.கிருஸ்ணபிள்ளை, நீ.சிறிதரன், வே. ஸ்ரீசண்முகதாஸ், செ. இரத்தினேஸ்வரன், வ.புஸ்பகாந்தன் (ந-9)

சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வியின்

# இருமாடிக் கட்டடத்துக்கு நடப்பட்டது அடிக்கல்

தென்மராட்சி, மே 20
மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வியில் உலக வங்கியின் அனுசரணையுடன் பிரார்த்தனை மண்டபம் உள்ளிட்ட இருமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் கூட்டாக புதிய கட்டடத்துக்கான அடிக் கல்லை நட்டனர்.
வித்தியாலய அதிபர் வே.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர். (ந-9)




முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளுக்கு தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கட்சி உறுப்பினர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். (த-4)

# வெளிநாட்டு வேலை பெற்றுத் தருவதாகக் கூறி 20 லட்சம் ரூபா பெற முயன்றவர் சிக்கினார்

யாழ்ப்பாணம்,மே 20
வெளிநாடு செல்வதற்காக ஒரு தரப்பினருக்கு போலி விசாக்களைச் செய்து கொடுத்த நபர், மற்றொரு தரப்பிடம் இருந்து 20 லட்சம் ரூபாவைப் பெற முற்பட்டபோது வகையாக மாட்டிக்கொண்டார்.
பாதிக்கப்பட்டவர்கள் குறித்த முகவரை யாழ். பொலிஸ் நிலையம் முன்பாக வைத்து இனங்கண்டு 119 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு முறையிட்டதை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்புத்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வெளிநாடு செல்வதற்காக முகவர் ஒருவரை நாடினார். அவர் 20 லட்சம் ரூபாவைத் தருமாறு கூறியுள்ளார். குறித்த முகவரமைப்பின் கொழும்பிலுள்ள நபருக்கும் அதனைத் தெரியப்படுத்தி குறித்த தினத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள குறித்த முகவரிடம் பணத்தைக் கொடுப்பதாகக் கூறினார்கள்.
ஆனால் கொழும்பிலுள்ள முகவர், பணத்தைத் தன்னிடம் தரும்படியும் கூறி, தனது வங்கிக் கணக்கு இலக்கத்துக்கு பணத்தை அனுப்புமாறு கூறியுள்ளார். அந்த அமைப்பின் யாழ். முகவரோ பணத்தைத் தன்னிடம்தான் தரவேண்டும் என்று கூறியுள்ளார்.
என்ன செய்வது என்று தெரியாத நிலையில் குழம்பிய குறித்த இளைஞனும், பெற்றோரும் கொழும்பிலுள்ள முகவரை யாழ்ப்பாணத்துக்கு வருமாறும் இருவர் முன்னிலையிலும் பணத்தைத் தருவதாகக் கூறினர். அவரும் அன்றிரவு தனது வாகனத்தில் புறப்பட்டு மறுநாள் காலை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். எனினும் முகவரமைப்பின் பின் இரண்டு பேருக்கும் இடையில் முரண்பாடு காணப்பட்டதனால் விடயம் யாழ். பொலிஸ் நிலையம் வரை சென்றது.
பொலிஸ் வாசலில் இருவரும் முரண்பட்டுக் கொண்டிருந்த போது, முன்னர் போலி விசா பெற்று ஏமாந்தவர்கள், தம்மை ஏமாற்றிய குறித்த முகவரை அடையாளம் கண்டுகொண்டனர். உடனடியாக 119 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி சம்பவத்தைக் கூறினர். அவர்கள் யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்க யாழ். விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர்.
அவருக்கு எதிராக கொழும்பிலுள்ள நீதிமன்றிலும் வழக்கு இருப்பதாகவும், அவர் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
அக்குறணையைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (ஒ-4)

## மரண அறிவித்தல்



### கார்த்திகேசு தேவராசன்

(தேவன் அன்சன்ஸ் உரிமையாளர்-வவுனியா)

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், வவுனியா, தேவர்குளத்தில் வசித்தவரும் தற்போது வவுனியா, வைரவபுளியங்குளம் இராசதுரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தேவராசன் அவர்கள் 18-05-2013 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-தங்கமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- பாலாமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சற்குணதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இந்திராணி, நல்லம்மா, முத்தாச்சி ஆகியோரின் சகோதரரும், சிறிக்குகன், சிறிக்குமார் (லண்டன்), கலைவாணி, புஸ்பவதி(கனடா), சிறிகாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளிகரன், மனோகரதாஸ், கோசலா ஆகியோரின் மாமனும், அபிசன், அகரன், அனஜன், நிரோசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21-05-2013) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாஸ்த்திரி கூழாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.07, இராசதுரை வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா.
தொடர்பு: 077 755 5327,
077 691 2295

(36697) (6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் மகேஸ்வரன் (யோசுவா)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் மகேஸ்வரன் (யோசுவா) 16.05.2013 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- வியாழம்மா தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், அழகம்மாவின் அன்புக் கணவரும், சாந்தநாயகி (சாந்தி-கொழும்பு), கேதீஸ்வரன் (சிவா-லண்டன்), கேமாவதி (கேமா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் ஸ்ரனிஸ்லஸ், அகிலன், லீனாமேசி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிறின்டன், யெஷூரன், அபிகாயில், யோகான், லூக்கா, எமிலி ஆகியோரின் தாத்தாவும், நாகேந்திரன் (சுவிஸ்), யோகச்சந்திரன் (இலங்கை), யோகசுந்தரம் (சுவிஸ்) ஆகியோரின் மூத்த சகோதரனும் பாலசிங்கம், ஞானேஸ்வரி, நடராசா, காலஞ்சென்றவர்களான அன்னப் பிள்ளை, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஆராதனை இன்று (20.05.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனங்களப்பு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு :
சாந்தி :-077 734 4830
சிவா :-075 343 1752
(079 570 38400)
கேமா :-033 148 544 189
003 616 597 098

(36699) (6.11)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்
சாந்தி (வத்தளை), சிவா (லண்டன்),
கேமா (பிரான்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஸ்வமேத மஹாயாகம்

## காரைநகர் புகலி சிவசுப்பிரமணிய ஆலய நித்திய உற்சவ (365நாள்) பூர்த்தியும் அஸ்வமேத மஹாயாகமும்

| நித்திய உற்சவம் | மஹாயாகம் | ஊர்வலம் |
|---|---|---|
| ஆரம்பம்:- 01.06.2012 வெள்ளிக்கிழமை | ஆரம்பம்:- 23.05.2013 வியாழக்கிழமை | ஆரம்பம்:- 20.05.2013 திங்கட்கிழமை |
| முடிவு:- 01.06.2013 சனிக்கிழமை | முடிவு:- 01.06.2013 சனிக்கிழமை | முடிவு:- 22.05.2013 புதன்கிழமை |

**முருகன் அடியார்களே!**

இந்து சமுத்திரத்தின் மத்தியில் முத்தெனத் திகழும் இலங்கா தீவின் ஈழத்துச் சிதம்பர புண்ணிய பூமியில் காரைநகர் மணற்பிட்டிப் பிரதேசத்தில் அருள் பாலிக்கும் புகலி சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு விஜய வருடம் வைகாசி மாதம் 9ஆம் நாள் (23.05.2013) வியாழக்கிழமை தொடக்கம் வைகாசி மாதம் 18ஆம் நாள் (01.06.2013) வரை அஸ்வமேத மஹாயாகம் நடைபெற முருகன் திருவருள் கைகூடியுள்ளது.

**1ஆம் நாள் ஊர்வலம்**

20.05.2013 திங்கள் கிழமை காலை 7.12 நிமிடத்துக்கு ஆலயத்தில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி ஆலடி வீதி ஊடாக பொன்னாலை, மூளாய், சுழிபுரம் சித்தன்கேணி சங்கானைக்கு 10.00 மணிக்குச் சென்றடையும். தொடர்ந்து அளவெட்டி ஊடாக சுன்னாகம் 12.00 மணிக்கு சென்று அடையும். அங்கிருந்து புத்தூர் சந்தி ஊடாக 750 பாதை வழியே நெல்லியடி சந்தியை 03.00 மணிக்கு சென்று கொடிகாமம் நெல்லியடி பாதை வழியே கட்டிபுரம் கோயிலில் இரவு தரித்து நிற்கும்.

**2ஆம் நாள் ஊர்வலம்**

21.05.2013 திகதி செவ்வாய்க்கிழமை காலை 08.00மணிக்கு கட்டிபுரம் அம்மன் ஆலயத்தில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு கொடிகாமம் கொடிகாமம் சந்தி அடைந்து A9 வீதி வழியாக சாவகச்சேரி நகரை 10.00 மணிக்கு வந்தடையும். தொடர்ந்து கைதடி ஊடாக செம்மணி வழியே நல்லூர் அடைந்து நல்லூர் பின் வீதி ஊடாக கல்வியங்காடு, திருநெல்வேலி வீதி ஊடாக திருநெல்வேலி சந்தி அடைந்து யாழ்.நகர் சென்று K.K.S வீதி வழியாக கொக்குவில் சந்தி அடைந்து ஆனைக்கோட்டை சந்தி வந்தடைந்து 786 வீதி வழியே காரைநகர் வந்தடையும்.

**3ஆம் நாள் ஊர்வலம்**

22.05.2013ஆம் திகதி புதன்கிழமை 08.00 மணிக்கு ஆலயத்தில் இருந்து புறப்படும் ஊர்வலம் ஆலங்கன்டு வீதி வழியாக சிவன் கோயில் வழியாக வலந்தலை சந்தி அடைந்து கிழக்கு வீதி ஊடாக துறைமுகம் அடைந்து மேற்கு வீதி ஊடாக காரைநகரை வலம் வரும்.

மாலை அஸ்வமேத மஹாயாக ஆரம்ப கிரியைகள் (சாந்திகள்) ஆரம்பமாகும். அனுக்ஞை, கணபதிஹோமம் நவக்கிரஹஹோமம், வாஸ்து சாந்தி.

**அஸ்வமேத மஹாயாக கிரியை ஆரம்பம்**

23.05.2013ஆம் திகதி வியாழக்கிழமை காலை 07.25 மணிக்கு விநாயகர் வழிபாடு மிருத்சங்கிரணம் அங்குரார்ப்பணம் ரக்ஷாசபந்தனம், கடஸ்தாபனம் கும்பயாகசாலை பிரவேசம் யாகபூசை அஸ்வபூசை அஸ்வமேத யாகக்கினி வளர்த்தல்.
24.05.2013 திகதி வெள்ளிக்கிழமை முதல் 31.05.2013ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை மாலை யாகம் நடைபெறும். தினமும் காலை 07.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியை ஆரம்பமாகி நண்பகல் 12.00 மணிக்கு நிறைவுபெறும்.
தினமும் மாலை 05.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி யாகம் தொடரும்.
01.06.2013 சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு அஸ்வமேத யாக பூர்த்தி தொடர்ந்து கும்பம் வீதிப்பிரதட்சணம், விசேட பூஜை, மாலை கலை நிகழ்ச்சி.

24.05.2013ஆம் திகதிவெள்ளிக்கிழமை 2ஆம் நாள் மஹாயாகம் காலை 06.00 மணிக்கு நித்திய உற்சவ அபிஷேகம் ஆரம்பம்.
காலை 07.00மணிக்கு விநாயகர் வழிபாடு புண்ணியாக வாசனம், விஷேட சந்தி 08.00 மணிக்கு யாக பூசை ஹோமம், 10.00 மணிக்கு சண்முக அர்ச்சனை, 11.00மணிக்கு யாக தீபாராதனை 11.15 மணிக்கு நித்திய உற்சவ வசந்தமண்டப பூசை தொடர்ந்து, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமான் வீதி வலம் வருதல், விபூதி பிரசாதம் வழங்கல், மாலை 05.00 மணிக்கு விநாயகர் வழிபாடு தொடர்ந்து யாகபூசை, ஹோமம் தீபாராதனை விபூதி பிரசாதம் வழங்கல். தொடர்ந்து கலை நிகழ்ச்சி 08.30 மணிக்கு விழா பூர்த்தி.

31.05.2013ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து இதே போல் நடைபெறும். 01.06.2013ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு விநாயகர் வழிபாடு புண்ணியாக வாசனம், அஸ்வமேத மஹாயாக ஹோமம் நாட்டின் நன்மைக்காகவும், சுபீட்சத்துக்காகவும் திரவ்ய சமர்ப்பணம் மஹாபூர்ணாகுதி யார்ராதானம் கும்ப வீதிப்பிரதக்ஷணம் கும்ப அபிஷேகம் பூசை ஆசியுரை வீபூதிப்பிரசாதம் மாலை 05.00 மணிக்கு விசேட பூசை முருகப்பெருமான் வீதி உலா.

சத்தி உபாசகர்
சிவஸ்ரீ.இ.குமாரசாமிக் குருக்கள்
(பிரதம குரு சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயம்)
தலைமையில்
அஸ்வமேத மஹாயாகம் நடத்துபவர்கள்
சைவக்குருமணிகள் (இலங்கை)
யாகத்தை சிறப்பிப்பிவர்கள் இந்திய திருச்செந்தூர் ஆலய வேதபாராயண குரு மணிகள், காயத்திரி பீடம் இணுவில் குருமணிகள்.

**கலை நிகழ்ச்சி**
108 பேர் கொண்ட நாட்டிய நிகழ்வு
நுண்கலைப் பீட மாணவர்கள் நுண்கலைப்பீடம்
மருதனார்மடம் 01.06.2013

**குறிப்பு:-**

அஸ்வமேத மஹாயாகத்தில் பங்குபற்றி தர்ப்பை (பவித்திரம் அணிந்து) வேண்டி செய்ய விரும்பும் அடியவர்கள் ஆலய காரியாலயத்தின் முன் கூட்டியே பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். அல்லது 0777471878 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யமுடியும். ஒருநாள் யாகம் அல்லது ஒரு காலம் யாகம் செய்ய விரும்பும் அடியவர்களுக்கும் இடம்தரப்படும்.
யாழ். மாவட்டத்திலும் மற்றைய பிரதேசங்களில் வாழ்கின்ற சைவ அபிமானிகள் நாட்டுப் பற்றாளர்கள், அரச அமைப்புகள், அரசசார்பற்ற அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் அனைத்து மக்களினதும் பொருள் சார் உதவிகள் போன்றவற்றை எதிர்பார்த்து நிற்கின்றோம்.
வங்கிக் கணக்கு இல: BOC 73214763

இங்ஙனம்,
சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக் குருக்கள்,
ஆலய பிரதம குரு (தர்மகர்த்தா)
ஆதீனகர்த்தாக்கள்,
ச.செந்தில்நாதன், ச.சிவகுமார்.

## அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

அமரர்
**வேலுப்பிள்ளை இரத்தினம்**



கடந்த 20.04.2013 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் வேலுப்பிள்ளை இரத்தினம் (நல்லையா) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.05.2013) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபீண்டிகரண கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

"தெய்வோதயம்"
வாரிவீ, கோற்றாவத்தை.

குடும்பத்தினர்.

(சி/9488)(14.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# BRITISH TEACHING ACADEMY

சகல வயதினருக்குமான ஆங்கிலப் பாடநெறி



அனுமதி இலவசம்

பிரித்தானியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட பிரித்தானிய ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.

**Age Group**
3-5 Play school
5-10 Student
10 -16 Student
17-18 A/L Student
University Student & Adult
Working People

**Courses**
Spoken English
Cambridge (in process)
IELTS (Preparation)
Certificates for AQA (in process)

உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்

தலைமையகம்: 031 2226700

அனுமதி ஆரம்பம்:
20.05.2013 (திங்கள்)

மாணவர்களுக்கு இலங்கைப் பாடத்திட்டத்தின் கீழ் கற்பிக்கப்படும்.

பணிநிலை வெற்றிடம் உண்டு தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு No.79, Chepal Road, Jaffna.
021 - 2222269, Email: btasrilanka@yahoo.com

தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி

# குண்டு எறிதலில் தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம், மே 20

பியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற 23 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு ஏறிதல் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் ஆர்.நிமேலந்திரா 14.32 மீற்றர் தூரத்தினை ஏறிந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய மட்ட போட்டியில் ஆண்களுக்கான குண்டு எறிதலில் புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தையும், அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான குண்டு எறிதலில் போட்டியில் தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான குண்டு ஏறிதல் போட்டியில் வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் சார்பாக பங்குபற்றிய வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவி ஆர்.தர்சிகா 9.08 மீற்றர் தூரம் எறித்து முன்றாமிடத்தைபெற்றுவெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளர்.

இவர் பெண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் தங்கப்பதக்கதினையும் தட்டு ஏறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுள்ளமை குறிப்படதக்கது. (ற-23)

# தேசிய உதைபந்து இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,மே 20


இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தினால் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கு இடையே நடத்தப்படும் தேசிய மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் இன்று திங்கட்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன.



காலை 8 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் கண்டி சுமங்கல வித்தியாலய அணியை எதிர்த்து நீர்கொழும்பு சென். மோரிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 9 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் திருகோணமலை கிண்ணிய மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கோட்டை கேமவிதரண வித்தியாலய அணி மோதவுள்ளது.

அரையிறுதியாட்டங்களில் வெற்றி பெறும் அணிகள் இன்று மாலை3 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. இன்றைய இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருத்தினராக மன்னார் நகர முதல்வர் ஞானபிரகாசமும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகர சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வர். (ங-23)

# மாவட்ட வலைப்பந்து தெல்லிப்பழை சம்பியன்



யாழ்.மாவட்ட பிரதேசசெயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேசசெயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கனை பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 31:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி சம்பியனானது. (ங-23-86)

# மேசைப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், மே 20


திசை காட்டி குறுப் ஓவ் கம்பனியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய மேசைப் பந்தாட்டப் போட்டிகளில், 15 வயதுப் பிரிவு மற்றும் 19 வயதுப் பிரிவுகளில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**15 வயதுப்பிரிவு ஆண்கள்**
1ஆம் இடம்: யாழ்.மத்திய கல்லூரி
2ஆம் இடம்: ஹாட்லிக் கல்லூரி
3ஆம் இடம்: யூனியன் கல்லூரி

**15 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம்: பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
2ஆம் இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
3ஆம் இடம்: யூனியன் கல்லூரி

**19 வயதுப் பிரிவு ஆண்கள்**
1ஆம் இடம்: யாழ்.மத்திய கல்லூரி
2ஆம் இடம்: யாழ்.இந்துக் கல்லூரி
3ஆம் இடம்: யூனியன் கல்லூரி

**19 வயதுப் பிரிவு பெண்கள்**
1ஆம் இடம்: யூனியன் கல்லூரி
2ஆம் இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
3ஆம் இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி. (ற-23)



கடந்த வாரம் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இலங்கை பல்கலைக் கழகங்களுக்கிடையிலான 11ஆவது விளையாட்டுப் போட்டியில் கராத்தே போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய யாழ்.பல்கலைக்கழக கராத்தே அணி வீரர்கள் இருவர் பதக்கங்களைப் பெற்றனர். 50 Kg பிரிவுக்குட்பட்ட குமித்தே போட்டியில் பி.பேரின்பராசா 2ஆவது இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் 55 Kg பிரிவுக்குட்பட்ட குமித்தே பரிவில் பி.எம்.மொறவாக 3ஆவது இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர். இவர்களுடன் பயிற்றுநர் ஆ.ர.சைலேந்திரகுமாரையும் படத்தில் காணலாம்.

# வலைப்பந்து பயிற்சிமுகாம்

வலி.வடக்கு, மே 20

யாழ்.மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த வலைப்பந்தாட்ட வீர, வீராங்கனைகளுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 8 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி முகாம் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்டதின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிமுகாமை நடத்துவதற்கு இலங்கை பாடசாலை வலைப்பந்தாட்ட சங்கத்தின் பயிற்றுவிப்பாளர்கள் கொழும்பில் இருந்து வருகை தரவுள்ளணர்.(ற-86)

# இறுதியாட்டத்தில் டயமன்ஸ் வி.க.

யாழ்ப்பாணம், மே 20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நக்கீரன் விளையாட்டுக் கழகம் நடந்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில்வென்றுடயமன்ஸ்விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ற-23)

மன்னார் பிறீமியர் லீக்

# சென்.ஜோசப்பை வீழ்த்தியது ஸ்ரார்

யாழ்ப்பாணம், மே 20

மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழகம் நடத்தும் '20/20' பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கடந்த வெள்ளிக் கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதனத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.




முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் 19.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. அதில் நிர்மல் 45 ஓட்டங்களையும், அன்ரன் 25 ஓட்டங்களையும், முருகா, டிலான் ஆகியோர் தலா 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரியகாந், அமல், அஜித் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழகம் 18.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குளை இழந்து வெற்றி பெற்றது.

பிரியகாந் ஆட்டம் இழக்காமல் 34 ஓட்டங்களையும், யக்சண் 32 ஓட்டங்களையும், றோய் 30 ஓட்டங்களையும், மயூரன் 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி சார்பில் முருகா 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், நிர்மல் தனராஜ், டனானிஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ற-23)

# கண்ணகை வி.க. சம்பியனானது

தென்மராட்சி,மே 20

தென்மராட்சிப் பிரதேச இளைஞர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில் கிரிக்கெட் போட்டியில் மட்டுவில் கண்ணகை இளைஞர் கழக அணி சம்பியனாகத் தெரிவாகியது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற எட்டு பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இறுதி ஆட்டத்தில் மட்டுவில் கண்ணகை இளைஞர் அணியும் நுணாவில் பாரதி இளைஞர் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் ஐந்து இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. 77 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நுணாவில் பாரதி இளைஞர் அணி 58 ஓட்டங்களை மட்டுமே பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. (ற-9)

# தடகள பயற்சிமுகாம்

வலி.வடக்கு, மே 20

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் யாழ்.மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த முன்னணி தடகள வீர வீராங்கனைகளுக்கு ஒருநாள் பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் இந்த பயிற்சி முகாமின் வளவாளர்களாக கொழும்பில் இருந்து வருகை தரும் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் பயிற்றுவிப்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்று வட மாகாண விளையாட்டுத்துறை பிரதிக் கல்விப் பணிபாளர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகளின்திறனை மேம்படுத்தும் முகமாக இந்த பயிற்சி முகாம் நடத்தப்படுவதுடன், குறித்த பயற்சிமுகாமில் 150 இக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி வெற்றியுடன் விடைபெற்றது புனே





புதுடெல்லி, மே 20

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் நேற்றைய முதலாவது போட்டியில் புனே வொரியர்ஸ் அணி வெற்றிபெற்று, இவ்வருடத்திற்கான தொடரின் இறுதி இடத்திலிருந்து தப்பித்துக் கொண்டது. புனே வொரியர்ஸ் அணியிடம் தோல்வியடைந்த டெல்லி டேர்டெவில்ஸ் அணி இறுதி இடத்தைப் பெற்றுக் கொண்டது.

புனே சுப்ரட்டா ரோய் சஹாரா மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற புனே வொரியர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனே வொரியர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது இலக்காக 38 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 2 இலக்குகளை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றுப் பலமாகக் காணப்பட்டது. ஆனால் ஆரொன் ஃபின்ச், யுவ்ராஜ் சிங் இருவரும் குறுகிய இடைவெளியில் ஆட்டமிழக்க அவ்வணி தடுமாறியிருந்தது.

எனினும் லூக் ரைட், அஞ்சலோ மத்தியூஸ் இருவரும் இறுதி நேரத்தில் சிறப்பாக ஆடி அவ்வணியைச் சிறப்பான நிலைக்கு இட்டுச் சென்றனர்.

துடுப்பாட்டத்தில் புனே வொரியர்ஸ் அணி சார்பாக ஆரொன் ஃபின்ச் 34 பந்துகளில் 52 ஓட்டங்களையும், லூக்ரைட் 23 பந்துகளில் 44 ஓட்டங்களையும், அஞ்சலோ மத்தியூஸ் 22 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், றொபின் உத்தப்பா 20 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் சித்தார்த் கௌல் 2 இலக்குக்களையும், இர்பான் பதான், உமேஷ் யாதவ், சபாஷ் நதீம் ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

173 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர் டெவில்ஸ் அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 38 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக முரளிதன் கௌதம் 23 பந்துகளில் 30 ஓட்டங்களையும், இர்பான் பதான் 28 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அஞ்சலோ மத்தியூஸ் 14 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அலி முர்த்தஷா 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அஷோக் டின்டா 21 பந்துகளில் 2 இலக்குகளையும், வெய்ன் பார்னெல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக லூக் ரைட் தெரிவானார். (ங)

# நியூசிலாந்தை வீழ்த்தியது இங்கிலாந்து





கொழும்பு, மே 20

நியூசிலாந்தை 170 ஓட்டங்களால் வீழ்த்தியது இங்கிலாந்து அணி.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த 16 ஆம் திகதி லண்டன் லோர்ட் மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதல் இன்னிஸில் சகல இலக்குகளையும் இழந்து 232 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் குக் (32), றொறட் (39), பெல் (31), றூட் (40), பார்ஸ்ரோ (41) ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் சௌத்தி 4 இலக்குகளையும், வக்னர் 3 இலக்குகளையும், போல்ட் 2 இலக்குகளையும், மார்ட்டின் 1 இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 207 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதில் ரெய்லர் (66), வில்லியம்ஸன் (60), பிறவுண்லி (23) ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் அண்டர்சன் 5 இலக்குகளையும், பிரோட் 4 இலக்குகளையும், போட் 1 இலக்கையும் வீழ்த்தினர். தனது இரண்டாவது இன்னிஸக்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அணி சார்பில் றொறோட் 56 ஓட்டங்களையும் றூட் 71 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் சௌத்தி அதிக பட்சமாக 50 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 6 இலக்குகளை சரித்தார், வில்லியம்ஸன் 2 இலக்குகளையும், பவுல்ட், வக்னர் தலா ஒரு இல்க்கையும் வீழ்த்தினர்.

239 என்ற வெற்றி இலக்கை துரத்த தொடங்கியது நியூசிலாந்து அணி. ஒரு ஓட்டத்தை பெற்ற போது தனது முதலாவது இலக்கையும், 16 ஓட்டங்களில் அடுத்த இரு இலக்குகளையும், 21 ஓட்டங்களில் நான்காவது இலக்கையும், 25 ஓட்டங்களில் ஐந்தாவது இலக்கையும், 29 ஓட்டங்களில் ஆறாவது இலக்கையும் இழந்தது. முதல் இன்னிஸில் ஒரு இலக்கை மாத்திரம் வீழ்த்திய போர்ட் இரண்டாவது இன்னிஸில் நியூசிலாந்து வீரர்களின் இலக்குகளை வேட்டையாடினார். நியூசிலாந்து வீரர்கள் எவருமே இரட்டை இலக்க ஓட்டங்களை பெற முடியாது திணறினர். அதிக பட்சமாக வக்ணர்(17) வோட்டிங் (13) ஓட்டங்களை மாத்திரமே பெற இறுதியில் நியூசிலாந்து அணி 22.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து வெறும் 68 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் போர்ட் 44 ஓட்டங்களைக் கொடுத்து 7 இலக்குகளையும் அண்டர்ஸன் 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக பந்து வீச்சில் அசத்திய போர்ட் தெரிவானார். இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற அடிப்படையில் இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது. (ங-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Workroom Based Practical..............

**SPOKEN ENGLISH**

100%பேச்சுபயிற்சி
Video&Audio தொழிநுட்பமுறை

1st class free

**Special Class can be arranged for Doctors, Engineers,Managers, Accountant, Etc.**

- பிரபல்யமானகொழும்பு (British Council Special) ஆசிரியர்குழாமின் வழிகாட்டல்.
- விசேடதனிப்பட்டகவனம்.
- சிறியவர்முதல்உயர்அலுவலர்கள் வளாகனிக்கனிவகுப்பகள்

விரும்பியநேரம்

CALL 0777 444

**IiSEEES NALLUR CAMPUS**
762, Point Pedro Road, Nallur.0212224728



**வடமராட்சியில் சிங்கள மொழி வகுப்புக்கள்**

ஆரம்பம்:23.05.2013 காலை 8.30 மணியளவில் (சுபநேரம்)
ஆசிரியை: செல்வி சுபசிங்க முதியான் சேலாகே ரக்ஸ் மிதாரக்கா

**ஆறுமாத பாடநெறி**
அனுமதிக் கட்டணம் ரு 250/=
பாடநெறிக் கட்டணம் ரு 3000/= (6 மாதங்கள்)
பரீட்சைக் கட்டணம் ரு 500/=

தகுதியான சான்றிதழ்கள் வழங்கப்படும்.
சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்கள்.
மேலதிக விவரங்களுக்கு
சதா பொன்ஸ் கல்வி நிலையம்
மாலுசந்தி,அல்வாய்.
021 226 3206, 077 309 5176
(c/8618)(6.11)



**விற்பனைக்கு** நல்ல நிலையிலுள்ள நீல நிற Discover 150 மோட்டார் சைக்கிள் NP XH- XXXX தொடர் இலக்கமுடையது. விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 075 208 6051



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

veta
Spoken English
Veta Fluency Diploma

- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
- அச்சடித்த பாடப்புத்தகங்கள்.
- மல்ரிமீடியா ஊடான கற்பித்தல்.
- நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.

வாரநாள், வார இறுதிநாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

**சர்வதேச ஆங்கில பரீட்சைகள்**

City & Guilds A1, A2, B1 B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

**IELTS**
(Duration: 50 hrs with 5 mock exams)
- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.

விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, Tel.:021-222 4403 | M.M.V வீதி, Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, Jet மோட்டோர்ஸ் சந்தி Tel.:021-224 1970 |


# மரண அறிவித்தல்

## இராமநாதன் அருணகிரிநாதன்



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் அருணகிரிநாதன் கடந்த (17.05.20 13) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் -நேசமலர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மலோசனியின் அன்புக் கணவரும், சிந்துஜாவின் அன்புத் தந்தையும், இந்திராணி, தில்லைநாதன், யோகநாதன், பராசக்தி, அருந்ததி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வடிவேல், சரவணபவானந்தன், ரவிக்குமார், வசந்தி, சசிகலா ஆகியோரின் அன்பு மைத் துனரும், சுதாகரன், கலைவாணி, திருக்குமரன், செந்தூரன், சஞ்ஜயன் ஆகியோரின் அன்பு மாமனும், இர ணாவலன், இராகுலவன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (23.05.2013) வியாழக்கிழமை சுவிசில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேல் வில்லா, அளவெட்டி தெற்கு.
077 2465344

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திரேசம்மா யோண்பிள்ளை



இளவாலையைப் பிறப்பிடமாகவும், அலுக்கை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா யோண்பிள்ளை நேற்றுமுன்தினம் (18.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு யோண்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, சிசிலியா, சின்னதம்பி, பொன்னு, றோசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அந்தோனிப்பிள்ளை, வின்சென்ற், யசிந்தா, மரியதாஸ், காலஞ்சென்ற யோசப் மற்றும் யூதாததேயு, பிரான்சிஸ், கிறிஸ்ரி ஆகியோரின் அன்புத் தாயும், ரோகினி, டொறீன், நவரட்ணம், சத்தியகுமாரி, அனுஷா, ஜொய்சி ஆகியோரின் அன்பு மாமியும், பபா, செல்வி, ஷாளினி, லியோன், ஷிரோன், விமலினி, ஜெறோன், துவாரகன், சந்துஜன், டிலுஜன், கிரிஷானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜேம்சன், அனுஷன், றிசான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (23.05.2013) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பபட்டு அளவெட்டி அர்ச் சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியின் பின்னர் அளவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அலுக்கை, அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
(36705)


யாழ் பேருந்து நிலையத்திற்கு வடக்குப் பக்கமாக...

**திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை**




**Wedding Cards Showroom**

**பிறிண்டிங் ஹவுஸ்**

021 221 9929, 077 2200148 (C/9467)
165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## சின்னத்தம்பி பரமநாதன்

*(பிரபல வர்த்தகர், முன்னாள் பங்காளர் அஜந்தாஸ் புடவையகம் யாழ்ப்பாணம்)*



கொக்குவில் கிழக்கு, பூமகள் வாசா, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, 121. புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பரமநாதன் நேற்று (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் (VSS) VS சின்னதம்பி - பூமணி தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ் சென்றவர்களான பிரபல வர்த்தகர் முத்தையா -சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நவமணிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மகேந்திரன் (Modern net உரிமையாளர்), டக்ஷனிகா (Canada) டுஷ்ஷந்தி (London), Dr.ஸகிலா (யாழ். போதனா வைத்தியசாலை), கலைமகள் (Accountant Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசாரங்கன் (Canada) மகேஸ்வரன் (Londa n), லிங்கேசன் (Director Linco Engineering) ஆகியோரின் பாசமிகு மாமனும், அர்க்காயன், அனகாயன், அத்விதா, அம்ருத்தா, பிரிதீவ், சிவகாமி, ரந்தீவ் ஆகியோரின் பாசமிகு பேரனும், வேலாயுதபிள்ளை (London), துரைராஜா (Canada), தியாகராஜா (Canada), சண்முகராஜா (Londan), குணராசா (London), பரம்தில்லைராஜா (Conada- Colombo) மணிமேகலாதேவி (Canada), கலாரஞ்சினிதேவி (London) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

121, புகையிரத நிலையவீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P- 0212225652
(36709) (16.14.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.